ஸங்கர்ஷண மூர்த்தியை, வாஸுதேவ மூர்த்தியைப் போல கல்பிக்கவேண்டும். யதார்த்தமான ஸங்கர்ஷணனை வெளுப்பு நிறமும் நீல வஸ்திரமும் உடையவராகக் கல்பிக்க வேண்டும். கதையின் ஸ்தாநத்தில் உலக்கையும் சக்கர ஸ்தாநத்தில் கலப்பையுமிருக்கவேண்டும். (வெளுப்பு நிறம்)

௪௪. அத வாஸுதேவ த்யாநம்.

வாஸுதேவ: ஸித: ஶாந்த: ஸிதாப்ஜஸ்த:
சதுர்புஜ: |
யோகமூர்த்நோர்த்வமுகஶங்கோ தக்ஷே ஶார்ங்கதர: ஸ்ம்ருத: ||
யாந்யயோஸ்து கரே சக்ரம் தக்ஷிணே ச கதாமிதி ||
(ஶ்வேதவர்ண:)

44 வாஸுதேவ த்யாநம்.

வாஸுதேவ மூர்த்தியானவர், வெளுப்பு நிறமுடையவராவார். மன அமைதி நிலவும் தோற்றமுடையவராவார். தாமரை மலரில் வீற்றிருப்பவராவார். 4 கைகளுடையவராவார். யோகிகளின் தலையைப்போன்ற தலையமைப்பு உடையவராவார். வலது மேல் கையில் ஊர்துவ முகமான சங்கமும், இடது கையில் சார்ங்கமும், மற்ற கைகளில் வலது கையில் சக்கரமும், (இடது கையில்) கதையும் தரிப்பவராவார். (வெளுப்பு நிறம்)

௪௫. அத ப்ரத்யும்ந த்யாநம்.

தக்ஷிணோர்த்வகரே ஶங்கம் ப்ரத்யும்நஸ் ஸம்வஹேத்கரே |
சக்ரஞ்சோர்த்வே ததா வாமே கதாம் ப்ரத்யும்நய: கரே ||௧||
(பீதவர்ண:)

45. ப்ரத்யும்ந த்யாநம்.

வலது பக்கம் மேல் கையில் பத்மமும், வலது கீழ் கையில் சங்கமும், இடது மேல் கையில் சக்கரமும், இடது கீழ் கையில் கதையும் கல்பிக்கவேண்டும். (மஞ்சள் நிறம்)

௪௫. அத அநிருத்த த்யாநம்.

க்ருஷ்ணம் சதுர்புஜம் ப்ரேக்ஷ ஶரம் சாபம் ததோத்தரே ।
கட்கம் கேடயம் வீரமநிருத்தம் ப்ரசக்ஷதே ॥ ௧ ॥

46. அநிருத்த த்யாநம்

அநிருத்தமூர்த்தியானவர், கருப்பு நிறமும், 4 கைகளுமுடையவராவார்.

வலது பக்கம் கைகளில் அம்பு, கத்தி, இடது பக்கம் கைகளில் வில் கேடயங்களை தரித்து வீரபுருஷனாக இருப்பவராவார். என்று கூறப்பட்டிருக்கிறது. (கருப்பு நிறம்)

அத மத்ஸ்யாதிதஶாவதாரமூர்த்தீநாம் த்யாநம்.

(வாஸுதேவ ப்ரணீதே வாதே)

௪௭. தத்ர மத்ஸ்ய த்யாநம்.

வாமே ஶங்கம் கராம் ப்ரேக்ஷ தக்ஷிணே மத்ஸ்யரூபவ
த்யுத: ।
நராங்க்ரி: மத்ஸ்யரூபோ வா மத்ஸ்யரூபீ
ஜநார்தந: ॥ ௧ ॥
(ஶ்வேதவர்ண:) (௧)

47. மத்ஸிய த்யாநம்.

மத்ஸியமூர்த்தியான மஹாவிஷ்ணுவானவர், 2 கைகளுடையவரும், மத்ஸியத்தைப்போன்ற உருவமுடையவரும், மனிதனைப்போன்ற கால்களுடையவரு

மாவார். (உடல் முழுமையும் கால்களுள்பட) மத்ஸ்யத்தைப்போன்றே இருப்பதுமாகும். இடது கையில் சங்கமும், வலது கையில் கதையும் கல்பிக்கவேண்டும். (வெளுப்பு நிறம்) 1

௪௮. அத கூர்ம த்யாநம்.

கூர்மஸ்ய கூர்மவாகார: ஶேஷம் மத்ஸ்யவதாசரேத் ||

(ஸ்வாயம்புவ:) (௨)

48. கூர்ம த்யாநம்.

கூர்ம மூர்த்தியானது, ஆமையைப்போன்ற உருவமுடையதாகும். ஆயுதம் முதலியவைகள் மத்ஸ்ய மூர்த்திக்குக் கூறியதைப்போலவேயாம். (தங்க நிறம்) 2

௪௯. அத வராஹ த்யாநம்

ஶ்யாமம் ஹிங்குலவர்ணம் ச சதுர்பாஹ்வாயுதைர்யுதம் |
நராங்கம் ஸூகராஸ்யம் ச தம்ஷ்ட்ராக்ரேண நீதம்

ஸஹீக்ஷணம் || ௧ ||

ஸ்ரீவராஹ கூர்ம பூர்வஸ்யா ச ஶ்யாமாநநம் பஶ்சாத் ஶுபம் |
ஸதத்ரூபம் ஶ்யாமம் வந்தே வராஹம் ஹ்ருத்ஸ்தித்வம் || ௨ ||

(ஶ்யாமவர்ண:) (௩)

49. வராஹ த்யாநம்.

வராஹ மூர்த்தியானது, தேனைப்போன்று மஞ்சள் நிறமுடையதாகும். 4 கைகளிலும் ஆயுதங்களை தரித்திருப்பதாகும். மனிதனைப்போன்ற உடலும் பன்றியைப் போன்ற முகமுமுடையதாகும். சிறிது பருத்து மிகவும் பயங்கரமான தோற்றமுடையதாகும். அந்த மூர்த்தியின் இடது முழங்கையில் ஸ்ரீதேவியும், கால்களின்

பக்கங்களில் பூதேவியும் அநந்தனுமிருப்பவர்களாவார்கள். இவ்விதமான ரூபத்தை தரித்து புக்திமுக்திகளையளிக்கும் வராஹமூர்த்தியை வணங்குகிறேன். (பச்சை நிறம்) 3

௫௰. அத² ந்ருஸிம்ஹ த்⁴யாநம்.

ஜ்வலத³க்³நிஸமாகாரம் ஸிம்ஹவக்த்ரம் நராக்ருதிம் ।
த³ம்ஷ்ட்ராகராலவத³நம் லோலஜ்ஜிஹ்வாவிபீ⁴ஷணம் ॥ ௧ ॥

வ்ருத்தாஸ்யம் ஜடிலம் க்ரோத⁴ஸம்ரம்ப⁴ம் வீரவக்ஷஸம் ।
அபே⁴த்³யதீக்ஷ்ணநக²ரம் ஊரௌ க்ருத்வா து தா³நவம் ॥ ௨ ॥

தத்³வக்ஷோ தா³ரயந்தம் ச கராப்⁴யாம் நக²ரைர்ப்⁴ருஶம் ।
க³தா³சக்ரத⁴ரம் பா³ஹ்வோ: ந்ருஸிம்ஹம் ப்ரணதோஸ்ம்யஹம் ॥ ௩ ॥

(ஶ்வேதவர்ண:) (௪)

50. நரஸிம்ஹ த்யாநம்.

நரஸிம்ஹமூர்த்தியானவர், ஜ்வலிக்கும் அக்கினியைப் போன்று பிரகாசமான உருவமும், ஸிம்ஹத்தின் முகத்தைப் போன்ற முகமும், மனித உடலும் தெத்திப்பற்களாலே பயங்கரமான முகமும், சுழலும் நாக்கினாலே பயங்கரமான தோற்றமும், வட்டவடிவமான முகமும், சடைகளும், கோபத்தைக் காட்டும் தோற்றமும், ஆலீடஸ்தாந ஸ்திதியும், (ஆலீடம்—வலது முன்காலை நீட்டி இடதுகாலை மடக்கி வைத்துக்கொண்டிருப்பது) விசாலமான மார்பும், பேதிக்கமுடியாத கூர்மையான நகங்களுமுடையவரும், தானவனை (ஹிரண்யகசிபுவை) தனது துடையில் வைத்துக்கொண்டு அவனுடைய மார்பை இரண்டு கை நகங்களாலே கிழிப்பவரும், இரண்டு கைகளில் கதையையும் சக்கரத்

தையும் தரிப்பவருமான பிரபு நரஸிம்ஹ மூர்த்தியை வணங்கவேண்டும். (வெளுப்பு நிறம்) 4

௫௧. அத வாமந த்யாநம்.

கமண்டலீ ச்சத்ரதரோ ஹ்ரஸ்வாங்கோ வாமந: பரிகீர்த்தித: ॥

(ஸ்ரீதத்வநிதி:) (௫)

51. வாமந த்யாநம்.

வாமந மூர்த்தியானவர், இருகைகளிலும் கிண்டியும் குடையும் தரித்திருப்பவராவார் என்று கூறப்பட்டிருக்கின்றது (நீல நிறம்) 5

௫௨. அத பரஶுராம த்யாநம்.

க்ஷத்ராந்தகாரணம் கோரம் ததாநம் பரஶும் கரே ।
ஜாமதக்ந்யஸ்து கர்தவ்ய: ராம: ஶத்ருநிஷூதந: ॥ ௧ ॥

(லக்ஷணார்ணவ:) (௬)

52. பரசுராம த்யாநம்.

ஸகல சத்துருக்களை அழிக்கக்கூடியவரான பரசுராமனை, க்ஷத்திரியர்களின் அழிவுக்குக் காரணமான பயங்கரமான கோடரியை கையில் வைத்துக்கொண்டிருப்பவராகக் கல்பிக்கவேண்டும். (ஸ்வர்ண வர்ணம்) 6

௫௩. அத ஸ்ரீராம த்யாநம்.

ஶ்யாமோ ஹ்ரஸ்வஜநக: ஸிம்ஹஸ்கந்தோ ரதாரணே க்ஷண: ।
புஜௌ ஜாநுவாஹு: கர்தவ்ய: ராமோ பாண தநுர்தர: ॥ ௧ ॥

(ஸ்ரீதத்வநிதி:) (௭)

53. ஸ்ரீராம த்யாநம்.

ஸ்ரீராமன், யௌவநவயதும், அமைதிநிலவும் முகமும், ஸிம்ஹத்தின் தோள்பட்டையைப்போன்ற தோள்பட்டையும், சிவந்த கண்களும், முழங்கால் வரையில் நீண்ட கைகளும், அம்பும், வில்லும் தரித்த கைகளுமுடையவராவார். இந்த மூர்த்தியை இவ்வித லக்ஷணங்களுடன் கல்பிக்கவேண்டும். (பச்சை நிறம்) 7

௫௪. அத பலராமத்யாநம்.

சஷபாத்ரம் ச ஸீரம் ச வாமதக்ஷிணயோ: க்ரமாத் |
கதாமுஸலவஜ்ரம் ச ஹலீ ராம: பயஶ்சவி: ‖ ௧ ‖
(க்ஷீரவர்ண:) (௮)

54. பலராம த்யாநம்.

பலராமன், வெளுப்பு நிறமுடையவராவார். இடது கையிலும் வலது கையிலும் முறையே, மத்யபாத்திரத்தையும், கலப்பையையும் தரிப்பவராவார். கதை, உலக்கை, வஜ்ரம் இவைகளையும் தரித்திருப்பவராவார். (பால் நிறம்)

௫௫. அத புத்தத்யாநம்.

காஷாயவஸ்த்ரஸம்வீத: ஸ்கந்தஸம்ஸக்தசீவர: |
பத்மாஸநஸ்தோ த்விபுஜ: த்யேயோ புத்த:
ப்ரகீர்த்தித: ‖ ௧ ‖
(பாடலவர்ண: ப்ரஸித்த:) (௯)

55 புத்த த்யாநம்.

புத்தமூர்த்தியானவர், காஷாயவஸ்திரத்தை அணிந்துகொண்டு, தோளில் மரவுரியை போட்டுக்கொண்டு, இரண்டு கைகளுடன், பத்மாஸநத்திலிருப்பவராவார். இவ்விதம் த்யாநம் செய்யவேண்டுமென்று கூறப்பட்டிருக்கின்றது. (வெண் சிவப்புநிறம் பிரஸித்தமானது)

௫௬. அத² கல்கி த்⁴யாநம்.

கட்³கோ³த்³யதகர: க்ருத்³த⁴: ஹயாரூடோ⁴ மஹாப³ல: |
ம்லேச்சோ²ச்சே²த³கர: கல்கீ த்³விபு⁴ஜ: ஸர்வஜித்ப்ரபு⁴: ||௧||

(ஶ்வேதவர்ண:) (ம)

56. கல்கி த்யாநம்.

மிலேச்சர்களை (மிலேச்ச, கிராத, சபர புலிந்தாதி ஜாதிகள், பாபகரமான காரியங்களைச் செய்பவர்கள்) அழிக்கக்கூடியவரான கல்கியானவர், 2 கைகளுடையவராவார். மஹாபலசாலியாவார், சோபமுடையவராவார். கையில் கத்தியை ஏந்தி குதிரைமீதிருப்பவராவார் என்று கூறப்பட்டிருக்கிறது. (வெளுப்பு நிறம்) 10

[த³ஶாவதாரமூர்த்தீநாம் மத்⁴யே
பு³த்³த⁴ஸ்தா²நே க்ருஷ்ண இதி த்³ருஶ்யதே.]

௫௭. அத² க்ருஷ்ண த்⁴யாநம்.

(வாஸ்தே)

ஶங்க²சக்ரத⁴ர: ஶ்யாமோ த்³விபு⁴ஜ: க்ருஷ்ணஸம்ஜ்ஞக: ||

(ஶ்யாமவர்ண:)

(வேறு நூலில், தசாவதார மூர்த்திகளின் நடுவில், புத்தர் என்னுமிடத்தில் கிருஷ்ணன் என்று காணப்படுகிறது)

57. கிருஷ்ண த்யாநம்

கிருஷ்ணன் என்பவர், கருப்புநிறமும், இரண்டுகைகளுமுடையவராவார். கைகளில் சங்கம், சக்கரங்களை தரிப்பவராவார். (நீலநிறம்)

𑌮𑌤𑍍𑌸𑍍𑌯𑌾𑌦𑍍𑌯𑌵𑌤𑌾𑌰𑌮𑍂𑌰𑍍𑌤𑍀𑌨𑌾𑌂 𑌵𑌰𑍍𑌣𑌾𑌃.

(𑌪𑌾𑌦𑍍𑌮𑍇)

𑌮𑌤𑍍𑌸𑍍𑌯𑌃 𑌸𑍍𑌫𑌟𑌿𑌕𑌸𑌂𑌕𑌾𑌶𑌃 𑌕𑍂𑌰𑍍𑌮𑌃 𑌕𑌾𑌞𑍍𑌚𑌨𑌸𑌪𑍍𑌰𑌭𑌃 ।
𑌵𑌰𑌾𑌹𑌃 𑌶𑍍𑌯𑌾𑌮𑌲𑌨𑌿𑌭𑌃 𑌧𑌵𑌲𑌾𑌕𑍃𑌤𑌿𑌰𑍇𑌵 𑌵𑌾 ॥ ௧ ॥

𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌸𑍍𑌸𑍍𑌵𑌰𑍍𑌣𑌵𑌰𑍍𑌣𑌾𑌭𑌃 𑌪𑍍𑌰𑌹𑍍𑌲𑌾𑌦𑌃 𑌕𑌾𑌞𑍍𑌚𑌨𑌪𑍍𑌰𑌭𑌃 ।
𑌵𑌾𑌮𑌨𑌃 𑌶𑍍𑌯𑌾𑌮𑌲𑌨𑌿𑌭𑌃 𑌕𑌾𑌲𑌵𑌰𑍍𑌣𑍋 𑌮𑌹𑌾𑌬𑌲𑌿𑌃 ॥ ௨ ॥

𑌜𑌾𑌮𑌦𑌗𑍍𑌨𑍍𑌯𑌸𑍍𑌸𑍁𑌵𑌰𑍍𑌣𑌾𑌭𑌃 𑌰𑌾𑌘𑌵𑌃 𑌶𑍍𑌯𑌾𑌮𑌲𑌾𑌕𑍃𑌤𑌿𑌃 ।
𑌭𑌰𑌤𑌃 𑌶𑍍𑌯𑌾𑌮𑌲𑌃 𑌪𑍍𑌰𑍋𑌕𑍍𑌤𑌃 𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑌣𑌃 𑌕𑌨𑌕𑌪𑍍𑌰𑌭𑌃 ॥ ௩ ॥

𑌶𑌤𑍍𑌰𑍁𑌘𑍍𑌨𑍋 𑌰𑌕𑍍𑌤𑌵𑌰𑍍𑌣𑌾𑌭𑍋 𑌸𑍀𑌤𑌾 𑌹𑍇𑌮𑌨𑌿𑌭𑌾
𑌕𑍃𑌤𑌿𑌃 ।
𑌮𑌾𑌣𑍍𑌡𑌵𑍀 𑌰𑌕𑍍𑌤𑌵𑌰𑍍𑌣𑌾𑌭𑌾 𑌚𑍋𑌰𑍍𑌮𑌿𑌲𑌾 𑌶𑍍𑌯𑌾𑌮𑌲𑌾𑌕𑍃𑌤𑌿𑌃 ॥ ௪ ॥

𑌶𑍍𑌰𑍁𑌤𑌕𑍀𑌰𑍍𑌤𑌿𑌸𑍍𑌸𑌿𑌤𑌾𑌙𑍍𑌗𑍀 𑌸𑍍𑌯𑌾𑌤𑍍 𑌹𑌨𑍁𑌮𑌾𑌨𑍍𑌤𑍁
𑌕𑌨𑌕𑌪𑍍𑌰𑌭𑌃 ।
𑌅𑌙𑍍𑌗𑌦𑍋 𑌰𑌕𑍍𑌤𑌵𑌰𑍍𑌣𑌾𑌭𑌃 𑌸𑍁𑌗𑍍𑌰𑍀𑌵𑍋 𑌹𑍇𑌮𑌵𑌿𑌗𑍍𑌰𑌹𑌃 ॥

𑌨𑍀𑌲𑍋𑌤𑍍𑌪𑌲𑌨𑌿𑌭𑌃 𑌪𑍍𑌰𑍋𑌕𑍍𑌤𑌃 𑌜𑌾𑌮𑍍𑌬𑌵𑌾𑌨𑍍𑌤𑍁 𑌕𑌨𑌕𑌪𑍍𑌰𑌭𑌃 ।
𑌗𑍁𑌹𑌸𑍍𑌤𑍁 𑌤𑌿𑌲𑌵𑌰𑍍𑌣𑌾𑌭𑌃 𑌕𑌾𑌲𑌵𑌰𑍍𑌣𑍋 𑌵𑌿𑌭𑍀𑌷𑌣𑌃 ॥

𑌬𑌲𑌃 𑌕𑍍𑌷𑍀𑌰𑌨𑌿𑌭𑌶𑍍𑌚𑍈𑌵 𑌰𑌕𑍍𑌤𑌵𑌰𑍍𑌣𑌾 𑌚 𑌰𑍇𑌵𑌤𑍀 ।
𑌦𑍇𑌵𑌶𑍍𑌶𑍍𑌯𑌾𑌮𑍋 𑌭𑌵𑍇𑌤𑍍𑌕𑍃𑌷𑍍𑌣𑌃 𑌰𑍁𑌕𑍍𑌮𑌿𑌣𑍀 𑌕𑌨𑌕𑌪𑍍𑌰𑌭𑌾 ॥ ௭ ॥

𑌕𑌲𑍍𑌕𑍀 𑌶𑍍𑌵𑍇𑌤𑌨𑌿𑌭𑌶𑍍𑌚𑍈𑌵 𑌵𑌰𑍍𑌣𑌾 𑌏𑌷𑌾𑌂 𑌪𑍍𑌰𑌕𑍀𑌰𑍍𑌤𑌿𑌤𑌾𑌃 ।

மத்ஸியாதி அவதார மூர்த்திகளின் த்யாநங்கள்.

(பாத்மத்தில்)

மத்ஸியமூர்த்தி ஸ்படிக வர்ணம்.

கூர்மமூர்த்தி ஸ்வர்ண வர்ணம்.
வராஹமூர்த்தி நீலவர்ணம் அல்லது வெளுப்பு நிறம்.
நரஸிம்ஹமூர்த்தி சந்திரனைப்போன்ற நிறம்.
பிரஹ்லாதன் தங்கநிறம்.
வாமநமூர்த்தி நீலம் அல்லது கருப்பு நிறம்.
பரசுராமன் ஸுவர்ண வர்ணம்.
ராகவன் பச்சை நிறம்.
பரதன் பச்சை நிறம்.
லக்ஷ்மணன் தங்கநிறம்.
சத்துருக்கினன் சிவப்பு நிறம்.
ஸீதாதேவி ஸுவர்ணவர்ணம்.
மாண்டவீ சிவப்பு நிறம்.
ஊர்மிளா பச்சை (நீல) நிறம்.
சுருதகீர்த்தி வெளுப்பு நிறம்.
ஹநுமான் கநக வர்ணம்.
அங்கதன் சிவப்பு நிறம்.
ஸுக்கிரீவன் ஸுவர்ணம்போன்ற மஞ்சள் நிறம்.
ஜாம்பவான் நீலோத்பலத்தின் நிறம்.
குஹன் கநக வர்ணம்.
விபீஷணன் எள்ளு நிறம் அல்லது கருப்பு நிறம்.
பலராமன் பால் நிறம்.
ரேவதீதேவி சிவப்பு நிறம்.
கிருஷ்ணன் மேகம்போன்ற நீல நிறம்.
ருக்மிணீதேவி கநகவர்ணம்.
கல்கிமூர்த்தி வெளுப்பு நிறம்.

இவ்விதமாக இவர்களுடைய நிறங்கள் கூறப்பட்டிருக்கின்றன.

௫௮. அத² லக்ஷ்மீநாராயண த்⁴யாநம்.

(ஹயஶீர்ஷே)

நாராயணஶ்சதுர்பா³ஹு: ஶங்க²சக்ரக³தோ³த்³த⁴ர: ।

ஊக்ஷிணே து மஹா வஹ்நீ நீருஜீ உவுத ஸஹிஹ: ‖ க ‖

வாமே ஸ்ரீ: ஸுகீஹஸ்தா வாஷூாவஷ்கராவசெ ।

(ஸூுவணா:)

58. லக்ஷ்மீநாராயண த்யாநம்.

(பட்டபாஸ்கரீயத்தில்)

ஸ்ரீநாராயணன், 4 கைகளுடையவரும், நீருண்ட மேகம் போன்ற நீலநிறமுடையவரும், மேல் கைகளில் சங்கம், சக்கரமும், கீழ்கைகளில் கதை, பத்மமும் தரிப்பவருமாவார். அவருக்கு இடதுபக்கத்தில் திருடகாத்திரமுடைய ஸ்ரீதேவி யானவள், இடது கையில் வீணையும் வலது கையில் தாமரை மலரும் தரித்திருப்பவளாவாள்.

ருகூ. அய ஸூயநாராயண யூாநு.

(தூிரஆகவெ)

யெூயஸ்ஸா ஸவித்ரு மஂலவஷ்யவதீ

நாராயண: ஸாஸிஜாஸநஸஹிஷ்ட: ।

கெயூரவாநு உகரகுஂலவாநு கிரீடீ

ஹாரீ ஹிரண்மயவவு: யூதஶஂவசக்ர: ‖ க ‖

(ஸூணுவணா:)

59. ஸூரியநாராயண த்யாநம்.

(திரியுசாகல்பத்தில்)

ஸூரியமண்டல மத்தியிலிருக்கும் நாராயணன், பத்மாஸநத்தில் வீற்றிருப்பவரும், கேயூரம், மகரகுண்டலம் கிரீடம், ஹாரங்களை தரித்திருப்பவரும், ஸுவர்ண வர்ண மான சரீரத்தையுடையவரும், சங்கம், சக்கரங்களை தரித்திருப்பவருமாவார். எப்பொழுதும் இவ்விதமாக இருக்கும் ஸூரியநாராயணனை த்யாநம் செய்யவேண்டும்.

௫௯. அத அஷ்டமுககண்டபேருண்ட
ந்ருஸிம்ஹ த்யானம்.
(அதர்வணரஹஸ்யே மந்த்ரஸாரே)

வந்தேஹம் க்ரூரகோரப்ரவரதனு மஹா
கண்டபேருண்டஸிம்ஹ
வ்யாக்ராஶ்வக்ரோடஶாகாம்ருககருடகராட்
ருக்ஷகாத்யஷ்டவக்த்ரம் ।
த்வாத்ரிம்ஶத்கோடிபாஹும் ஹலமுஸலகதா
ஶங்கசக்ராதிஹேதீ:
பிப்ராணம் தீக்ஷ்ணதம்ஷ்ட்ரம் ஶரபககஜாந்
பக்ஷயந்தம் ந்ருஸிம்ஹம் ॥ ௧ ॥
(ஶரீரே ரக்தவர்ண: முகேஷு தத்தத்வர்ண:)

60. அஷ்டமுககண்டபேருண்ட ந்ருஸிம்ஹ த்யாநம்.
(அதர்வண ரஹஸியம்—மந்திரஸாரத்தில்)

அதிபயங்கர வடிவமும், மிகுந்த வலிமையும், மஹாகண்டபேருண்டம் 1, ஸிம்ஹம் 2, வேங்கை 3, குதிரை 4, பன்றி 5, குரங்கு 6, கருடன் 7, கரடி 8 இவைகளின் முகங்களைப்போன்ற 8 விதமான முகங்களையுடையவரும், முப்பத்திரண்டு கோடி (320000000) கைகளையுடையவரும், கலப்பை, உலக்கை, கதை, சங்கம், சக்கரம் முதலிய ஆயுதங்களை தரித்திருப்பவரும், பயங்கரமான தெத்திப்பற்களையுடையவரும், சரபம், பக்ஷி, யானைகளை புஜிப்பவருமான கண்டபேருண்ட ந்ருஸிம்ஹமூர்த்தியை நமஸ்கரிக்கின்றேன். (சரீரத்தில் சிவப்பு நிறம் முகங்களில் அவையவைகளின் நிறம்)

அத ப்ருகாராக்ஷஸேண த்யானம்.
(மந்த்ரஸாரே)

കല്യാണാസനിവിഷ്ടമൂർത്തിമഹാമതഹാർജ്ജനീകാസനേത്ര
ത്ര്യയം
കൊമ്പം വജ്ര ഖരാനതാംബനവസം ദാഷി
വിജിഹ്വാനനൗ ।
ദീക്ഷാം ഭാരതഖഷ്ടിഭാതിരുമാരണം ചാഷാകനം
ഹീഷണം
ധ്യായെത്സൂര്യഭാഞ്ജകംസരഹമൃക ഹെരംബ
ഖിംഹംഖദാ ॥ ൧ ॥

ഖഷ്ടാവൈസ്യാ വഹ്നിദൃഷ്ടിഹിരുദാരദരനവൈാ
വിദ്യാദാജ്ജ്വാത്രഖിംഹൊ
ഷീരാഹണ ചണവവക്ഷണ മൃദയജംരഗാ
മൃഷ്ടകാഞ്ച്യഷ്ടദാഗുാ ।
ഉഃരൗചണ രാജ്കായണ വശ്യഗന്യമരി
ഗുംബഹെരാംബരർവഃ
വായാദഖ്ഗാന്ധ ഖവക്രാഖരിരിമസരമാദ്യാഗ്ര
സത്രൗന്ധ ഭൃവിധ്യന്ധ ।൨ ॥

മത്സ്യാജ്ജ്വാ മൃതാത്ഥ ദിഷദഖാരവനോ
നോജബഹ്വഖ വാന
വ്യാത്ഥാഖ്യം ഢായരുഗാഞ്ഞവദജിതദമാ
സാരമാജ്ഞം ഖാഹൗഷൗ (ഹീരം) ।
ബാമാമംചാവരാലാ ഖാരകചചരണം
ഢായരുഗൊദ്യഞവാഗ്ര
ഭൃവ്വ(ഷ്വ)ഞാരാതിദിമം രഖിസിദമന
ശ്രീകൃഷ്ണംവന്ദേവക്ഷൗ ॥ ൩ ॥

14 കംഹൊജം വീതിഹൊത്രാംകാസഖിസിവദമാവാസ
കാഞ്ഞാഖിസക്തി

ஶாஞும் வகூும் கஃஶாஶொலதஹஜயஃஹு
ஷெஷிஷொஃவெஃஊஶஃவாஹு ।
ஹெஶணஹஞும் த்ரிஶஃஞும் ஹுகூஊவிஃஹாவாஶ
ஶீஷஃம் விஹாகஃ
வஜ்ரம் கஊொஇகீஃசாவஹுதிஙயுஊஃஹுஃ
ஷஹுயாஹம் கஶாஹைஃ ॥ ௨ ॥
(ஶஶீரெ ரக்தவணஃ ஊஃவெஷஃ தத்தவணஃஃ)

மற்றொருவிதமான த்யானம்.

(மந்திரஸாரத்தில்)

கல்பாந்த காலத்திலுண்டாகும் இடியிலிருந்து கிளம்பிய நெருப்புப் பொறியைப்போன்ற 3 கண்களையுடையவரும், பன்றி 1, வஜ்ரத்திற்கு ஸமானமான மூக்கையும் நகங்களையுமுடைய கருடன் 2, புலி 3, தம்ஷ்டிரீ (தெத்திப்பற்களையுடைய சிங்கம்) 4, ஸர்பம் 5, கரடி 6, குரங்கு 7, குதிரை 8, இவைகளின் முகங்களைப்போன்ற 8 முகங்களையுடையவரும், தாபங்களைப் போக்குகின்றவரும், பயங்கரமானவரும், ருத்திரனின் கொழுப்புக்கு அந்தகனாக இருப்பவரும், சரபத்தை எடுத்துச் செல்லுகிறவருமான பேருண்ட நரஸிம்ஹமூர்த்தியை, எப்பொழுதும் தியானம் செய்கின்றேன். (1)

மின்னலைப்போல் பிரகாசமான ஸிம்ஹரூபமுடையவரான (கண்ட பேருண்ட நரஸிம்ஹமூர்த்தியானவர்) 8 விதமான முகங்களையுடையவராவார். நெருப்புபோன்ற கண்களையுடையவராவார். பிளந்து கிழிக்கும் சக்தியுள்ள நகங்களை உடையவராவார். இவருடைய சிறகுகள் இரண்டும் வைரத்தைப்போன்ற பிரகாசமுள்ளவைகளாம். 8 விதமான சரீரகாந்திகளையுடைய அஷ்டதுர்கை, ஹிருதய மத்தியத்திலிருப்பவளாவாள். ருத்திரனும் காலனும் தொடைகளாவார்கள். பக்ஷி, மிருகம், மனிதன், சிங்கம்,

(மூதலியவைகளின்) முகங்களுடனும் குணங்களுடனும் கூடிய கண்டபேருண்ட ஸ்வரூபத்தையுடையவரும், சக்ராயுதத்தை தரித்தவரும், சரபம் முதலிய உக்கிரமான சத்துருக்களை எதிர்த்து அடிப்பவருமான ஹரியானவர், இங்கு நம்மைக் காப்பாற்றுவாராக. (3)

ஹஸ்தாஞ்ஜலியினாலே, (கைகளால்) பிடிக்கப்பட்டிருக்கும் தனது சத்துருவான அஸுரனுடைய மார்பிலிருந்து வெகுவாக வெளிப்படும் ரக்தத்தைப் பானம் செய்வதற்காக வாயைத் திறந்துகொண்டிருப்பவரும், இரு கைகளாலே பிடிக்கப்பட்டு நகங்களாலே கிழிக்கப்பட்டிருக்கும் மஹா சரபத்தின் அங்கங்களையுடையவரும், அழகிய ஆபரணங்களை யணிந்திருப்பவரும், (அதி பயங்கரமான ஸ்வரூபத்தை யுடையவரும்,) இரு கைகளாலே பிடிக்கப்பட்ட அஸுரனுடைய தலைமயிரை தனது காலில் (சுற்றிக்கொண்டிருப்பவரும்) இரு கைகளில் பிரகாசிக்கும் நகங்களின் நுனிகளாலே சத்துருவின் தேஹத்தைக் கிழிப்பவரும், ஸூரியன், சந்திரன், அக்கினி ஆகிய மூன்று கண்களையுடையவரும், வஜ்ரம்போல் பிரகாசமாகவும் உறுதியாகவுமிருக்கும் சிறகுகளையுடையவரும், தாமரைமலர் 1, அக்கினி 2, அங்குசம் 3, அம்பு 4, மஹாபாசம் 5, குந்தாயுதம் 6, கத்தி 7, சக்தியாயுதம் 8, (சத்துருவின்) குடல் 9, சக்கரம் 10, கோடரி 11, கர்வமுடைய சத்துருவின் இரு கைகளின் பாகங்கள் 12, சங்கம் 13, ஹிரண்யனின் குடல் 14, முச்சூலம் 15, பலகை 16, மஹாபாசம் 17, தலை 18, பினாகம் (பரமேசுவரனுடைய வில்) 19, வஜ்ராயுதம் 20, கௌமோதகி (கதை) 21, மிக்க வலிமையுள்ள உலக்கை 22, இவைகளை கைகளில் தரிப்பவருமான (கண்டபேருண்ட நிருஸிம்ஹமூர்த்தியானவர், நம்மைக் காப்பாற்றுவாராக) (4)

(சரீரத்தில் சிவப்பு நிறம், முகங்களில் அந்த அந்த நிறம்)

௬௦ அத² பஞ்சவக்த்ரந்ருஸிம்ஹ த்⁴யாநம்.

(மந்த்ரஸாரே)

பஞ்சவக்த்ரம் மஹாபீ⁴மம் காலாநலஸமப்ரப⁴ம் ।
முண்ட³மாலாத⁴ரம் ரௌத்³ரம் கண்ட²ஹாரேண ஶோபி⁴தம் ॥

நாக³யஜ்ஞோபவீதாட்⁴யம் பஞ்சாநந ஸுஶோபி⁴தம் ।
சந்த்³ரமௌலிம் நீலகண்ட²ம் ப்ரதிவக்த்ரம் த்ரிநேத்ரகம் ॥ ௨ ॥

ஹஸ்தைஜை: பரிக⁴ஸங்காஶை: த³ஶபி⁴ஶ்சாபி ஶோபி⁴தம் ।
அக்ஷஸூத்ரம் க³தா³ம் பத்³மம் ஶங்க²ம் கோ³க்ஷீரஸந்நிப⁴ம் ॥

த⁴நுஶ்ச முஸலம் சைவ ததா² சக்ரம் மஹோஜ்ஜ்வலம் ।
வஜ்ரம் ச ஶூலபாஶௌ ச ந்ருஸிம்ஹம் ருத்³ர
ரூபிணம் ॥ ௩ ॥

இந்த்³ரகோ³பாப⁴நீலாப⁴ம் சந்த்³ராப⁴ம் ஸ்வர்ணஸந்நிப⁴ம் ।
பூர்வாதி³ சோத்தராந்தாநாம் ஸ்ப²டிகாப⁴ம்
ஸர்வகார்யகம் ॥ ௫ ॥

விதா⁴நம் ஸர்வஜக³தாமாதா⁴ரம் ஶிரஸி ந்ருஸிம்ஹகே ॥

(ஶீர்ஷே ரக்தவர்ண:, ஶேஷா வர்ணாநாம்
பஞ்சகம்.)

61. பஞ்சவக்திர நரஸிம்ஹ த்யாநம்.

(மந்திர ஸாரத்தில்)

ஹே பார்வதி! 5 முகங்களையுடையவரும், அதிபயங்கரமானவரும், பிரளயகாலாக்கினியைப்போன்ற சரீர காந்தியையுடையவரும், முண்ட மாலையை தரிப்பவரும், பயங்கரமானவரும், கண்டஹாரத்துடன் கூடியவரும், ஸர்ப யஞ்ஞோபவீதத்துடன் கூடியவரும், 5 முகங்களுடன்

சோபிப்பவரும், சிரஸ்ஸில் சந்திரனை அணிந்திருப்பவரும், நீலமான கண்டத்தையுடையவரும், ஒவ்வொரு முகத்திலும் 3 கண்களுடையவரும், கோட்டைக் கதவின் தாப்பாளை போன்ற 10 கைகளையுடையவரும், ஜபமாலை 1, கதை 2, பத்மம் 3, சங்கம் 4, வில் 5, உலக்கை 6, அதிக சோபையுடன் கூடிய சக்கரம் 7, கத்தி 8, சூலம் 9, பாசம் 10, இவைகளை தரிப்பவரும், ருத்திரரூபியாக இருப்பவரும், பட்டுப் பூச்சியின் நிறம், நீல நிறம், சந்திரனைப்போன்ற (வெளுப்பு) நிறம், ஸுவர்ண வர்ணம். ஆகிய நிறங்களுடன் கூடியவைகளும், கிழக்கு முதல் வடக்கு ஈறான திக்குகளிலிருப்பனவைகளுமான 4 முகங்களையும் ஸகல வர்ணங்களுடன்கூடிய ஐந்தாவதான ஊர்த்துவ முகத்தையுமுடையவரும், ஸகல ஜகத்திற்கும் ஆதார பூதருமான நிருஸிம்ஹமூர்த்தியை (நமஸ்கரிக்கின்றேன்) (சரீரத்தில் சிவப்பு நிறம். முகங்களில் 5 விதமான நிறங்கள்)

௬௨. அத ப்ரதாபராம த்யாநம்.

(மந்த்ரஸாரே)

ஶோணாப: ஶங்கம் த்ரிஶூலம் ஶரஸஹிதகலதநும் ச
பாணம் க்ருபாணம்

ஶங்கம் வஜ்ரம் க்ருபாணம் ஹலமுஸலகதா
பிண்டிபாலம் ச பாஶம் ।

உத்யத்ஜ்வாலம் ச ஶக்திம் ஹஸ்தைர்தததம் பிப்ரதம்
ஶார்ங்கதந்வம்

வந்தே ராமம் த்ரிநேத்ரம் ஶஶதரஶிவகாத்ரம்
உதயதேகம் ப்ரதாபை: ॥ ௧ ॥
(ஶார்ங்கதந்வா:)

62. பிரதாப ராம த்யாநம்.

(மந்திரஸாரத்தில்)

கைகளில், சங்கம் 1, முச்சூலம் 2, உடுக்கை 3, கத்தி 4 வில் 5, தண்டம் 6, பாணம் 7, கோடரி 8, சங்கம் 9, சக்கரம் 10, கத்தி 11, சலப்பை 12, உலக்கை 13, கதை 14 பிண்டி 15, பாலம் 16, பாசம் 17, முஷ்டியுடன் தூக்கிய கை 18, அபயம் 19, வரதம் 20, இவைகளை தரித்திருப்பவரும், வெளுப்பான சரீரகாந்தியையுடையவரும், 3 கண்களையுடையவரும், பிரதாபத்தினாலே, தேவர்களின் பகைவர்களை அழிப்பவருமான ஸ்ரீ ராமசந்திரனை வணங்குகின்றேன். (வெளுப்பு நிறம்)

௬௩. 𑌅𑌥 𑌸𑌪𑌰𑌿𑌵𑌾𑌰 𑌪𑌟𑍍𑌟𑌾𑌭𑌿𑌰𑌾𑌮𑌧𑍍𑌯𑌾𑌨𑌂.

(𑌰𑌾𑌮𑌰𑌕𑍍𑌷𑌾𑌸𑍍𑌤𑍋𑌤𑍍𑌰𑍇)

𑌵𑌾𑌮𑍇 𑌭𑍂𑌮𑌿𑌸𑍁𑌤𑌾 𑌪𑍁𑌰𑌶𑍍𑌚 𑌹𑌨𑍁𑌮𑌾𑌨𑍍
𑌪𑌶𑍍𑌚𑌾𑌤𑍍 𑌸𑍁𑌮𑌿𑌤𑍍𑌰𑌾𑌸𑍁𑌤𑌃
𑌶𑌤𑍍𑌰𑍁𑌘𑍍𑌨𑌃 𑌭𑌰𑌤𑌶𑍍𑌚 𑌪𑌾𑌰𑍍𑌶𑍍𑌵𑌦𑌲𑌯𑍋𑌃
𑌵𑌾𑌯𑍍𑌵𑌾𑌦𑌿𑌕𑍋𑌣𑍇𑌷𑍁 𑌚 ।
𑌸𑍁𑌗𑍍𑌰𑍀𑌵𑌶𑍍𑌚 𑌵𑌿𑌭𑍀𑌷𑌣𑌶𑍍𑌚 𑌯𑍁𑌵𑌰𑌾𑌟𑍍 𑌤𑌾𑌰𑌾𑌸𑍁𑌤𑍋
𑌜𑌾𑌮𑍍𑌬𑌵𑌾𑌨𑍍
𑌮𑌧𑍍𑌯𑍇 𑌨𑍀𑌲𑌸𑌰𑍋𑌜𑌕𑍋𑌮𑌲𑌰𑍁𑌚𑌿𑌂 𑌰𑌾𑌮𑌂 𑌭𑌜𑍇
𑌶𑍍𑌯𑌾𑌮𑌲𑌮𑍍 ॥ ௧ ॥

(𑌨𑍀𑌲𑌵𑌰𑍍𑌣𑌃)

63. பரிவாரங்களுடன் பட்டாபிராம த்யாநம்.

இடது பக்கத்தில் ஸீதாதேவி, முன் பக்கத்தில் ஹநுமான், பின் பக்கத்தில் லக்ஷ்மணன், இரு பக்கங்களிலும் பரதன், சத்துருக்கினன், வாயுதிக்கு முதலிய கோணங்களில், ஸுக்கிரீவன், விபீஷணன், யுவராஜாவான அங்கதன், ஜாம்பவான், (இவ்விதமாக இவர்கள் சுற்றிலுமிருக்க இவர்களின்) மத்தியில், நீலோத்பலம் போன்று

நீல நிறமாக வீற்றிருக்கும் ஸ்ரீராமனை தியாநம் செய்கின்றேன். *(நீல நிறம்)*

௬௪. 𑌅𑌥 𑌅𑌨𑌨𑍍𑌤𑌮𑍂𑌰𑍍𑌤𑌿 𑌧𑍍𑌯𑌾𑌨𑌮𑍍.

(𑌭𑌵𑌿𑌷𑍍𑌯𑍋𑌤𑍍𑌤𑌰𑍇 𑌅𑌨𑌨𑍍𑌤𑌕𑌲𑍍𑌪𑍇)

𑌨𑌵𑌾𑌮𑍍𑌰𑌪𑌲𑍍𑌲𑌵𑌾𑌭𑌾𑌸𑌂 𑌪𑌿𑌙𑍍𑌗𑌭𑍍𑌰𑍂𑌶𑍍𑌮𑌶𑍍𑌰𑍁𑌲𑍋𑌚𑌨𑌮𑍍 ।
𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑍋𑌰𑍍𑌧𑍍𑌵𑌕𑌰𑍇 𑌪𑌦𑍍𑌮𑌂 𑌶𑌙𑍍𑌖𑌂 𑌤𑌸𑍍𑌯𑌾𑌪𑍍𑌯𑌧𑌃 𑌕𑌰𑍇 ॥
𑌚𑌕𑍍𑌰𑌮𑍂𑌰𑍍𑌧𑍍𑌵𑌕𑌰𑍇 𑌵𑌾𑌮𑍇 𑌗𑌦𑌾𑌂 𑌤𑌸𑍍𑌯𑌾𑌪𑍍𑌯𑌧𑌃 𑌕𑌰𑍇 ।
𑌬𑌿𑌭𑍍𑌰𑌤𑌂 𑌪𑍁𑌣𑍍𑌡𑌰𑍀𑌕𑌾𑌕𑍍𑌷𑌂 𑌫𑌣𑌾𑌸𑌪𑍍𑌤𑌾𑌞𑍍𑌚𑌿𑌤𑌂 𑌭𑌜𑍇 ॥

(𑌗𑍋𑌮𑍂𑌤𑍍𑌰𑌵𑌰𑍍𑌣𑌃)

64. அநந்தமூர்த்தி த்யாநம்.

(பவிஷ்யோத்தரம் அநந்தகல்பத்தில்)

புதிய மாந்தளிரைப்போன்ற நிறமுடையவரும், பொன்னிறமான புருவம், மீசை, கண் இவைகளையுடையவரும், வலது பக்கம் மேல் கையில் பத்மமும், அதன் கீழ் கையில் சங்கமும், இடது பக்கம் மேல் கையில் சக்கரமும், அதன் கீழ் கையில் கதையும் தரிப்பவரும், வெண்தாமரை போன்ற கண்களையுடையவரும், 7 படங்களுடன் கூடியவருமான *(அநந்தமூர்த்தியை)* பஜிக்கின்றேன். (கோமூத்திர வர்ணம்)

௬௫. 𑌅𑌥 𑌗𑍋𑌪𑌾𑌲𑌕𑍃𑌷𑍍𑌣 𑌧𑍍𑌯𑌾𑌨𑌮𑍍.

(𑌸𑌾𑌮𑌵𑍇𑌦𑍇)

𑌨𑍌𑌮𑍀𑌡𑍍𑌯 𑌤𑍇𑌽𑌭𑍍𑌰𑌵𑌪𑍁𑌷𑍇 𑌤𑌡𑌿𑌦𑌮𑍍𑌬𑌰𑌾𑌯
𑌗𑍁𑌞𑍍𑌜𑌾𑌵𑌤𑌂𑌸𑌪𑌰𑌿𑌪𑌿𑌚𑍍𑌛𑌲𑌸𑌨𑍍𑌮𑍁𑌖𑌾𑌯 ।
𑌵𑌨𑍍𑌯𑌸𑍍𑌰𑌜𑍇 𑌕𑌵𑌲𑌵𑍇𑌤𑍍𑌰𑌵𑌿𑌷𑌾𑌣𑌵𑍇𑌣𑍁
𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑌶𑍍𑌰𑌿𑌯𑍇 𑌮𑍃𑌦𑍁𑌪𑌦𑍇 𑌪𑌶𑍁𑌪𑌾𑌙𑍍𑌗𑌜𑌾𑌯 ॥ ௧ ॥

(𑌨𑍀𑌲𑌵𑌰𑍍𑌣𑌃)

65. கோபாலகிருஷ்ண த்யாநம்.

(பாகவதத்தில்)

நமஸ்கரிக்கத் தக்கவனான ஹே கிருஷ்ணா! நீருண்ட மேகத்தைப்போல நீலவர்ணமான திருமேனியையுடையவனும், மின்னலைப் போன்ற நிறமுடைய ஆடையையணிந்திருப்பவனும், குன்றி மணிமாலை, மயில் தோகைகளை சிரஸ்ஸிலணிந்திருப்பதனாலே அழகாக பிரகாசிக்கும் முகத்தையுடையவனும், காட்டுப்பூ மாலையையணிந்திருப்பவனும், அன்னகவளம், பிரம்பு, மாட்டின் கொம்பு, புல்லாங்குழல் இவைகளை தரித்து பிரகாசிப்பவனும், மிருதுவான பாதங்களையுடையவனுமான, கோபால புத்திரனான உன்னை நமஸ்கரிக்கின்றேன். (நீல நிறம்)

௬௬. அத ஸந்தாநகோபால த்யாநம்.

(பாஞ்சராத்ரே)

பிபந்தம் ச ஸ்தநம் மாது: முகம் ஸம்வீக்ஷ்ய
ஸஸ்மிதம் ।
அங்குல்யக்ரை: ஸ்தநம் சாந்யம் ப்ரம்ருஶந்தம் ச
முஹுர்முஹு: ।
யஶோதாங்கஸ்திதம் பாலம் த்யாயேச்சாருதநும்
ஸதா ॥ ௬ ॥
(நீலவர்ண:)

66. ஸந்தாந கோபால த்யாநம்.

(பாஞ்சராத்ரத்தில்)

யசோதாதேவியின் மடியிலிருப்பவரும், தாயின் முலைப்பாலைக் குடித்துக்கொண்டிருப்பவரும், அவளுடைய முகத்தைப்பார்த்துச் சிரித்துக்கொண்டிருப்பவரும், மற்றொரு ஸ்தநத்தை நுனிவிரல்களினாலே அடிக்கடி

தொட்டுப் பார்த்துக்கொண்டிருப்பவருமான கோபாலனை, புத்திரபாக்கியத்தைக் கொடுப்பவனாக எப்பொழுதும் தியானம் செய்யவேண்டும். (நீல வர்ணம்)

௬௬. ஶ்ரீ ஸந்தாநகோபால த்யாநம்.

(பாஞ்சராத்ரே)

ரக்தவர்ணோ தஶபுஜ: ஸர்வாபரணபூஷித: ।
ஶங்கசக்ரகதாபத்மபாஶாங்குஶஶராஸநாந் ॥ ௧ ॥

இக்ஷுகோதண்டபுஷ்பாஸ்த்ரம் வாதயந் வேணுமாதராத் ।
ஷோடஶச்சதபத்மஸ்தஷட்கோணோபரிஸம்ஸ்தித: ॥ ௨ ॥

ஸேவ்யமாநோ தஶ நாரீபிரயம் உதஷிதஸர்வாம்புஜ: ।
ஸ்மரவக்த்ரஷோடஶஸ்த்ரீபி: ஸாதராபீக்ஷிதோ(அ)வதாத் ॥ ௩ ॥

(ரக்தவர்ண:)

67. மதநகோபால த்யாநம்.

(பாஞ்சராத்திரத்தில்)

சிவப்பான திருமேனியும், 10 கைகளுமுடையவரும், ஸகல ஆபரணங்களையுமணிந்திருப்பவரும், சங்கம் 1, சக்கரம் 2, கதை 3, பத்மம் 4, பாசம் 5, அங்குசம் 6, புஷ்பபாணம் 7, கரும்புவில் 8, ஆகிய 8 ஆயுதங்களை 8 கைகளில் தரித்து, மற்ற இரு கைகளில் ஆதரவுடன் புல்லாங்குழலை வைத்துக்கொண்டு வாசிப்பவரும், 16 இதழ்களுடன்கூடிய பத்மத்தின் மத்தியிலிருக்கின்ற ஷட்கோணத்தின் மேலே வீற்றிருப்பவரும், புன்முறுவலுடன் பிரகாசிக்கும் முகாரவிந்தத்தையுடையவரும், 16 இதழ்களிலுமிருக்கும் கோபஸ்திரீகளினாலே அன்புடன் பார்க்கப்பட்டவருமான, இந்த மதனகோபாலன் (நம்மை) சேர்ப்பாராக. (சிவப்பு நிறம்)

௬௮. அத ஸுதர்ஶந த்யாநம்.

(பாஞ்சராத்ரே)

ஶங்கம் சக்ரம் ச சாபம் பரஶுமஸிமிஷும்

ஶூலபாஶாங்குஶாஸ்த்ரம்

பிப்ராணம் வஜ்ரகேடம் ஹலமுஸலகதா

குந்தமத்யுக்ரதம்ஷ்ட்ரம் ।

ஜ்வாலாகேஶம் த்ரிணேத்ரம் ஜ்வலதநலநிபம் ஹார

கேயூரபூஷம்

த்யாயேத் ஷட்கோணஸம்ஸ்தம் ஸகலரிபுஜந

ப்ராணஸம்ஹாரசக்ரம் ॥ ௧ ॥

(ரக்தவர்ண:)

68. ஸுதர்சந த்யாநம்.

(பாஞ்சராத்திரத்தில்)

சங்கம் 1, சக்கரம் 2, பாசம் 3, பரசு 4, கத்தி 5, அம்பு 6, சூலம் 7, வில் 8, அங்குசம் 9, அக்கினி 10, வஜ்ரம் 11, கேடயம் 12, கலப்பை 13, உலக்கை 14, கதை 15, குந்தம் 16, இவைகளை தரிப்பவரும், அதி பயங்கரமான நெத்திப்பற்களையுடையவரும், தீச்சுடரைப் போன்ற தலைமயிரையுடையவரும், 3 கண்களையுடையவரும் கொழுந்து விட்டெரியும் தீயைப்போன்ற திருமேனியை யுடையவரும், ஹாரம் கேயூரங்களையணிந்திருப்பவரும், ஷட்கோணத்திலிருப்பவரும், ஸகல சத்துருக்களின் பிராணனையுமழிக்கும் தன்மைவாய்ந்தவருமான சக்கரத்தை (சக்கராஸ்திர தேவதையான ஸுதர்சந மூர்த்தியை) தியாநம் செய்யவேண்டும். (சிவப்பு நிறம்)

௬௯. அத சக்ர த்யாநம்.

(பாஞ்சராத்ரே)

𑌤𑌿𑌰𑍍𑌯𑌗𑍍𑌜𑍍𑌵𑌾𑌲𑌾𑌗𑍍𑌨𑌿𑌰𑍂𑌪𑌂 𑌜𑍍𑌵𑌲𑌿𑌤𑌶𑌿𑌖𑌿𑌶𑌿𑌖𑍋𑌤𑍍𑌤𑍁𑌙𑍍𑌗
𑌕𑍇𑌯𑍂𑌰𑌬𑌾𑌹𑍁𑌂
𑌪𑌿𑌙𑍍𑌗𑌾𑌕𑍍𑌷𑌂 𑌦𑍀𑌪𑍍𑌤𑌜𑌿𑌹𑍍𑌵𑌂 𑌨𑌿𑌶𑌿𑌤𑌶𑌤𑌵𑌿𑌪𑍁𑌲𑌾𑌤𑍍𑌤𑍀𑌕𑍍𑌷𑍍𑌣
𑌧𑌾𑌰𑌾𑌤𑌿𑌰𑍌𑌦𑍍𑌰𑌂 ।
𑌶𑌾𑌰𑍍𑌙𑍍𑌗𑌂 𑌚𑌕𑍍𑌰𑌾𑌬𑍍𑌜𑌶𑌙𑍍𑌖𑍌 𑌚 𑌶𑌰𑌮𑍁𑌸𑌲𑌯𑍁𑌤𑌂
𑌸𑌕𑌲𑌶𑌤𑍍𑌰𑍂𑌨𑍍 𑌦𑌹𑌨𑍍𑌤𑌂
𑌷𑌟𑍍𑌕𑍋𑌣𑌾𑌨𑍍𑌤𑌃𑌸𑍍𑌥𑌿𑌤𑌂 𑌤𑌂 𑌰𑌵𑌿𑌨𑌿𑌯𑍁𑌤𑌨𑌿𑌭𑌂
𑌚𑌕𑍍𑌰𑌰𑌾𑌜𑌂 𑌪𑍍𑌰𑌪𑌦𑍍𑌯𑍇 ॥ ௧ ॥

69. சக்ராயுத த்யானம்.

(பாஞ்சராத்ரத்தில்)

குறுக்காக ஜ்வாலையையுடைய அக்கினியைப் போன்ற ரூபமுடையவரும், கொழுந்து விட்டெரியும் தீச்சுடரைப் போல மேலே உயர்ந்திருக்கும் கேயூரத்துடன்கூடிய கையையுடையவரும், பொன்னிறமான கண்களையுடையவரும், பிரகாசமான நாக்கையுடையவரும், கூர்மையான லக்ஷம் (100000) முனைகளுடனிருப்பதனாலே அதிபயங்கரமாக இருப்பவரும், சார்ங்கம் 1, சக்கரம் 2, பத்மம் 3, சங்கம் 4, அம்பு 5, உலக்கை இவைகளை தரிப்பவரும், ஸகல சத்துருக்களையும் பொசுக்குகின்றவரும், ஷட்கோணத்தின் மத்தியிலிருப்பவரும், லக்ஷம் ஸூரியனைப் போல் பிரகாசிப்பவரும், மாசற்றவருமான (அல்லது மன அமைதியுடனிருப்பவருமான) சக்ரராஜனை (தியானம் செய்கின்றேன்) (சிவப்பு நிறம்)

௭௰. 𑌅𑌥 𑌵𑌿𑌷𑍍𑌵𑌕𑍍𑌸𑍇𑌨𑌧𑍍𑌯𑌾𑌨𑌂.

(𑌪𑌾𑌞𑍍𑌚𑌰𑌾𑌤𑍍𑌰𑍇 𑌪𑌾𑌦𑍍𑌮𑌸𑌂𑌹𑌿𑌤𑌾𑌯𑌾𑌂)

𑌶𑍍𑌯𑌾𑌮𑌵𑌰𑍍𑌣𑌃 𑌚𑌤𑍁𑌰𑍍𑌭𑍁𑌜𑍈𑌃 𑌤𑌰𑍍𑌜𑌨𑍀𑌸𑌂𑌵
𑌚𑌕𑍍𑌰𑌗𑌦𑌾𑌧𑌰𑌃 [illegible] 𑌪𑌦𑍍𑌮𑌪𑌾𑌣𑌿𑌤𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑍇

வாடிமேருகுஶ்ஙிதவாமவாடிஃ கிரீடாதி ஸவபூாயுஂகாஶ
ஹூஷிதொ விஷ்வக்ஸேநஃ ॥ க ॥

(ஶூாமவணாஃ)

70. விஷ்வக்ஸேந த்யாநம்.

(பாஞ்சராத்திரத்தில் பாத்ம ஸம்ஹிதையில்)

விஷ்வக்ஸேநரானவர், நீல நிறமுடையவரும், 4 கைகளினாலேயும் தர்ஜநீ, சங்கம், சக்கரம், கதைகளை தரிப்பவரும் பீடத்திற்குக்கீழே தொங்கவிடப்பட்ட வலது காலையுடையவரும், மடக்கிய இடதுகாலையுடையவரும், கிரீடம் முதலிய ஸகல ஆபரணங்களையும் அணிந்திருப்பவருமாவார். (நீல நிறம்)

௭௧. ஶ்ரீ ஹநுமத்ஸ்வரூபம் (த்யாநம்).

(தந்த்ரஸாரே)

ஸ்படிகாஹம் ஸ்வணாகாந்திம் த்விஹுஜம் ச க்ருதாஞ்ஜலிம் ।
குண்டலத்வயஸம்ப்ரோத்ஹாஸிவக்த்ரம்புஜம் ஹஜெ ॥ க ॥

(ஸ்வணவணாஃ)

71. ஹநுமான் த்யாநம்.

(அவருடைய மந்திர த்யாநத்தில்)

ஸ்படிகத்தைப்போல் களங்கமற்ற மனமுடையவரும், ஸுவர்ணம்போன்ற நிறமுடையவரும், 2 கைகளுடையவரும், கைகளைக் கூப்பி அஞ்சலி பந்தநம் செய்துகொண்டு இருப்பவரும், குண்டலங்களினாலே பிரகாசிக்கும் முக கமலத்தையுடையவருமான ஹநுமானை பஜிக்கின்றேன். (ஸுவர்ண வர்ணம்)

௭௨. ஶ்ரீ வஜ்ராங்கஸ்ய த்யாநம்.

(ஶாண்டில்யஸம்ஹிதாயாம்)

പഞ്ചവക്ത്രം മഹാഭീമം ത്രിപഞ്ചനയനൈര്യുതമ് ।
കോടിസൂര്യപ്രതീകാശം കപിവക്ത്രം സുതേജസമ് ॥

ദംഷ്ട്രാകരാലവദനം ഭ്രുകുടീകുടിലേക്ഷണമ് ।
അസ്യൈവ ദക്ഷിണം വക്ത്രം നാരസിംഹം
മഹാദ്ഭുതമ് ॥ ൨ ॥

അത്യുഗ്രതേജോവപുഷം (വദ്ധിതം) ഭീഷണം
ഭയനാശനമ് ।
പശ്ചിമേ ഗാരുഡം വക്ത്രം വക്രതുണ്ഡം മഹാദ്ഭുതമ് ॥ ൩ ॥

പാതാളസിംഹം ഘോരം വിഷഭൂതാദികൃന്തനമ് ।
ഉത്തരം സൌകരം വക്ത്രം കൃഷ്ണം ദീപ്തം നഭോജ്ജ്വലമ് ॥

സർവഭൂതപ്രശമനം താപജ്വരനിവാരണമ് ।
ഊർദ്ധ്വം ഹയാനനം ഘോരം ദാനവാന്തകരം പരമ് ॥

* പഞ്ചത്രിംശദ്ഭുജവ്യാജ്ഞപാശമാംകുശപദ്മയുതം ।
ഊർദ്ധ്വരൈമാദ്യന്ത്രികാരാംഗം ദയാനം സർവസിദ്ധിദമ് ॥ ൪ ॥
(ലക്ഷണവർണ്ണഃ)

---

* അത്ര 6 ശ്ലോകേ 2, 3, പാദൗ "പാശാംകുശധാരി പക്ഷസ്താഃ । ഹസ്താബ്ജൈരസ്ത്രാകാംക്ഷാഃ" ഇതി പാഠഭേദോസ്തി ॥ തഥാഹി ധ്യാനാന്തരേ —

"വന്ദേ വാനരനാരസിംഹഖഗരാട്ക്രോഡാശ്വവക്ത്രാന്വിതം
ദിവ്യാലങ്കരണം ത്രിപഞ്ചനയനം ദേദീപ്യമാനം രുചാ ।
ഹസ്താബ്ജൈരസിഖേടപുസ്തകസുധാകുംഭാം-
കുശാദ്രീൻ ഹലം
ഖട്വാംഗം ഫണിഭൂരുഹം ദശഭുജം സർവാരി
വീരാപഹമ് ॥" ഇതി.

72. பஞ்சமுக ஆஞ்ஜநேய த்யாநம்.
(ஸுதர்சந ஸம்ஹிதையில்)

பஞ்சமுகஹநுமாரானவர், 5 முகங்களையும், மிக பயங்கரமான உருவத்தையும், 15 கண்களையும், கோடி ஸூரியனைப்போன்ற சரீர பிரகாசத்தையும், குரங்கு முகத்தையும், சிறந்த வலிமையையும், தெத்திப் பற்களாலே பயங்கரமான முகத்தையும், புருவத்தை நெறிப்பதால் கோணலான பார்வையையுமுடையவராவார். வலது பக்கத்திலிருக்கும் முகமானது, நரஸிம்ஹமூர்த்தியின் முகத்தைப்போன்ற (சிம்ஹ) முகமுடையதாம். (இந்த முகமானது) மிகுந்த ஆச்சரியத்தைத் தரத்தக்கதாம். மிகக்கொடிய தேஜஸ்ஸாலே சூழப்பட்டதாம். சத்துருக்களுக்கு பயத்தையும், பக்தர்களுக்கு பயநாசத்தையும் தரத்தக்கதாம்.

இவருடைய பின்பக்கத்திலுள்ள முகமானது, கருட முகமாகும். இதன் மூக்கு வளைந்தும், மிகுந்த ஒளியுடையது மாகும். பாதாள ஸித்தியைக்கொடுப்பதாகும். பயங்கர மானதும் விஷநாசத்தையும், பூதாதி நாசத்தையும் கொடுப்பதாம்.

இடது பக்கத்திலுள்ள முகமானது பன்றி முகமாகும். இது, கருப்பாகவும், பிரகாசமாகவும், சிகைகளுடன் கூடியதுமாகும். இது, ஸகல பூதங்களையுமடக்குவது அல்லது அழிப்பதாம். தாபஜ்வரத்தை நிவிருத்தி செய்வதாம்.

உச்சியிலிருக்கும் முகமானது, குதிரை முகமாகும். இது பயங்கரமானதும், அஸுரர்களை அழிப்பதுமாம். (5)

*இந்த ஹநுமான் கத்தி 1, முச்சூலம் 2, கட்வாங்கம் 3,

---

* இங்கு ஆயுதங்களைக்கூறும் 6வது செய்யுளில் 9 ஆயுதங்கள்தான் கூறப்பட்டிருக்கின்றது. 3வது பாதத்தின் பொருள் தெளிவாக இல்லை. ஆதலால் 2, 3, பாதங்களை பாசம்,

பாசம் 4, அங்குசம் 5, மலை 6, மரம் 7, கோமுத்திரிகை 8, முண்டம் 9 (10 ?) இவைகளை தரிப்பவரும், தேவர்களாலே நமஸ்கரிக்கப்பட்டவருமாவார். (ஸுவர்ண வர்ணம்) (6)

௭௩. அத கருட த்யாநம்.

(ப⁴ட்டபா⁴ஸ்கரீயே)

உபேந்த்³ரஸ்யாக்³ரத: பக்ஷீ கருடாகேசவ:

க்ருதாஞ்ஜலி: ।

ஸவ்யஜாநுக³தோ பூ⁴மௌ தீ³ர்க⁴ஜங்கா⁴ ச பணிமண்டி³த: ॥

ஸ்தூ²லஜங்கோ⁴ மணிக்³ரீவ: தீ³ர்க⁴நாஸோ மணாங்க³க: ।

த்³விபா³ஹு: பக்ஷயுக்தஸ்து கர்தவ்யோ

விநதாஸுத: ॥ ௩ ॥

(ஸுவர்ணவர்ண:)

73. கருட த்யாநம்.

(பட்டபாஸ்கரீயத்தில்)

விநதையின் புதல்வனான கருடன், பக்ஷியின் தோற்ற முடையவரும், நித்திரை அல்லது மாயையை வென்றவரும், அஞ்ஜலிபந்தம் செய்துகொண்டிருப்பவரும், பூமியில் வலது காலை (மண்டியிட்டு) வைத்திருப்பவரும், சிரஸ்ஸில் ஸர்பாபரணத்தை அணிந்திருப்பவரும், பருத்த கண்டைக் கால்களையுடையவரும், மணிதனைப்போன்ற கழுத்தை யுடையவரும், நீண்டு உயர்ந்த மூக்கையுடையவரும், மணிதனைப்போன்ற அங்கங்களையுடையவரும், இரண்டு

அங்குசம், மலை, புத்தகம், கலப்பை மரம், ஸுதாகும்பம் என்று பொருள்படும்படி திருத்திக்கொள்ளவேண்டுமென்று தோன்று கிறது. மற்றொரு தியாநத்தில் கத்தி 1, கேடயம் 2, புஸ்தகம் 3, அமிருத கலசம் 4, அங்குசம் 5, மலை 6, கலப்பை 7, கட்வாங்கம் 8, பாம்பு 9, மரம் 10 இவைகளை தரிப்பதாகக் கூறப்பட்டிருக்கிறது.

கைகளையுடையவரும், சிறந்தகளுடையவருமாவார். இவ் விதமாக கருடனை கல்பிக்கவேண்டும். (ஸுவர்ணவர்ணம்)

௭௩. அத ஸ்ரீகார்த்தவீர்ய த்யாநம்.

(டாமரதந்த்ரே)

அவ்யாஸ்ஸ ஸர்வஜயாஸ் ஶ்ரீஸாகரநிவஹ:
ஶ்ரேஷ்டோத்தமஶ்ரேஷ்டாதித
க்ஷோணீஶஶ்ரேணீவந்திதசரணயுகோ
ரக்தாம்ஶுகோஷ்ணீஷவாந் ।
நாநாகல்பவிபூஷண: கரஸஹஸ்ரார்த்த
பாணாஸந:
பாணார்த்தார்த்தஸஹஸ்ரபாஹுரநிஶம்
ஹ்ருத்வாம்ஹோ ந: ப்ரபு: ॥ ௧ ॥
(ரக்தவர்ண:)

74. கார்த்தவீரிய த்யாநம்.
(டாமர தந்திரத்தில்)

ஸூரியனைப்போல் பிரகாசிப்பவரும், ஸூரிய கிரணத்தினால் ஒளியுடன் பிரகாசிக்கின்ற ஸுவர்ணமாலையை கழுத்திலணிந்திருப்பவரும், சிவப்பான ஆடையையும் தலைப்பாகையையுமணிந்திருப்பவரும், நாநாவிதமான ஆபரணங்களையணிந்திருப்பவரும் 500 கைகளில் விற்களையும் 500 கைகளில் அம்புகளையுமேந்திக்கொண்டிருப்பவரும், பூவல்லபனுமான கார்த்தவீர்யார்ஜுன மஹாராஜாவானவர், நம்மை எப்பொழுதும் ஸகலவிதமான பயங்களிலிருந்தும் காப்பாற்றுவாராக. (சிவப்பு நிறம்)

அத ஶ்ருங்காராந்தரேண த்யாநம்.

(கார்த்தவீர்யார்ஜுநகல்பே)

ஸஹஸ்ரபாஹும் ஸஶரம் ஸசாபம்
ரக்தாம்பரம் ரக்தகிரீடகுண்டலம் ।

சோராரிதுஷ்டரோகநாஶிஷ்டம்
த்யாயேந்மஹாபலம் ஹ்யேனம் கார்த்தவீர்யஜம் || ௧ ||
(ரக்தவர்ண:)

மற்றொருவிதமான த்யானம்.
(கார்த்தவீர்யார்ஜுந கல்பத்தில்)

ஆயிரம் கைகளையுடையவரும், அம்புகளையும் விற்களையும் தரித்திருப்பவரும், சிவப்பு ஆடையையணிந்திருப்பவரும், ரத்னமயமான கிரீடம் குண்டலங்களையணிந்திருப்பவரும், திருடர்கள், சத்துருக்கள், துஷ்டர்கள், வியாதிகள் இவைகளை நாசம் செய்பவரும், இஷ்டங்களையளிப்பவரும், மஹாத்மாவுமான கார்த்தவீர்யார்ஜுநனை த்யாநம் செய்ய வேண்டும். (சிவப்பு நிறம்)

௫௫. அத தத்தாத்ரேய த்யாநம்.
(ருத்ரயாமளீயே)

காஶீதேவஸ்ய க்ருதவாஸ: ஸஹ்யே பணாவஸ்திதோ ஹரி: |
ஷட்பாஹு:(சதுர்பாஹு:) வ்யாக்ரக்ருத்திவ்ருத:
ஶங்கசக்ரவிபூஷித: || ௧ ||

சாபபாணகரஶ்சைவ ஶூலடமருகதாரண: |
ரதி: ப்ரீதிஸ்ததா ஶக்தி: ஹேமஶக்திஸ்ததோஜ்ஜ்வலா || ௨ ||

சதஸ்ரஸ்தஸ்ய க்ருதவ்யா: பத்ந்யோ ரத்நவஸநாஹரா: |
* பஞ்சாரஸ்ய கராஸ்தஸ்ய (ஸ்தாஸாம்) காயத்ரீ
காயத்ர்யாஸ்தநோபமா: || ௩ ||

சேதஸ்த்வசர: காயு: பஞ்சபாணதரோ
தஹாது |
காமம் கர்ஷந்ஸகீந்ஹ்ருதி தேவாநமே ||
(ஸுவர்ணவர்ண:)

* பாடம் கராப்யாம் த்ரயம் இதி பாடே ஸாவ்யஜிதி ஹரி,

75. மன்மத த்யாநம்.
(பட்டபாஸ்கரீயத்தில்)

காமதேவனை உலகத்தில் நிகரற்ற அழகுடையவனாகக் கல்பிக்கவேண்டும். 8 (4) கைகளையுடையவனாகவும், சங்கம், பத்மம், சாபம், பாணம் இவைகளையுடையவனாகவும், மதத்தைக்குறிப்பிடும் கண்களையுடையவனாகவும் கல்பிக்க வேண்டும்.

அவனுடைய மனைவிகளான ரதி, பிரீதி, சக்தி, பேத சக்தி என்ற 4 பேர்களையும், சிறந்த அழகுடையவர்களாகவும், * 4 கைகளையுடையவர்களாகவும், அழகாக அமைந்த ஸ்தனங்களையுடையவர்களாயும் கல்பிக்க வேண்டும்.

மன்மதனுடைய ரதமானது பெரிதாக இருப்பதாகும். அதன் துவஜத்தில் மகரமத்ஸ்யத்தைக் கல்பிக்கவேண்டும்.

சைவாகமத்தில், தங்க நிறமான மன்மதனை என்று கூறப்பட்டிருக்கின்றது. (ஸுவர்ணவர்ணம்)

௭௬. அத² த³த்தாத்ரேய த்⁴யாநம்.
(தந்த்ரே)

ஶ்ரோணீதடே ஶோணிதவஸ்த்ரவேஷ்டிதம்(ஸூத்ரம்)
ஸுவர்ணபுஷ்பைரக்ஷிபவக்ஷோ: ।
த்⁴யாயேச்ச பீதம் நவநாகவல்லீ
தாம்பூலராகாருணிதோஷ்டம் ॥ ௧ ॥

வ்யாக்⁴ராஜிநாநாம் கரஸாரஸிஜே த³க்ஷிணஸத்⁴யாந:
ஜாநுந்யஸ்ய ஸவ்யகரஸரோஜாதவாமோஜ்ஞதாம்ஸ: ।
த்⁴யாநாயாமாஸ ஸர்வஸ்வமாத³ய பூர்ணேந்து³தாக்ஷ:
த³த்தாத்ரேயோ ஹஸிதவத³ந: பாது ந:
க்ருத்திவாஸா: ॥ ௨ ॥
(ஶ்ரீதத்த்வநிதி:)

---

* 2 கைகள் என்று இருக்கவேண்டுமென்று தோன்றுகிறது

இதி ஶ்ரீயதுகுலபய:பாராவாரகௌமுதீநிதி ஶங்கசக்ராதி
விவிதபிருதாங்கித ஶ்ரீமந்மஹீஶூரஸம்ஸ்தாநாதீஶ்வர ஶ்ரீமத்
க்ருஷ்ணராஜமஹாராஜவிரசிதே ஶ்ரீதத்த்வநிதௌ விராட்
புருஷாதி விஷ்ணுஸ்வரூபநிரூபணம் நாம
த்விதீயோ விஷ்ணுதத்த்வநிதி: ஸமாப்த: ||

76. தத்தாத்ரேய த்யாநம்.

(தத்தாத்ரேய கல்பத்தில்)

மந்தார மரத்தினடியில் மணிமண்டபத்தில் இருப்பவரும், (பக்தர்களுக்கு) அளவற்ற ஸுவர்ணத்தை (செல்வத்தை)க்கொடுப்பதை முக்கியமாகக்கொண்டவரும் தாரித்திரியமென்னும் காட்டுத்தீக்கு காலமேகம் போன்றவர்களான நவநாதஸித்தர்களினாலே சூழப்பட்டவருமான தத்தாத்ரேயரை த்யாநம் செய்யவேண்டும்.

வலது கையில் வியாக்கியான முத்திரையை தரிப்பவரும், மற்றொன்றான இடது கையை முழங்காலின் மேலே வைத்திருப்பதனாலே உயர்ந்திருக்கின்ற தோள்பட்டையையுடையவரும், தொடர்ந்த தியானத்தினாலேயுண்டான ஸுகத்தினாலே பரவசமடைந்து அரைக்கண்களை மூடிக்கொண்டிருப்பவரும், பஸ்மத்தைப்போல வெண்மையான சரீர காந்தியையுடையவரும், யானைத்தோலையணிந்திருப்பவருமான தத்தாத்ரேயர், நம்மைக் காப்பாற்றுவாராக. (வெளுப்பு நிறம்)

இவ்விதமாக யதுகுல ஸமுத்திரத்திற்கு சந்திரனாக விளங்கியவரும், சங்கம், சக்கரம், முதலிய பற்பல விருதுகளைப்பெற்றவரும், ஸ்ரீ மைஸூர் ஸம்ஸ்தானத்தின் மஹாராஜாவாக விளங்கியவருமான ஸ்ரீ கிருஷ்ணராஜ மஹாராஜா அவர்களாலே தொகுக்கப்பெற்ற ஸ்ரீ தத்வ நிதியில், விராட்புருஷாதி விஷ்ணுஸ்வரூப நிரூபணமென்னும் இரண்டாவது விஷ்ணு தத்வநிதி முற்றும்.

அத ஶ்ரீதத்த்வநிதௌ

த்ருதீய: ஶிவதத்த்வநிதி: ॥

---

௧. அத மஹேஶ்வர த்யாநம்.

(ஶிவபஞ்சாக்ஷரீ மந்த்ரே)

ஶாந்தம் பத்மாஸநஸ்தம் ஶஶிதரமகுடம் பஞ்சவக்த்ரம்
த்ரிணேத்ரம்
ஶூலம் வஜ்ரம் ச கட்கம் பரஶுமபயதம்
தக்ஷபாகே வஹந்தம் ।
நாகம் பாஶம் ச கண்டாம் ப்ரளயஹுதவஹம்
ஸாங்குஶம் வாமபாகே
நாநாலங்காரயுக்தம் ஸ்படிகமணிநிபம்
பார்வதீஶம் நமாமி ॥ ௧ ॥

(ஶ்வேதவர்ண:)

ஸ்ரீ தத்துவநிதியில்

மூன்றாவது சிவதத்வநிதி.

1. மஹேசுவர த்யாநம்.

(சிவபஞ்சாக்ஷரீ மந்திரத்தில்)

மன அமைதியையுடையவரும், சிரஸ்ஸில் சந்திரனை தரிப்பவரும், 5 முகங்களையுடையவரும், 3 கண்களையுடைய வரும், வலதுபக்கம் கைகளில் சூலம் 1, வஜ்ஜிரம் 2, கத்தி 3, பரசு 4, அபயம் 5 இவைகளையும், இடது கைகளில், நாகம் 6, பாசம் 7, மணி 8, பிரளயகாலாக்னி 9, அங்குசம் 10, இவைகளையும் வஹிப்பவரும், நாநாவிதமான அலங்காரங்களை தரிப்பவரும், ஸ்படிகம் போன்ற சரீர காந்தியையுடைய வருமான பார்வதிபதியான ஸ்ரீ பரமேசுவரனை நமஸ்கரிக்கின்றேன். (வெளுப்பு நிறம்)

௨. 𑌅𑌥 𑌗𑍌𑌰𑍀𑌧𑍍𑌯𑌾𑌨𑌮𑍍.

(𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌪𑍍𑌰𑌾𑌸𑌾𑌦𑍇)

𑌗𑍌𑌰𑍀 𑌶𑍁𑌕𑍍𑌲𑌾𑌂𑌬𑌰𑌾 𑌦𑍇𑌵𑍀 𑌰𑍂𑌪𑍇𑌣𑌾
𑌪𑍍𑌰𑌤𑌿𑌮𑌾 𑌭𑌵𑍇𑌤𑍍 ।
𑌪𑍃𑌥𑌕𑍍 𑌚𑌤𑍁𑌰𑍍𑌭𑍁𑌜𑌾 𑌕𑌾𑌰𑍍𑌯𑌾 𑌦𑍇𑌵𑍀
𑌸𑌿𑌂𑌹𑌾𑌸𑌨𑍇 𑌶𑍁𑌭𑌾 ॥ ௧ ॥

𑌸𑌿𑌂𑌹𑌾𑌸𑌨𑍋𑌪𑌰𑌿𑌷𑍍𑌟𑌾𑌤𑍍 𑌕𑌲𑍍𑌪𑍍𑌯𑌂 𑌪𑌦𑍍𑌮𑌂
𑌚𑌾𑌰𑍁𑌕𑌰𑍍𑌣𑌿𑌕𑌮𑍍 ।
𑌅𑌷𑍍𑌟𑌪𑌤𑍍𑌰𑌂 𑌮𑌹𑌾𑌭𑌾𑌗𑌾 𑌕𑌰𑍍𑌣𑌿𑌕𑌾𑌯𑌾𑌂
𑌸𑍁𑌸𑌂𑌸𑍍𑌥𑌿𑌤𑌾 ॥ ௨ ॥

𑌵𑌿𑌨𑌾𑌯𑌕𑌸𑌮𑌾𑌸𑍀𑌨𑌾 𑌦𑍇𑌵𑍀 𑌕𑌾𑌰𑍍𑌯𑌾 𑌮𑌹𑌾𑌭𑍁𑌜𑌾 ।
𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾𑌣𑌂 𑌕𑌰𑍇 𑌕𑌾𑌰𑍍𑌯𑌂 𑌤𑌸𑍍𑌯𑌾𑌸𑍍𑌤𑍁 𑌪𑌦𑍍𑌮𑌂 𑌶𑍁𑌭𑌮𑍍 ॥

𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑍇 𑌯𑌾𑌦𑌵𑌶𑍍𑌰𑍇𑌷𑍍𑌠 𑌕𑍁𑌰𑍍𑌯𑌾𑌦𑍍𑌵𑌰𑌾𑌨𑍍𑌤𑌸𑌹𑌿𑌤𑌮𑍍 ।
𑌵𑌾𑌮𑍇 𑌚𑍈𑌵 𑌧𑍍𑌵𑌜𑌃 𑌕𑌾𑌰𑍍𑌯𑌃 𑌤𑌥𑌾 𑌰𑌾𑌜𑌨𑍍𑌮𑌨𑍋𑌹𑌰𑌃 ॥

𑌤𑌸𑍍𑌯𑌾 𑌅𑌗𑍍𑌰𑍇 𑌕𑌰𑍇 𑌕𑌾𑌰𑍍𑌯𑍇 𑌵𑌿𑌶𑍍𑌵𑌰𑍂𑌪𑌮𑌯𑌾𑌵𑌿𑌤𑌿 ॥
(𑌰𑍂𑌪𑌮𑌣𑍍𑌡𑌨𑌃)

2. கௌரீ த்யாநம்.

(ந்ருஸிம்ஹ பிராஸாதத்தில்)

கௌரீ தேவியானவள், வெளுப்பு ஆடையை அணிந்திருப்பவளும், நிகரற்ற அழகுடையவளுமாவாள். இந்த பார்வதி தேவியைத் தனித்துக் கல்பிக்கவேண்டும். இவள் 4 கைகளையுடையவளும், ஸிம்ஹாஸனத்தில் வீற்றிருப்பவளும், அழகு நிறைந்தவளுமாவாள். ஸிம்ஹாஸனத்தில் அழகான கர்ணிகையுடன் கூடிய அஷ்டபத்திர கமலத்தைக் கல்பிக்கவேண்டும். அந்த கர்ணிகையில் மிகப்பெருமை

யுடன் தனக்கு நாயகனில்லாதவளைப்போன்றவளும், பெருமை வாய்ந்த கைகளையுடையவளுமான தேவியை, நன்கு உட்கார்ந்திருக்கும் வடிவத்துடன் கல்பிக்கவேண்டும். ஹே கிருஷ்ண! அவளுடைய வலது கையில் கேயூரத்தின் (தோள்வளையின்) ஓரக்காலைப்போல பிரகாசிப்பதும், நீண்ட காம்புடன் கூடியதுமான அழகிய கமலத்தைக் கல்பிக்க வேண்டும். இடது கையில் மனதைக்கவர்ந்து விளங்கும் அமிருதகடத்தைக் கல்பிக்கவேண்டும். அவளுடைய மற்ற 2 கைகளிலும் பில்வ (பல)த்தையும் சங்கத்தையும் கல்பிக்க வேண்டும் என்று கூறப்பட்டிருக்கின்றது. (மரகதவர்ணம்)

௩. அத மஹாலக்ஷ்மீவக்ஷஸ்தித த்யானம்.

(ஶாரதா ஶங்கரஸம்ஹிதாயாம் பஞ்சமோऽத்யாய:)

ஶ்ருணுத்வம் ப்ராஹ்மணா: ஸர்வே கோப்யாத்கோப்யதரம் வரம் ।
அஸ்தி தேவாதிதேவஸ்ய மஹாலக்ஷ்மீஸ்வ வபுத: ॥ ௧ ॥

ஸாம்பஸ்ய ஶரணஸ்யாயம் ஸஹஸ்ரஸூர்யஸமப்ரப: ।
ஸம்வாஹோ யோஜனானாம் ச விம்ஶத்கோடிஷு விஸ்தாராயத: ॥ ௨ ॥

ஔன்னத்யேன து விஸ்தாரேண தஸ்ய ஜ்ஞேயம் த்விஜோத்தமா: ।
நவரத்னமயம் தஸ்ய மத்யே ஶிவாஸ்பதம் ॥ ௩ ॥

தத்ராஶ்ரயம் மண்டபஸ்ய நானாரத்னவிசித்ரிதம் ।
ப்ராகாரதோரணாட்டாலவல்லீபிர்விராஜிதம் ॥ ௪ ॥

ததா ஸிம்ஹாஸனே தத்ர மஹாரூ ஶம்பு: ஸதாஶிவ: ।
ப்ரஹ்மாண்டகோடிப்ரஹ்மாண்ட பக்ஷவிம்ஶத்ப்ரபோஜ்ஜ்வல: ॥ ௫ ॥

शतनानायुधोल्लासी पञ्चाशत्करशोभितः ।
शार्दूलरक्ताम्बरजातश्रीर्नागहारश्रिया महोज्ज्वलः ॥ ६ ॥

विचित्ररत्नखचितसर्वाभरणभूषितः ।
अनेककोटिसूर्याभः परानन्दविग्रहः ॥ ७ ॥

स्वेच्छाकृततनुः श्रीमान् दुर्लक्ष्यलक्षणवर्जितः ।
यतो वाचो निवर्तन्ते अप्राप्य मनसा सह ॥

गङ्गाश्रयजटाजूटः चन्द्ररेखाविभूषितः ।
भस्मोल्लसितसर्वाङ्गः व्यालयज्ञोपवीतवान् ॥

कपालमालाधारी च व्याघ्रचर्माम्बरावृतः ।
श्रुतिवक्त्रस्त्रिनयनः सर्वसर्वार्थसिद्धिदः ॥ ९ ॥

प्रसार्य दक्षिणं पादं कुञ्चयित्वेतरं पदम् ।
अभयं वक्त्रशब्दे च ढक्काबाणौ धराम्बुजे ॥

वज्रेतरशक्तीश्च परशुप्रासखण्डकान् ।
खट्वाङ्गपाशाक्षमालाश्च शूलिकां ध्वजदण्डकान् ॥ १० ॥

वज्रकुन्तासिदंष्ट्राश्च क्रकचं भिण्डिपालकौ ।
पञ्चविंशतिहस्तैश्च दधानो दक्षिणैः
शुभैः ॥ ११ ॥

पताकां दृढशङ्खं च घण्टापाशवरस्त्रयान् ।
उग्रं खड्गं खट्वाङ्गं शार्ङ्गवीणां च पद्मकौ ॥

कपालखट्वाङ्गमहापाशपरिघानपि ।
वज्रं पट्टिशं चैव क्षेपणीयं तथा परम् ॥

चतुर्भिं शीर्षं च विमलं बिभ्राणोऽपि चैषयाकरैः ।

ஜஹாநு வஷாஸிவஷ்லாயம் ஈாஜதெ தநு
வவுதெ ॥ கரு ॥
(ஷெதவண-ஃ)

3. மஹா கைலாசமூர்த்தி த்யாநம்.

(ஸ்காந்தம் சங்கரஸம்ஹிதையில் உபதேச காண்டத்தில்)

ஹே பிராம்ஹணர்களே! எல்லோரும் மிகச்சிறந்ததும் மிகவும் ரஹஸ்யமுமான விஷயத்தைக்கேளுங்கள்.

மேருபர்வதத்திற்கு வடக்கு பாகத்தில் பெரிதான கைலாஸ பர்வதம் இருக்கின்றது. இந்த மலையானது அம்பிகையுடனும் பக்தர்களுடனும் கூடிய சந்திர சூடனுன பரமேசுவரனுடைய வாஸஸ்தலமாகும். அது, 20 கோடி யோஜன விஸ்தாரமுடையதாகும். ஹே அந்தணர்களே! இதனுடைய உயரமானது, விஸ்தாரத்தைப்போல இரண்டு மடங்கு உடையதாகும். அதனுடைய மத்திய பாகத்தில் நவரத்நமயமானதோர் சிகரமிருக்கின்றது. அங்கு, நாநா விதமான ரத்நங்களினலும் விசித்திரமான, பரமேசுவரனுடைய ஆலயமிருக்கின்றது. அது, பிராகாரங்கள், கோபுரங்கள், சந்துகள், வலபிகள், (வளைவுகள்) இவைகளுடன் விளங்கிக்கொண்டிருக்கின்றது. (4)

அங்கு மலர்ந்த தாமரை மலர்களைப்போல சிறப்பாக பிரகாசிக்கின்ற 25 முகங்களையுடையவரும், நாநாவித ஆயுதங்களுடன் விளங்குகின்ற 50 கைகளையுடையவரும், மலர்ந்த செந்தாமரை மலரைப்போன்ற சோபையுடன் கூடிய தொப்புளுடனும், 2 கால்களுடனும் பிரகாசிப்பவரும், விசித்திரமான ரத்திநங்களாலிழைக்கப்பட்ட ஆபரணங்களையணிந்திருப்பவரும், அநேகம் கோடி ஸூரியனைப்போன்ற பிரகாசமுடையவரும், பரமாநந்த மயமான ஸ்வரூபமுடையவரும், அப்ராகிருதமான (தேஜோ மயமான) சரீரமுடையவரும், ஸர்வைசுவரிய ஸம்பன்னரும்

லக்ஷ்யலக்ஷணங்களற்றவரும், (லக்ஷணங்களாலே நிர்ணயம் செய்யமுடியாதவரும்) வாக்குக்கும் மனதுக்கும் எட்டாதவரும், கங்கைதவழும் ஜடாபாரத்தைதரிப்பவரும், சந்திரரேகையை ஆபரணமாக அணிந்திருப்பவரும், ஸகல அங்கங்களிலும் திருநீறு பூசிக்கொண்டிருப்பவரும், ஸர்ப யஞ்ஞோபவீதத்தையணிந்திருப்பவரும், கபால மாலையை தரிப்பவரும், புலித்தோலாடையையணிந்திருப்பவரும், ஒவ்வொரு முகத்திலும் 3, 3 கண்களுடையவரும், பக்தர்களின் ஸகல காரிய ஸித்தியையுமளிப்பவருமான மஹாசம்புவான ஸதாசிவன், ஸிம்ஹாஸநத்தில் வீற்றிருக்கின்றார்.

அவர், வலது காலை நீட்டிவைத்துக்கொண்டும், இடது காலை மடக்கி வைத்துக்கொண்டும், வலது பக்கத்திலிருக்கின்ற 25 கைகளிலும் அபயம் 1, சக்கரம் 2, சூலம் 3, டங்கம் (உளி) அல்லது மண்வெட்டி 4, பாணம் 5, கதை 6, பத்மம் 7, கத்தி 8, தோமரம் 9, சக்தி 10, பரசு (மழு) 11, பிராஸம் 12, பந்நகம் (ஸர்பம்) 13, கலப்பை 14, அங்குசம் 15, ஜபமாலை 16, சுரிகை (சிறிய கத்தி) 17, துவஜம் (பாவட்டா) 18, தண்டம் 19 வஜ்ஜிரம் 20, குந்தம (கடப்பாரை அல்லது குந்தாலி) 21, அஸ்திதம்ஷ்ட்ரம் (பனைமட்டையைபோல பற்களுடன் கூடிய எலும்பு) 22, கிரகசம் (ரம்பம்) 23, பிண்டி 24, பாலம் 25, என்னும் 25 ஆயுதங்களையும், இடதுபக்கத்திலிருக்கின்ற 25 கைகளிலும் வரதம் 1, வில் 2 மான் 3, சங்கம் 4, கேடயம் 5, பாசம் 6, பரசுவதம் (கோடாரி) 7, முத்கரம் 8, உடுக்கை 9, மணி 10, ருத்திர வீணை 11, புஸ்தகம் 12, கபாலம் 13, முண்டம் (தலை) 14, கட்வாங்கம் 15, புசுண்டி 16, பரிகம் (லோஹமுகமான ஆயுதம்) 17, பலகை 18, பட்டஸம்(பட்டயம்) 19, பிரம்பு 20, கமண்டலம் 21, அக்கினி 22, கத்தரிக்கோல் 23, உலக்கை 24, மயில்தோகை 25, என்னும் 25 ஆயுதங்களையும் தரித்துக்கொண்டிருக்கின்றார். இத்தகைய மஹாஸதாசிவன், அந்தக்கயிலயங்கிரியில் விளங்கிக்கொண்டிருக்கின்றார்.

௪. அத த்வாத்ரிம்ஶத்புஜாகோரமூர்த்தி த்யானம்.

(ஶிவதத்த்வரத்நாகரே)

ஏகவக்த்ரம் ஸதானந்தம் த்வாத்ரிம்ஶத்புஜஸம்யுதம் ।
ஜடாமகுடஸம்யுக்தம் த்ரிநேத்ரம் சந்த்ரஶேகரம் ॥ ௧ ॥

அபயம் கட்கஶூலம் ச சக்ரம் டமருகம் ததா ।
அஸ்திபாணௌ ச கதாம் பத்மம் கபாலகம் ॥ ௨ ॥

ஜ்ஞாநமுத்ராம் குந்தமங்குஶம் சாக்ஷமாலிகாம் ।
கட்வாங்கம் பரஶும் சைவ தக்ஷிணே தக்ஷிணை:
கரை: ॥ ௩ ॥

பாஶம் ச முஸலம் சைவ டங்கம் பாஶம் ச ஶ்ருங்கலம் ।
நாகபாஶம் த்வஜம் கண்டாம் யந்த்ரம் கபிஹஸ்தகம் ॥ ௪ ॥

ஶக்திம் ச கர்த்தரீம் கண்டாம் தர்பணம் புஸ்தகம் ததா ।
ஏதைராயுதஸம்யுக்தம் ஸர்வாபரணபூஷிதம் ॥ ௫ ॥

காருண்யஸ்ய ஶிரஸி ஸ்திதம் ஸர்வாபயப்ரதம் ॥
(நீருவணஃ:)

4. துவாத்ரிம்சத் (32) புஜ அகோர த்யாநம்.

(சிவதத்துவ ரத்நாகரத்தில்)

இந்த அகோரர், ஒரே முகமுடையவரும், எப்பொழுதும் ஆநந்தமயமானவரும், 32 கைகளையும், ஜடாமகுடத்தையும், 3 கண்களையுமுடையவரும், சந்திரனை சிரஸ்ஸில் தரிப்பவரும், வலது கைகளில் அபயம் 1, கத்தி 2, சூலம் 3, சக்கரம் 4, உடுக்கை 5, எலும்பு 6, அம்பு 7, கதை 8, பத்மம் 9 கபாலம் 10, ஜ்ஞாநமுத்திரை 11, குந்தம் 12, அங்குசம் 13, ஜபமாலை 14, கட்வாங்கம் 15, பரசு 16,

இவைகளையும், இடது கைகளில் வரதம் 1, பலகை 2, உளி 3, பாசம் 4, முத்கரம் 5, ஸர்பம் 6, அக்நி 7, மான் 8, மணி 9, வில் 10, கடிஹஸ்தம் (இடுப்பில் கை) 11, ரத்நம் 12, ஆம்பல் 13 கலசம் 14 உலக்கை 15, புஸ்தகம் 16 இவைகளையும் தரிப்பவரும், கபந்த மாலையை தரிப்பவரும், காலமுண்டனுடைய சிரஸ்ஸில் இருப்பவரும், எல்லோருக்கும் அபயத்தைக் கொடுப்பவருமாவார். (நீல நிறம்)

௫. 𑌅𑌥 𑌦𑌶𑌭𑍁𑌜𑌾𑌘𑍋𑌰𑌮𑍂𑌰𑍍𑌤𑌿𑌧𑍍𑌯𑌾𑌨𑌮𑍍.

(𑌪𑌾𑌞𑍍𑌚𑌰𑌾𑌤𑍍𑌰𑍇)

𑌪𑌰𑌶𑍁𑌂 𑌡𑌮𑌰𑍁𑌂 𑌖𑌡𑍍𑌗𑌖𑍇𑌟𑍌 𑌬𑌾𑌣𑌶𑌰𑌾𑌸𑌨𑍇 ।
𑌶𑍂𑌲𑌂 𑌕𑌪𑌾𑌲𑌮𑌭𑌯𑌵𑌰𑌦𑌂 𑌦𑌧𑌤𑌂 𑌭𑌜𑍇 ॥ ௧ ॥

𑌤𑍍𑌰𑌿𑌨𑍇𑌤𑍍𑌰𑌂 𑌭𑍀𑌷𑌣𑌾𑌸𑍍𑌯𑌂 𑌨𑍀𑌲𑌾𑌙𑍍𑌗𑌂 𑌰𑌕𑍍𑌤𑌵𑌾𑌸𑌸𑌮𑍍 ।
𑌅𑌹𑌿𑌭𑍂𑌷𑌿𑌤𑌸𑌰𑍍𑌵𑌾𑌙𑍍𑌗𑌂 𑌤𑌮𑌘𑍋𑌰𑌮𑍁𑌪𑌾𑌸𑍍𑌮𑌹𑍇 ॥

([illegible])

5 தசபுஜ அகோர த்யாநம்.

(பாஞ்சராத்திரத்தில்)

பரசு 1, உடுக்கை 2, கத்தி 3, கேடயம் 4 அம்பு 5, வில் 6, சூலம் 7, கபாலம் 8, அபயம் 9, வரதம் 10, இவைகளை தரிப்பவரும், விரும்பியதையளிப்பவரும், 3 கண்களையும், பயங்கரமான முகத்தையும், நீலநிறமான சரீரத்தையுமுடையவரும், சிவப்பு வஸ்திரத்தை தரிப்பவரும், ஸகல அங்கங்களிலும் ஸர்பங்களை ஆபரணமாக அணிந்திருப்பவருமான ஸ்ரீ அகோர மூர்த்தியை உபாஸிப்போமாக. (நீலநிறம்)

௬. 𑌅𑌥 [illegible] 𑌧𑍍𑌯𑌾𑌨𑌮𑍍.

([illegible])

மஹாகாலோ யஜத்ஸாக்ஷாத் காள்யாஶ்லிஷ்டவிக்ரஹ: ।
ஶ்யாமகஞ்சுகதாரீ ச ஶோணாருணவிலோசன: ॥ க ॥

ப்ரஹ்மாண்டசஷகே பூர்ணம் பிபந் விஶ்வமயாஸவம் ।
மஹாகாளீம் யஜத்ஸாக்ஷாந்நதாப்ராஸவாஜ்ஞயா ॥ உ ॥

ஸிம்ஹாஸநே ஸமாஸீந: கல்யாணகலநாத்மகே ।
காலம்ருத்யுப்ரதாநைஶ்ச ஸம்வ்ருத: ஸர்வலோகைகபக்ஷக: ॥

லலிதாயா த்யாநஸம்பந்நோ லலிதாபூஜநோத்ஸுக: ।
விதநோது லலிதாபக்தேஷ்வாயுஷோ தீர்கதீர்கதாம் ॥

(நீலவர்ண:)

6. மஹாகாளியுடன்கூடிய மஹாகால த்யாநம்.

(லலிதோபாக்யாநத்தில்)

மஹாகாலரானவர், மேகம்போன்ற நீலநிறமுடையவரானவர். காளிகாதேவியை ஆலிங்கநம் செய்து கொண்டிருப்பவரானவர். நீலநிறமான சட்டையையணிந்திருப்பவரானவர். மதத்தினாலே சிவந்த கண்களையுடையவரானவர். பிரும்ஹாண்டமாகிய பாநபாத்திரத்தில் நிறைந்திருக்கின்ற விசுவரஸமாகிய ஆஸவத்தை (மதுவை) அருந்துகிறவரும், நீருண்ட மேகம்போல நீலநிறமாக இருப்பவளும், ஆசை நிறைந்த மனமுடையவளுமான மஹாகாளியை கடைக்கண்ணால் பார்ப்பவரும், அழகாக அமைக்கப்பட்ட ஸிம்ஹாஸநத்தில் வீற்றிருப்பவரும், காலன், மிருத்யு முதலியவர்களுடனிருப்பவரும், ஸகல லோகங்களையும் ஒருவராகவே அழிப்பவரும், லலிதா தேவியை த்யாநம் செய்பவரும் லலிதையை பூஜிப்பதில் உத்ஸாஹமுடையவரும், ஸ்ரீ லலிதையின் பக்தர்களுடைய ஆயுஸ்ஸை மேன்மேலும் விருத்தி செய்பவருமாவார். (நீல நிறம்)

௭. அத² அம்ருதம்ருத்யுஞ்ஜய த்⁴யாநம்.

(காரணாக³மே)

சந்த்³ராவலிஷ்டா²ஞ்ச ஸம்பத்³மாஸநவிராஜிதம் ॥
சந்த்³ரவர்ணம் ஸ்ரவத்³வ்யாம்ருதசந்த்³ரகலாத⁴ரம் ॥ ௧ ॥

யோக³முத்³ராக்ஷஸம்ப³த்³தா⁴ஸ்ய ஹஸ்தத்³வயாந்விதம் ।
அம்ருதாபூர்ணகநககும்பா⁴ட்⁴யகரத்³வயம் ॥ ௨ ॥

ஸூர்யஸோமாக்³நிநேத்ரஞ்ச ப³த்³த⁴பிங்க³ஜடாத⁴ரம் ।
நாநாப⁴ரணஸம்பூ⁴ஷம் நாக³யஜ்ஞோபவீதிநம் ॥ ௩ ॥

வ்யாக்⁴ரசர்மாம்ப³ரத⁴ரம் தே³வம் ப⁴க்தாநுகம்பிநம் ।
ப⁴ஸ்மாநுலேபிநம் ஶாந்தம் ம்ருத்யுஞ்ஜயஶிவம் ஸ்மரேத் ॥

(ஶாஸ்த்ரவர்ண:)

7. அம்ருதம்ருத்யுஞ்ஜய த்யாநம்.

(காரணகமத்தில்)

சந்திர பிம்பத்தில் பத்மாஸநத்தில் வீற்றிருப்பவரும், சந்திரனைப்போன்ற சரீரகாந்தியையுடையவரும், அமிருதத்தை பெருக்கிக்கொண்டிருக்கும் சந்திரகலையை தரிப்பவரும், யோகமுத்திரையில் ஸம்பந்தித்த உதடுகளையும், இரு கைகளையுமுடையவரும், அமுதம் நிறைந்த ஸுவர்ண கலசத்தை இரு கைகளில் வைத்துக்கொண்டிருப்பவரும், ஸூரியன், சந்திரன், அக்நி, ஆகிய நேத்திரங்களையுடையவரும், சேர்த்துக்கட்டப்பட்டிருக்கின்ற பொன்னிறமான சடைமுடியையுடையவரும், நாநாவிதமான ஆபரணங்களையணிந்திருப்பவரும், ஸர்பத்தை யஜ்ஞோபவீதமாக அணிந்திருப்பவரும், புலித்தோலாடையையணிந்திருப்பவரும், பக்தர்களிடத்தில் தயையுடையவரும், திருநீரைப் பூசிக்கொண்டிருப்பவரும், துன்பமுற்றவனைத்

காப்பாற்றும் தெய்வமுமான மிருத்யுஞ்ஜய மூர்த்தியை ஸ்மரிக்கவேண்டும். (வெளுப்பு நிறம்)

அ. அத நீலகண்டத்யாநம்

(வாதுலாகமே)

ஜடாசந்த்ரதராத்யம் ஸர்பாபரணபூஷிதம் |
அக்ஷமாலாம் ச ஶூலம் ச கபாலம் தததம் கரை: ||

கட்வாங்கஞ்சைவ பஞ்சாஸ்யம் ஸஹாஸம் வ்யாக்ரசர்ம ச |
த்ரிணேத்ரஞ்ச நிரூபம் பாலார்கஸத்ருஶப்ரபம் || உ ||

ஸாதகாபீஷ்டதாதாரம் நீலகண்டம் பஜே ||

(அருணவர்ண:)

8. நீலகண்டத்யானம்.

(பாஞ்சராத்திரத்தில்)

சடைமுடியில் சந்திரனை தரிப்பவரும், ஸர்ப்பங்களை ஆபரணங்களாக அணிந்திருப்பவரும், ஜபமாலை, சூலம், கபாலம், கட்வாங்கங்களை கைகளிலேந்தியிருப்பவரும், 5 முகங்களையுடையவரும், புலித்தோலாடையணிந்திருப்பவரும், 3 கண்களையுடையவரும், பாலஸூரியனைபோன்ற சரீரகாந்தியையுடையவரும், தன்னை ஆராதிப்பவர்கள் விரும்பியதையளிப்பவருமான ஸ்ரீ நீலகண்ட மூர்த்தியை வணங்குகிறேன். (அருணவர்ணம்)

௯. அத ஸம்ஹாரமூர்த்தித்யாநம்.

(வாதுலாகமே)

கௌராபாஸம் பஞ்சவக்த்ரம் ப்ரதிவக்த்ரம்
த்ரிலோசநம் |
நீலகண்டம் [illegible] வ்யாக்ரசர்மாம்பராவ்ருதம் ||

ஶுக்லாக்ஷமாலாவராபீதிகரம் ப்ரஸந்நம் ஸர்வாங்கம் ।
ஸசந்த்ரகங்காஜடாஜூடம் ஸாந்த்ரம் தம் ப்ரணமாம்யஹம் ॥
(ஶ்வேதவர்ண:)

9. ருத்திரமூர்த்தி த்யாநம்.

பாஞ்சராத்திரத்தில்)

கைலாச மலையைபோன்றிருப்பவரும், 5 முகங்களை யுடையவரும், தேவியுடனிருப்பவரும், 3 கண்களுடைய வரும், நீலகண்டனும், ஸர்பங்களை ஆபரணங்களாக அணிந் திருப்பவரும், புலித்தோலாடையையணிந்திருப்பவரும், ஜபமாலை, வரதம், அபயம், கமண்டலங்களினாலே அலங்கரிக்கப்பட்ட கைகளையுடையவரும், சந்திரனையும் கங்கையையும் ஜடையிலணிந்திருப்பவருமான ஸ்ரீருத்திர மூர்த்தியை வணங்குகிறேன். (வெளுப்பு நிறம்)

௰. அத ஸபரிவாரோமாமஹேஶ்வர த்யாநம்.

(காரணாகமே)

வாமே கௌரீஸமேதம் பார்ஶ்வே வ்ருஷபம் பஶ்சாத்
ஸேநாந்யாத்ய:
தைத்யாரிஶ்ச விக்நஶ்ச பார்ஶ்வத்வயோ: வாய்வாதி
கோணேஷு ச ।
ஹ்ரீம் ஶ்ரீ நாரதவாணமைஹரவமஜாவஸ்து
ஷட்தவீரேஶ்வரா:
ஈஶே ஶாஸ்த்ருஸமேதஜ்யேஷ்டாச்வீம் ஸம்ஹாரம்
ஹ்ருதி பாவயேத் ॥ ௧ ॥
(ஶ்வேதவர்ண:)

10. பரிவாரங்களுடன் உமாமஹேசுவர த்யாநம்.

(காரணகமத்தில்)

இடது பக்கத்தில் பார்வதி தேவியும், எதிரில் விருஷப தேவரும், பின்பக்கத்தில் இந்திரன் முதலிய தேவர்களும், பக்கங்களில் விஷ்ணுவும், பிருஹ்மாவும், வாயுதிக்கு முதலிய கோணங்களில் பிருங்கி, நாரதர், பாணாஸுரன், பைரவர், கஜமுகன், ஸுப்ரஹ்மணியர், வீரேசுவரர்களும் (சூழ்ந்திருக்க) மத்தியில் வெண்தாமரை மலரைப்போல் வெளுப்பான சரீரகாந்தியுடன் வீற்றிருக்கும் ஸ்ரீபரமேசுவரனை ஸேவிக்கின்றேன். (வெளுப்பு நிறம்)

௧௧. அத ஸபாபதி த்யாநம்

(காரணாகமே)

கைலாஸஸௌதஶிகரே த்ரிஜகஜ்ஜநித்ரீம்
கௌரீம் நிவேஶ்ய கநகாஞ்சிதரத்நபீடே ।
ந்ருத்தம் விதாதுமபிலாஷம் ஶஶிஶேகரம் தம்
தேவா: ப்ரதோஷஸமயே நு பஜந்தி ஸர்வே ॥ ௧ ॥

ப்ரஹ்மா தாலதரோ ஹரிஸ்ஸபடஹோ
வீணாகரா பாரதீ
வம்ஶம் வாதயதே ஸஹஸ்ரநயந:
ஸாகம் ஸ்வரோத்காயகா: ।
காநௌ தும்புருநாரதௌ ஸநகஜௌ
நந்தீ க்ஷேத்ரபாலயா
ஶேஷோ ந்ருத்யகர: ஸபாபதிமிதம் நாட்யம்
ஸதா பாது ந: ॥ ௨ ॥
(கௌரவணா:)

11. ஸபாபதி த்யானம்

(காரணகமத்தில்)

பிரதோஷ காலத்தில் கைலாச பர்வதத்தின் சிகரத்தில், ரத்தினங்களை பதிப்பித்த ஸுவர்ணபீடத்தில், ஸகல ஜகத்

திற்கும் தாயான ஸ்ரீ பார்வதி தேவியை இருக்கச்செய்து நர்த்தநம் செய்கின்ற ஆதிபுருஷனை சந்திரசேகரனை தேவர்கள் யாவரும் வணங்குகிறார்கள்.

எந்த நடனத்தில், பிரம்ஹா தாளம்போடுகிறவராகவும், விஷ்ணு படஹ வாத்தியத்தை வாசிப்பவராகவும், ஸரஸ்வதிதேவி வீணை வாசிப்பவளாகவும், பிரகாசமான கைகளையுடைய ஸூரிய சந்திரர்கள் புல்லாங்குழலை வாசிப்பவர்களாகவும், தும்புருவும், நாரதரும் கானம் செய்பவர்களாகவும், நந்திகேசுவரனும் குமாரனும் மிருதங்கம் வாசிப்பவர்களாகவும், பரமேசுவரன் நர்த்தநம் செய்பவராகவும் இருக்கின்றாரோ, அப்படிப்பட்ட பரமேசுவரனுடைய ஸ்வபாவஸித்தமான நாட்டியமானது எப்பொழுதும் நம்மைக் காப்பாற்றவேண்டும். (வெளுப்பு நிறம்)

அத ஸத்யோஜாதாதிபஞ்சமூர்த்தித்யாநம்

(ஶைவே காரணாகமே)

கஉ. தத்ராதௌ ஸத்யோஜாத த்யாநம்.

குந்தேந்துஶங்கஸ்படிகாவபாஸோ
வேதாக்ஷமாலாவரதாபயாங்க: |
த்ர்யக்ஷஶ்சதுர்வக்த்ர உதாரபாஹு:
ஸத்யோऽதிஜாதோऽவது மாம் ப்ரதீச்யாம் || க ||
(ஶ்வேதவர்ண:)

ஸத்யோஜாதாதி பஞ்சமூர்த்தி த்யாநம்.

(சைவம் காரணாகமத்தில்)

12. ஸத்யோஜாத த்யாநம்.

16 முல்லை, சந்திரன், சங்கம், ஸ்படிகம் இவைகளைப் போன்ற வெளுப்பான சரீரகாந்தியையுடையவரும், வேதம்

(புஸ்தகம்) ஜபமாலை, வரதம், அபயங்களை அடையாளமாகக் கொண்டவரும், 3 கண்களையுடையவரும், 4 முகங்களையுடையவரும், மிகப்பெருமைவாய்ந்தவருமான ஸத்யோஜாத மூர்த்தியானவர், மேற்கு திக்கில் என்னைக் காப்பாற்றுவாராக. (வெளுப்பு நிறம்)

௧௩. அத வாமதேவ த்யாநம்.

வராக்ஷமாலாபயடங்கஹஸ்த:
ஸரோஜகிஞ்ஜல்கஸமாநவர்ண: ।
த்ரிலோசநஶ்சாருசதுர்முகோ மாம்
பாயாதுதீச்யாம் திஶி வாமதேவ: ॥ ௧ ॥
(கநகவர்ண:)

13 வாமதேவ த்யாநம்.

வரதஹஸ்தம், ஜபமாலை, அபயஹஸ்தம், உளி அல்லது மழு, இவைகளை கைகளில் தரிப்பவரும், பத்மத்தின் குஞ்சத்தைப்போன்ற நிறமுடையவரும், 3 கண்களையுடையவரும், அழகான 4 முகங்களையுடையவருமான வாமதேவ மூர்த்தியானவர், வடக்கு திக்கில் காப்பாற்றுவாராக. (தங்க நிறம்)

௧௪. அத அகோர த்யாநம்.

காலாப்ரபாஸாங்குஶபாஶஶூல
கபாலடக்காக்ஷகுணாந் ததாந: ।
சதுர்முகோ நீலருசிஸ்த்ரிநேத்ர:
பாயாதகோரோ திஶி தக்ஷிணஸ்யாம் ॥ ௧ ॥
(நீலவர்ண:)

14. அகோர த்யாநம்.

கோடாரி, வேதம் (புஸ்தகம்) அங்குசம், பாசம், சூலம், கபாலம், உடுக்கை, ஜபமாலை இவைகளை தரிப்பவரும்,

4 முகங்களுடையவரும், நீலநிறமானவரும், 3 கண்களை யுடையவருமான அகோரமூர்த்தியானவர், தெற்கு திக்கில் காப்பாற்றுவாராக. (நீலநிறம்)

௧௫. அத தத்புருஷ த்யாநம்.

ஸம்வித்யுத்கநகாவபாஸோ
வித்யாவராபீதிகுடாரபாணி: ।
சதுர்முகஸ்தத்புருஷஸ்த்ரிணேத்ர:
ப்ராச்யாம் ஸ்திதோ ரக்ஷது மாம் ஸதைவ ॥ ௧ ॥
(கநகவர்ண:)

15. தத்புருஷ த்யாநம்.

மின்னுகின்ற மின்னலைப்போலும் ஸுவர்ணத்தைப் போலுமிருக்கின்ற சரீரகாந்தியையுடையவரும், வித்தியை (புஸ்தகம்) வரதம், அபயம், கோடாரி இவைகளை கைகளில் வஹிப்பவரும், 4 முகங்களையுடையவரும், (ஒவ்வொரு முகத்திலும்) 3 கண்களையுடையவருமான தத்புருஷ மூர்த்தியானவர், கிழக்கு திக்கிலிருந்துகொண்டு என்னை எப்பொழுதும் காப்பாற்றுவாராக. (தங்க நிறம்)

௧௬. அத ஈஶாந த்யாநம்.

வேதாபயேஷ்டாங்குஶபாஶடங்க
கபாலடக்காக்ஷகஶூலபாணி: ।
ஸிதத்யுதி: பஞ்சமுகோவதாந்மாம்
ஈஶாந ஊர்த்வம் பரமப்ரகாஶ: ॥ ௧ ॥
(ஶ்வேதவர்ண:)

16. ஈசாந த்யாநம்.

வேதம் (புஸ்தகம்) அபயம், வரதம், அங்குசம், பாசம், டங்கம், (உளி) கபாலம், உடுக்கை, ஜபமாலை, சூலம், இந்த

10 ஆயுதங்களையும் 10 கைகளிலும் தரிப்பவரும், வெளுப்பான சரீரகாந்தியையுடையவரும், 5 முகங்களையுடையவரும், மிகுந்த பிரகாசமாக இருப்பவருமான ஈசாந மூர்த்தியானவர், மேலே (ஆகாச திக்கில்) என்னைக் காப்பாற்றுவாராக. (வெளுப்பு நிறம்)

அத ஷட்த்ரிம்ஶத்தத்வஶக்திஸ்வரூபாணி.

(ஶைவாகமாத்)

௧. தத்ராதௌ ஶுத்ததத்வ த்யாநம்.

*ஶுத்தஸ்படிகஸங்காஶம் த்ரிணேத்ரம் [illegible] ஜடாங்கிதம் ।
[illegible] பிம்பஸமந்விதம் ॥ ௧ ॥

ஊர்த்வே தக்ஷிண(வாமே து) [illegible] ।
தக்ஷிணே ஸ்படிகாக்ஷம் து ஜாநுஸ்தம் வரதம் [illegible] ॥

வாமகண்டே [illegible] தக்ஷிணே [illegible] ।
[illegible] ॥ ௨ ॥

[illegible] ।
[illegible] வாமே தக்ஷிணே [illegible] ॥

[illegible] வாமகே [illegible] ।
பத்மம் து தக்ஷிணம் பாத [illegible] ॥

ஊர்த்வம் பாதம் து வாமாக்ரம் தக்ஷிணாந்தம் ।
ஶுத்ததத்வம் [illegible] — — — ॥ ௩ ॥

(மண்டலம்:)

* 1–4½ [illegible]

ஸப்த தாண்டவ மூர்த்தி ஸ்வரூபங்கள்.

(சைவம் காரணாகமத்தில்)

17. அவைகளில் முதலாவது ஆநந்த தாண்டவ த்யாநம்.

4 கைகளையுடையவரும், 3 கண்களையுடையவரும், விரிந்த சடைகளையுடையவரும், வெளுப்பு நிறமுடையவரும், மயில் தோகையையணிந்திருப்பவரும், தலையில் சடையில் வலது (இடது) பக்கத்தில் ஊமத்தம் பூவையும் அரைவட்ட சந்திரனையும் தரிப்பவரும், வலது பக்கத்தில், தனது சடையின் நுனியில் கங்கையினாலே சோபிப்பவரும், இடது காதில் கர்ண பத்ரமும், வலது காதில் மகரகுண்டலமும் அணிந்திருப்பவரும், ஸகல ஆபரணங்களையுமணிந்திருப்பவரும், யஞ்ஞோபவீதத்தை தரிப்பவரும், புலித்தோல் ஆடையையணிந்திருப்பவரும், கால்களில் சதங்கைகளை அணிந்திருப்பவரும், இடது பக்கத்தில் கையை நீட்டிக் கொண்டிருப்பவரும், வலது பக்கத்தில் அபயஹஸ்தத்துடனிருப்பவரும், வலது கையில் உடுக்கையை தரிப்பவரும் இடது கையில் அக்நியை தரிப்பவருமான பரமேசுவரன், அபஸ்மாரன் மேலேவைத்திருக்கும் வலதுகாலைக்கோணலாக வைத்துக்கொண்டும், ஊர்த்துவமுகமான (மேல் நோக்கான) இடது காலின் நுனிப்பக்கத்தை வலது பக்கமாக வைத்துக் கொண்டும் செய்யும் நர்த்தனமானது, ஆநந்ததாண்டவம் எனப்படும். (வெளுப்பு நிறம்)

க௭. அத ஆநந்ததாண்டவ த்யாநம்.

சதுர்ப்புஜம் த்ரிணேத்ரஞ்ச ஜடாஜூடகூடிதம்
த்வயம் (தயாரிணம்) ।
அபயம் வரதம் ஸவ்யே வாமே ஸிம்ஹம் ஸவிஷயம் ॥
அபஸ்மாரம் விநா பீடே வாமாங்க்ரிகுஞ்சிதம்
ஸ்திதம் ।

ஸவ்யே து தக்ஷிணம் பாதமேவமஸ்யாந்தரம்
த்வயம்(ஸ) ॥ ௨ ॥

தத்பாதம் குஞ்சிதம் வாம ஸர்ப்பகங்கணஸம்பூஷிதம் ।
ஸந்த்யாதாண்டவமேவம் ஸ்யாத் — — ॥
(பஞ்சாக்ஷரீகம் பரமேச்வரம்)

18. ஸந்தியாதாண்டவ த்யாநம்.

4 கைகளும், 3 கண்களும், ஜடாமகுடமும் தரிப்பவரும், வலது பக்கம் கைகளில் அபயத்தையும், டமருவையும், இடதுகைகளில் மயில்தோகையையும் விஸ்மய ஹஸ்தத்தையும் தரிப்பவரும், அபஸ்மாரனின்றி பீடத்தின் மேலே இடது காலை குஞ்சிதமாக வைத்திருப்பவரும், ஸர்பங்களை கங்கணங்களாக அணிந்திருப்பவருமான ஸ்ரீ பரமேசுவரன், இடது பக்கமாக இருக்கும் வலது காலை ஊர்த்வ முகமாகவாவது (மேல் நோக்காகவாவது) குஞ்சிதமாகவாவது வைத்துக்கொண்டு செய்யும் தாண்டவமானது, ஸந்தியாதாண்டவமாகும். (நிறம் முதலியன முன்பு கூறியதுபோல்)

௧௯. அத உமாதாண்டவ த்யாநம்.

பஞ்சவக்த்ரம் த்ரிநயநம் ஜடாமகுடஸம்பூஷிதம் ।
தசாஸ்யம் ஷட்பாஹுமேகவக்த்ரத்ரயம் ஸஹஸ்ரம் ததா ॥
ஶூலம் தக்ஷிணபார்ச்வே து கபாலம் விஸ்மயம்
ததா ।
டமருஹஸ்தவிசேஷம் ஹஸ்தம் ஸவ்யபார்ச்வாந்தரம்
த்வயம்(யஸ) ॥ ௨ ॥

ததேவ வாமபாதம் ச ஸவ்யஸ்தானோபரிஸ்திதம் ।
உத்ருதம் தக்ஷிணம் பாதம் வாமபாதாந்தரம் ததா ॥ ௩ ॥

வாமபார்ஶ்வே து ஹ்யுமாதேவீஸஹிதம் ஜாஹ்நவீயுதம் ।
ஸர்வாபரணஸம்யுக்தம் வ்யாக்ரசர்மாம்பரீயகம் ॥ ௪ ॥

உமாதாண்டவமூர்த்யாக்யம் (இதி ப்ரோக்தம்) — — ॥
(ஶிஷ்டம் பூர்வவத்)

19. உமாதாண்டவ த்யாநம்.

ஒரு முகமுடையதும், 3 கண்களுடையதும், ஜடா மண்டலத்தை தரிப்பதும், வெளுப்பு நிறமுடையதும், 6 கைகளுடையதும், அபயம், டமரு, சூலம் இவைகளை வலது பக்கம் கைகளிலும், கபாலம், விஸ்மயஹஸ்தம், கரிஹஸ்தம் இவைகளை இடது பக்கம் கைகளிலும் தரிப்பதும், இடது காலை அபஸ்மாரன் மேலே வைத்துக் கொண்டிருப்பதும், இடது காலை ஒட்டி வலது காலை மேலே தூக்கிக்கொண்டிருப்பதும், இடது பக்கத்தில் உமாதேவியுடன் கூடியிருப்பதும், கங்கையை தரித்திருப்பதும், ஸகல ஆபரணங்களையுமணிந்திருப்பதும், புலித்தோலாடையையணிந்திருப்பதுமான பரமேசுவரமூர்த்தியானது, உமா தாண்டவ மூர்த்தி எனப்படும். (மற்றது முன்புபோல்)

௨0. அத கௌரீதாண்டவ த்யாநம்.

ஶாந்தம் சதுர்புஜோபேதம் ரக்தவர்ணம்
ஸ்மிதாநநம் ।
கிரீடம் மகுடோபேதம் ச யஜ்ஞஸூத்ரம்
பாதகுண்டலகம் ॥ க ॥

பாஹுவாமே ஜடாஜூடம் ஸவ்யேக்ஷண ஜடாம்பிதம் ।
ஸர்வாபரணஸம்யுக்தம் வ்யாக்ரசர்மாம்பரான்விதம் ॥ ௨ ॥

தக்ஷிணம் குஞ்சிதம் பாதம் வாமபாதம் ததுத்த்ருதம் ।
ஸர்வ த்யாநமேவ த்ருஷ்டிது ப்ரோக்தம் கரே ॥ ௩ ॥

ஸவ்யஸ்மிந் டமரும் வ்யாஹஸ்தே வஹ்நிபாத்ரகம் |
வாமே கௌரீஸஹாயார்த்தம் தக்ஷிணே நந்திகேஶிநம் ॥ ௪ ॥

ஸர்வ்விகீர்ணஜடாபாரம் ஜடாமகுடஸம்யுதம் |
வாமே கங்கா(கௌரீ)ஸஹாயார்த்தம் ஶேஷம்

ஆத்யநர்த்தவத் ॥ ௫

கௌரீதாண்டவமித்யுக்தம் — — — ॥

(ரக்தவர்ண:)

20. கௌரீ தாண்டவ த்யாநம்

மன அமைதியையுடையதும், 4 கைகளும் சிவப்பு நிறமும் சிரித்த முகமுமுடையதும், மண்டையோடு பு... புஷ்பம் (கொக்குமந்தாரைப்பூ) ஊமத்தம்பூ, எருக்கம்பூ இவைகளையும் இளம்பிறை சந்திரனையுமணிந்து விரி திருக்கும் சடைகளையுடையதும், ஸர்ப கங்கணத்தை தரிப்பதும், அபஸ்மாரன்மேலே வலது காலை குஞ்சிதமாக வைத்துக்கொண்டு, இடது காலை மேலே தூக்கிக்கொண் டிருப்பதும், வலது பக்கம் கையில் அபயமும், உடுக்கையும் இடதுபக்கம் கைகளில் கீழ்க்கையில் ஸர்பமும் மேல்கையில் அக்னிபாத்திரமும் தரிப்பதும், இடது பக்கத்தில் கௌரி தேவியுடனும், வலது பக்கத்தில் நந்திகேசுவருடனும் கூடியிருப்பதும், விரிந்திருக்கும் சடையை அல்லது ஜடா மகுடத்தை தரிப்பதும், இடது பக்கத்தில் மௌளியை (கங்கையை) தரிப்பதுமான மூர்த்தியானது, கௌரி தாண்டவமூர்த்தி எனப்படும். மற்றவைகள் முதலாவது நர்த்தநத்தில் கூறியிருப்பதைப்போலவேயாகும். (சிவப்பு நிறம்)

௨௧. அத காளிகாதாண்டவ த்யாநம்.

அர்கவர்ணம் த்ரிநயநம் ஜடாஸங்கீர்ணஶேகரம் |
ஷோடஶகரஸம்யுக்தம் ஸர்வாபரணஸம்யுதம் ॥ ௧ ॥

[illegible] ஸ்திதம் ।
அபயம் ஶூலபாஶம் ச டமரும் தக்ஷிணே கரே ॥ ௨ ॥

கபாலம் சாக்நிபாத்ரம் ச கண்டாம் வாமகரே ததா ।
கஜஹஸ்தோபமம் ஹஸ்தம் ப்ரஸாரிதம் தக்ஷிணாநதம் ॥

ஏவம் லக்ஷணஸம்யுக்தம் ஶேஷம் ப்ராக்ந்ருத்தவத் ।
காளிகாதாண்டவம் ப்ரோக்தம் — — ॥ ௩ ॥

([illegible])

21. காளிகாதாண்டவ த்யாநம்.

எப்பொழுதும் யஜ்ஞங்களை செய்து கொண்டிருப்பவரும், பிரஹ்மரிஷி கணங்களினாலே துதிக்கப்பட்டவரும், ஜடையை தரிப்பவரும், தாடி மீசைகளுடனிருப்பவரும், தண்டம், கமண்டலம் இவைகளை தரித்துக்கொண்டு பிரகாசிப்பவரும், ஸூரியனைபோல தேஜோராசியாகப் பிரகாசிப்பவரும், தபஸ்ஸிற்கு இருப்பிடமாக விளங்குகின்றவருமான க்ரது என்ற முனிவரை, நான் த்யாநம் செய்கின்றேன். (சிவப்பு நிறம்)

௧௪. அத கர்தம த்யாநம்.

கர்தமம் நௌமி ஶிரஸா பாபகர்தமஶோஷணம் |
ஜடாகலாபஶோபாட்யம் ஸந்த்யாப்ராருணவிக்ரஹம் ||

அக்ஷஸூத்ரகமண்டலும்பிகாஹஸ்தம் சீரக்ருஷ்ணாஜிநாம்பரம் |
(ஸிந்தூரவர்ண:)

14 கர்தம த்யாநம்.

சடைமுடியை தரித்து அழகாக இருப்பவரும், ஸந்தியா கால மேகத்தைப்போன்ற சிவப்பு நிறமான சரீரத்தை யுடையவரும், ஜபமாலை, குண்டிகை இவைகளை கைகளில் தரிப்பவரும், இடுப்பில் மரையுரியையும் மேலே மான் தோலையுமாடையாக அணிந்திருப்பவரும், பாபமாகிய சேற்றை சுண்டி உலரவைப்பவருமான கர்தமமுனிவரை சிரஸினாலே வணங்குகின்றேன். (ஸிந்தூர வர்ணம்)

௧௫. அத கஶ்யப த்யாநம்.

கஶ்யபம் நௌமி ஶிரஸா மரீசிதநயம் முநிம் |
ப்ரணவப்ரஹ்மஸம்ஸக்தசித்தம் ஸ்வர்ணாபவிக்ரஹம் ||

சீரவல்கலஸம்வீதம் ஜடாமண்டலபாஸுரம் |
ப்ரஜாஸம்ஸர்ஜநோத்யுக்தமக்ஷஸூத்ரகமண்டலுதரம் ||
(காஞ்சநவர்ண:)

15. கச்யப த்யாநம்.

மரிசி முனிவரின் புதல்வனும், மாசற்றவரும், பிரணவ பிரஹ்மத்தில் லயமடைந்த மனதையுடையவரும்,
23 ஸுவர்ணம் போன்ற சரீர காந்தியையுடையவரும், மரை யுரியை ஆடையாக அணிந்திருப்பவரும், ஜடாமண்டலத்

துடன் பிரகாசிப்பவரும், பிரஜைகளை ஸ்ருஷ்டி செய்வதில் முயற்சியுடையவரும், ஜபமாலையையும் குண்டிகை (கிண்டி) யையும் தரிப்பவருமான கச்யப முனிவரை சிரத்தினுலே வணங்குகின்றேன். (ஸுவர்ண வர்ணம்)

௧௫. அத தக்ஷ த்யாநம்.

அஜவக்த்ரம் த்விநயநம் ஶ்ருங்கத்வயவிபூஷிதம் |
நமஸ்காராஞ்ஜலிம் வந்தே ஶிவத்யாநபராயணம் ||

ஸ்வாயம்புவம் கநஶ்யாமம் தக்ஷம் யஜ்ஞதீக்ஷிதம் |
(ஶ்யாமவர்ண:)

16. தக்ஷ த்யாநம்

ஆட்டு முகமும் 2 கண்களுமுடையவரும், 2 கொம்புகளாலே அலங்கரிக்கப்பட்டிருப்பவரும், நமஸ்காரம் செய்வதைக்குறிக்கின்ற அஞ்ஜலியையுடையவரும், பரமேசுவர த்யாநத்திலீடுபட்டிருப்பவரும், பிரஹ்ம தேவரின் புதல்வனும், மேகத்தைப்போல நீலநிறமாக இருப்பவரும், யஜ்ஞதீக்ஷையுடையவரு (எப்பொழுதும் யாகங்கள் செய்பவரு)மான தக்ஷ முனிவரை வணங்குகின்றேன். (நீல நிறம்)

௧௭. ஸப்தர்ஷீணாம் த்யாநம்
(நரஸிம்ஹபுராணே)

உபவீதிநா: ஸோபவீதா: கமண்டல்வக்ஷஸூத்ரிண: |
ஜடிலா: ஶ்மஶ்ருலா: ஶாந்தா: குஶிநா த்யாநதத்பரா: |
ஸப்தர்ஷயோ வஸிஷ்டஸ்ய காயேந ஹாயநாஸநிதா: ||
தேஷாம் நாமாநி —

ஜமதக்நிர்பரத்வாஜோ விஶ்வாமித்ரோத காஶ்யப: |

ஜடிலாஃ ஸௌம்யவேஷாஶ்ச ஸந்து வைவஸ்வதாந்தரே ॥ ௨ ॥

17. ஸப்த (7) இருடிகளின், த்யாநம்.

ஸப்தர்ஷிகள், உலகப்பற்றில்லாதவர்களும், யஜ்ஞோப வீதத்தை தரித்திருப்பவர்களும், கமண்டலம் ஜபமாலைகளை தரித்திருப்பவர்களும், சடை தாடி மீசையுடையவர்களும், சாந்தமான ஸ்வரூபமுடையவர்களும், உட்கார்ந்திருப்பவர்களும், த்யாநத்திலீடுபட்டவர்களுமாவார்கள்.

வஸிஷ்டரை மனைவியுடனிருப்பவராகக் கல்பிக்க வேண்டும்.

அந்த ஸப்தர்ஷிகளின் பெயர்கள் :—

கௌதமர் 1, பரத்வாஜர் 2, விசுவாமித்திரர் 3, காசியபர் 4, ஜமதக்னி 5, வஸிஷ்டர் 6, அத்திரி 7 ஆகிய இந்த 7 முனிவர்களும், வைவஸ்வதமந்வந்தரத்தில் ஸப்த ரிஷிகளாக இருப்பவர்களாவார்கள்.

௧௮. தத்ராதௌ கௌதம த்யாநம்.

ரஹூகணாத்மஜம் ஶாந்தம் த்ரிபுண்ட்ராங்கிதபாலகம் ।
அக்ஷஸூத்ரகமண்டல்வாதண்டாட்யம் த்யாயாமி கௌதமம் ஹ்ருதி ॥
(கநகவர்ண:)

18. அவர்களில் முதலில் கௌதம த்யாநம்.

ரஹூகணனுடைய புதல்வரும், சாந்தமான ஆகாரத்தையுடையவரும், நெற்றியில் திரிபுண்டிரம் தரித்திருப்பவரும், ஜபமாலை, குண்டிகை, (யோக) தண்டம் இவைகளை தரிப்பவருமான கௌதம முனிவரை வணங்குகின்றேன். (கநக வர்ணம்)

௧௯. அத பரத்வாஜ த்யாநம்.

பாரத்³வாஜம் மஹாஶாந்தம் ஸுஶீலாபதிமீடி³தம் |
அக்ஷஸூத்ரகமண்ட³லுஹஸ்தம் ச ஶ்யாமாங்கி³ரஸம் ப⁴ஜே ||
(ஶ்யாமவர்ண꞉)

19. பரதுவாஜ த்யாநம்.

மிகவும் சாந்தமானவரும், ஸுசீலையின் கணவரும், மன உறுதியுடையவரும், (அல்லது தபஸ்ஸில் உறுதியுடையவரும்) ஜபமாலையையும் யோகதண்டத்தையும் தரிப்பவரும், அங்கிரஸ்ஸின் புதல்வருமான பரத்துவாஜ முனிவரை வணங்குகின்றேன். (சியாம வர்ணம். சியாமம் — நீலம் அல்லது கருப்பு)

௨௰. அத² விஶ்வாமித்ர த்⁴யாநம்.

ஹிரண்யக³ர்ப⁴ஸத்³ருஶம் ஜடாமகுடதா⁴ரிணம் |
குமுத்³வதீபதிம் ஶாந்தம் விஶ்வாமித்ரம் ப⁴ஜாம்யஹம் ||
(பீதவர்ண꞉)

20. விசுவாமித்திர த்யாநம்.

பிரஹ்மதேவரைப்போலிருப்பவரும், சடைமுடியை தரிப்பவரும், குமுத்வதி என்பவளின் கணவனும், சாந்தமான ஸ்வரூபமுடையவருமான விசுவாமித்திரரை நான் வணங்குகின்றேன். (மஞ்சள் நிறம்)

௨௧. அத² காஶ்யப த்⁴யாநம்.

த்⁴யாயேத் மரீசிதநயம் ஜடாவல்கலதா⁴ரிணம் |
தே³வாக்ஷஸூத்ரம் பத்நீஸஹிதம் ஶாந்திவாஞ்ச²வம் ||
(க்ருஷ்ணவர்ண꞉)

21. காசியப த்யானம்.

மரீசி முனிவரின் புதல்வரும், சடை மரவுரி ஜபமாலை இவைகளை தரிப்பவரும், மனைவியுடனிருப்பவரும்,

முனிச்ரேஷ்டருமான காசியபரை த்யானம் செய்கிறேன். (கருப்பு நிறம்)

௨௨. 𑌅𑌥 𑌜𑌮𑌦𑌗𑍍𑌨𑌿 𑌧𑍍𑌯𑌾𑌨𑌮𑍍.

𑌶𑌾𑌨𑍍𑌤𑌂 𑌜𑌿𑌤𑌾𑌰𑌿𑌷𑌡𑍍𑌵𑌰𑍍𑌗𑌂 𑌭𑍃𑌗𑍁𑌵𑌂𑌶𑌸𑌮𑍁𑌦𑍍𑌭𑌵𑌮𑍍 ।
𑌦𑌣𑍍𑌡𑌾𑌕𑍍𑌷𑌸𑍂𑌤𑍍𑌰𑌪𑌾𑌣𑌿𑌂 𑌚 𑌜𑌮𑌦𑌗𑍍𑌨𑌿𑌂 𑌨𑌮𑌾𑌮𑍍𑌯𑌹𑌮𑍍 ॥
(𑌰𑌕𑍍𑌤𑌵𑌰𑍍𑌣𑌃)

22. ஜமதக்னி த்யாநம்

சாந்தமான ஸ்வரூபமுடையவரும், அரிஷட்வர்கத்தை (காமம், க்ரோதம், லோபம், மோஹம், மதம், மாத்ஸரியம் ஆகிய 6 பகைகளையும்) ஜயித்தவரும், பிருகு முனிவரின் புதல்வரும், மிகுந்த தேஜஸ்ஸையுடையவரும், யோக தண்டம், ஜபமாலைகளை தரிப்பவருமான ஜமதக்னி முனிவரை நான் வணங்குகின்றேன். (சிவப்பு நிறம்)

௨௩. 𑌅𑌥 𑌵𑌸𑌿𑌷𑍍𑌠 𑌧𑍍𑌯𑌾𑌨𑌮𑍍.

𑌤𑌪𑍋𑌨𑌿𑌧𑌿𑌂 𑌦𑌯𑌾𑌸𑌿𑌨𑍍𑌧𑍁𑌂 𑌮𑌿𑌤𑍍𑌰𑌾𑌵𑌰𑍁𑌣𑌸𑌂𑌭𑌵𑌮𑍍 ।
𑌸𑌾𑌕𑍍𑌷𑌦𑌣𑍍𑌡𑌪𑌾𑌣𑌿𑌂 𑌵𑌰𑌦𑌂 𑌵𑌸𑌿𑌷𑍍𑌠𑌂 𑌪𑍍𑌰𑌣𑌮𑌾𑌮𑍍𑌯𑌹𑌮𑍍 ॥
(𑌸𑌿𑌤𑌵𑌰𑍍𑌣𑌃)

23. வஸிஷ்ட த்யாநம்.

தவத்தின் இருப்பிடமாக இருப்பவரும், மித்திரன், வருணன் இவர்களின் புதல்வனாக இருப்பவரும், ஜபமாலை யோக தண்டங்களை கைகளில் தரிப்பவரும், வரன்களை யளிப்பவருமான வஸிஷ்ட முனிவரை, நான் வணங்குகின்றேன். (வெளுப்பு நிறம்)

௨௪. 𑌅𑌥 𑌅𑌤𑍍𑌰𑌿 𑌧𑍍𑌯𑌾𑌨𑌮𑍍.

𑌵𑌿𑌰𑌿𑌞𑍍𑌚𑌿𑌤𑌨𑌯𑌂 𑌦𑍇𑌵𑌂 𑌸𑌾𑌕𑍍𑌷𑌸𑍂𑌤𑍍𑌰𑌕𑌮𑌣𑍍𑌡𑌲𑍁𑌮𑍍 ।

அநஸூயாபதிம் ஶாந்தமூர்த்திம் நிஷ்கல்மஷம் பஜே ॥

(க்ருஷ்ணவர்ண:)

24. அத்திரி த்யாநம்.

பிரஹ்மதேவரின் புதல்வரும், தெய்வத்தன்மை வாய்ந்தவரும், ஜபமாலையையும் கமண்டலத்தையும் தரிப்பவரும், அநஸூயாதேவியின் கணவரும், சாந்தமான ஸ்வரூபமுடையவரும், குற்றமற்றவருமான அத்திரி முனிவரை வணங்குகின்றேன். (கருப்பு நிறம்)

௨௫. அத தர்மாதிசதுஷ்டய த்யாநம்.

(ந்ருஸிம்ஹப்ராஸாதே)

தர்மோ ஜ்ஞாநம் ச வைராக்யமைஶ்வர்யம் ச
ததைவ ச ।
ஸிதாருணபீதக்ருஷ்ணஸிம்ஹரூபா: ப்ரகீர்த்திதா: ॥

25. தர்மம் முதலிய 4 களின் த்யாநம்.

(ந்ருஸிம்ஹபிராஸாதத்தில்)

தர்மம், ஜ்ஞாநம், வைராக்கியம், ஐசுவரியம் இந்நான்கும், முறையே, வெளுப்பு, சிவப்பு, மஞ்சள், கருப்பு நிறமான ஸிம்ஹ வடிவமுடையவைகளாம் என்று கூறப்பட்டிருக்கின்றன.

௨௬. அத தர்மாதிசதுஷ்டயாதிஷ்டாநதேவதா சதுஷ்டய த்யாநம்.

(வாதுலாதே)

தர்மாதயஶ்சதுஷ்பாத்ஸ்து ஜ்ஞேயா தர்மாதிதேவதா: ।

(ஏதேஷாம் லக்ஷணாநி ஸித்தாந்தலக்ஷணே த்ரஷ்டவ்யாநி. ஶ நிதி: ।)

26. தர்மாதி 4 களின் அபிமாநி தேவர்களின் த்யாநம்.

யமன் 1, வாயு 2, ஈசாநன் 3, இந்திரன் 4, இந்த 4 தேவர்களும், தர்மம், ஞானம், வைராக்கியம், ஐசுவரியம் என்ற நான்கிற்கும் அதிதேவதைகளாவார்கள். (இவர்களின் லக்ஷணம்முதலியவைகளை, 4வது நிதியில், திக்பாலக லக்ஷணத்தில் பார்த்துக்கொள்ளவேண்டும்.)

௨௭. 𑌅𑌥 𑌅𑌧𑌰𑍍𑌮𑌾𑌦𑌿𑌚𑌤𑍁𑌷𑍍𑌕𑌸𑍍𑌯 𑌧𑍍𑌯𑌾𑌨𑌮𑍍.

(𑌪𑌾𑌞𑍍𑌚𑌰𑌾𑌤𑍍𑌰𑍇 𑌪𑌾𑌦𑍍𑌮𑌸𑌂𑌹𑌿𑌤𑌾𑌯𑌾𑌂)

𑌅𑌧𑌰𑍍𑌮𑌾𑌦𑍍𑌯𑌾𑌸𑍍𑌤𑍁 𑌪𑌾𑌦𑍇𑌷𑍍𑌵𑍇𑌵 𑌪𑍂𑌰𑍁𑌷𑌾𑌕𑍃𑌤𑌯𑌃 𑌸𑍍𑌥𑌿𑌤𑌾𑌃 |
𑌚𑌤𑍁𑌰𑍍𑌭𑍁𑌜𑌾𑌃 𑌸𑌿𑌂𑌹𑌵𑌕𑍍𑌤𑍍𑌰𑌾𑌃 𑌸𑌿𑌤𑌪𑍂𑌰𑍍𑌵𑌾𑌰𑍁𑌣𑌾𑌃
𑌪𑌰𑍇 ‖ ௧ ‖

𑌹𑌸𑍍𑌤𑌾𑌭𑍍𑌯𑌾𑌮𑌗𑍍𑌰𑌿(𑌵𑌿)𑌮𑌾𑌭𑍍𑌯𑌾𑌂 𑌰𑌚𑌿𑌤𑌾𑌞𑍍𑌜𑌲𑌿
𑌸𑌂𑌪𑍁𑌟𑌾𑌃 |
𑌅𑌪𑌰𑌾𑌭𑍍𑌯𑌾𑌂 𑌚 𑌬𑌿𑌭𑍍𑌰𑌾𑌣𑌾𑌃 𑌕𑌰𑌾𑌭𑍍𑌯𑌾𑌂
𑌯𑍋𑌗𑌪𑍀𑌠𑌕𑌮𑍍 ‖ ௨ ‖

(𑌆𑌦𑍌 𑌶𑍍𑌵𑍇𑌤𑌵𑌰𑍍𑌣𑌾𑌃 ‖ 𑌪𑌶𑍍𑌚𑌾𑌤𑍍 𑌅𑌰𑍁𑌣𑌵𑌰𑍍𑌣𑌾𑌃 ‖)

27. அதர்மம் முதலிய 4 களின் த்யாநம்.
(பாஞ்சராத்திரத்தில் பாத்மஸம்ஹிதையில்)

அதர்மம், அஜ்ஞானம், அவைராக்கியம், அநைசுவரியம் என்ற நான்குபேர்களும், புருஷ வடிவமுடையவர்களாக 4 திக்குகளிலுமிருப்பவர்களாவார்கள். இவர்கள், 4 கைகளும், ஸிம்ஹ முகமுமுடையவர்களாவார்கள். முதலில் வெளுப்பும் பிறகு சிவப்புமான நிறமுடையவர்களாவார்கள். எதிரிலுள்ள (முக்கியமான) இரண்டு கைகளாலேயும் அஞ்ஜலிபந்தநம் செய்து கொண்டிருப்பவர்களாவார்கள். மற்ற இரண்டு கைகளாலேயும் யோகபீடத்தைப்பற்றிக்

கொண்டிருப்பவர்களாவார்கள். (இவர்கள் முகத்தில் வெளுப்பு நிறமும் சரீரத்தில் சிவப்பு நிறமுமுடையவர்களாவார்கள்)

௨அ. அத² அத⁴ர்மாதி³சதுஷ்டயாபி⁴மாநிதே³வதா சதுஷ்டய த்⁴யாநம்.

(பாஞ்சராத்ரே பாத்³மஸம்ஹிதாயாம்)

அத⁴ர்மாதி⁴பதி: நிர்ருதி: ॥ அஜ்ஞாநாதி⁴பதி: து³ர்கா³ ॥ அவைராக்³யாதி⁴பதி: காம: ॥ அநைஶ்வர்யாதி⁴பதி: ருத்³ர: ॥

அஸம்பூஜிதா அத⁴ர்மாத்³யா தா³தாரஸ்தே யதா²விதி⁴: ।
நிர்ருதிஶ்சைவ து³ர்கா³ ச காமோ ருத்³ரஸ்ததை²வ ச ॥

(ஏதேஷாம் ஸ்வரூபாணி தத்தந்மூர்த்திலக்ஷணே ப்ரதிபாதி³தாநி । வக்ஷ்யந்தே ச க்ரமேண ௪-௫-௨-௩ நிதௌ । ருத்³ர: ஶுக்ரநக்ஷத்ரதே³வதாஸு ॥ து³ர்கா³ ராஶிவத்³தே³வதாஸு)॥

28. அதர்மாதி 4 களின் அபிமாநி தேவதா த்யாநம்.

(பாஞ்சராத்திரத்தில், பாத்மஸம்ஹிதையில்)

அதர்மத்திற்கு அதிபதி நிருருதி. அஜ்ஞாநத்திற்கு அதிதேவதை துர்கை. அவைராக்கியத்திற்கு அதிதேவதை காமன். அநைசுவரியத்திற்கு அதிதேவதை ருத்திரன்.

அதர்மாதி தேவதைகளான நிருருதி, துர்கை, காமன், ருத்திரன் இவர்களைப் பூஜிக்காவிட்டால், அவர்கள் அந்த பலன்களையே (அதர்மாதிகளையே) அளிப்பார்கள். (இவர்களின் ஸ்வரூபங்கள், அந்தந்த மூர்த்தி லக்ஷணத்தில் முன்னமே கூறப்பட்டிருக்கின்றன. இனியும் முறையே 4,

5, 2, 5, நீதிகளில் கூறப்படும். ருத்திரன், ஆர்திராநக்ஷத்திர தேவதையைப்போன்ற லக்ஷணமுடையவராவார். துர்கா தேவியானவள், ரௌத்திரி வத்ஸரதேவதையைப்போன்ற லக்ஷணமுடையவளாவாள்.

௨௯. அத புண்யபுருஷலக்ஷணம்.

(காரணாகமே)

ஸிம்ஹாஸநே ஸமாஸீநம் ஸ்வர்ணவர்ணம் கிரீடிநம் ।
தேவவ்ருந்தஸ்துதாங்க்ரிஞ்ச புண்யம் ஹ்ருதி விபாவயே ॥
(ஸ்வர்ணவர்ண:)

29. புண்ணிய புருஷ லக்ஷணம்.

(காரணாகமத்தில்)

ஸிம்ஹாஸநத்தில் வீற்றிருப்பவரும், தங்கம்போன்ற சரீர காந்தியையுடையவரும், கிரீடத்தை தரித்திருப்பவரும், தேவர்களாலே தோத்திரம் செய்யப்பட்ட பாதபத்மங்களை யுடையவருமான புண்ணியாதிதேவதையை, ஹிருதயத்தில் த்யாநம் செய்கிறேன். (தங்க நிறம்)

௩௰. அத பாபபுருஷ த்யாநம்.

(வாதுளாக்யே)

ப்ரஹ்மஹத்யாஶிரஸ்கம் ச ஸ்வர்ணஸ்தேயபுஜத்வயம் ।
ஸுராபாநஹ்ருதா யுக்தம் குருதல்பகடித்வயம் ॥ ௧ ॥

தத்ஸம்யோகபதத்வந்த்வம் அங்கப்ரத்யங்கபாதகம் ।
உபபாதகரோமாணம் ரக்தஶ்மஶ்ருவிலோசநம் ॥ ௨ ॥

கட்கசர்மதரம் க்ருஷ்ணம் குக்ஷௌ பாபம் விசிந்தயேத் ।
(க்ருஷ்ணவர்ண:)

30. பாப புருஷ த்யாநம்.

(பாஞ்சராத்ரத்தில்)

பிரம்மஹத்திருபமான சிரஸ்ஸையுடையவனும், ஸுவர்ணஸ்தேய ரூபமான இரு கைகளையுடையவனும், ஸுராபாநரூபமான ஹிருதயத்தையுடையவனும், குருதல்ப ரூபமான இரண்டு பிருஷ்டபாகங்களையுடையவனும, அவர்களின் சேர்க்கையாகிற இருகால்களையுடையவனும், அதி பாதகரூபமான அங்கங்களையும் பிரத்யங்கங்களையுமுடையவனும், உபபாதகரூபமான உரோமங்களையுடையவனும், பொன்னிறமான புருவம் மீசை கண் இவைகளையுடையவனும், கத்தி கேடயங்களை தரிப்பவனும், கருப்பு நிறமாக இருப்பவனுமான பாப புருஷனை, வயிற்றில் த்யாநம் செய்யவேண்டும். (கருப்பு நிறம்)

(பிரம்மஹத்தியா–பிராமணனை கொலை செய்வது ஸுவர்ணஸ்தேயம் – தங்கத்தை திருடுவது, ஸுராபாநம் – கள்ளுக்குடிப்பது, குருதல்பம் – குருக்களுடைய மனைவிகளுடன புணர்ச்சி செய்வது, தத்ஸமயோகம் – கீழே கூறப்பட்ட 4 விதமான பாபங்களைச்செய்தவர்களுடன் பழகுவது. இவைகள் 5 விதமான மஹாபாதகங்களென்று கூறப்பட்டிருக்கின்றன)

௩௧. 𑌅𑌥 𑌬𑍃𑌹𑌸𑍍𑌪𑌤𑍇𑌃 𑌧𑍍𑌯𑌾𑌨𑌮𑍍.

(𑌤𑌨𑍍𑌤𑍍𑌰𑍇)

𑌸𑌵𑍍𑌯𑍇𑌨𑌾𑌕𑍍𑌷𑍀𑌂 𑌬𑍀𑌜𑌯𑌨𑍍𑌤𑌂(ஞீம்) 𑌏𑌷𑌯𑌾 𑌵𑍋𑌤𑍍𑌤𑌰𑍇𑌣
(𑌜𑍍𑌰𑍇𑌤𑍇𑌨) 𑌤𑍁 ।
𑌦𑍀𑌰𑍍𑌘𑌜𑌿𑌹𑍍𑌵𑌂(𑌹𑍍𑌰𑌾𑌂) 𑌪𑍀𑌤𑌵𑌸𑍍𑌤𑍍𑌰𑌂(𑌸𑍍𑌰𑌾𑌂) 𑌸𑍁𑌰𑌾𑌦𑌿
𑌬𑌹𑍁𑌜𑌾𑌨𑌵𑌂(𑌵𑍀𑌂) ॥

(𑌪𑍀𑌤𑌵𑌰𑍍𑌣𑌃 𑌬𑍃𑌹𑌸𑍍𑌪𑌤𑌿𑌃)

363

31. பிரஹ்மாஸ்திர தேவதா த்யாநம்.

(அந்த கல்பத்தில்)

வலது கையினலே சத்துருக்களை துன்புறுத்துகின்றவனும், இடது கையில் கதையை வைத்துக்கொண்டிருப்பவனும், (வலது கையில் கதையை உயர்த்திப்பிடித்து, அதனலே பகைவர்களை துன்புறுத்துகின்றவளும்) நீண்ட நாக்கையுடையவனும், (வளும்) மஞ்சள் ஆடையையணிந்திருப்பவனு (வளு) மான பகளமுகனை (முகியை) ஸ்மரிக்கின்றேன். (மஞ்சள் நிறம் பிரஸித்தம்)

அத வேதசதுஷ்டயஸ்வரூபவர்ணநம்.

(ந்ருஸிம்ஹப்ராஸாதே)

௩௨. தத்ராதௌ ருக்வேதஸ்வரூபவர்ணநம்.

ருக்வேத: ஶ்வேதவர்ணஸ்யாத் த்விபுஜோ
ராஸபாநந: ।
அக்ஷமாலாதர: ஸௌம்ய: ப்ரீதோ வ்யாக்யா
நோத்யத: ॥
(ஶ்வேதவர்ண:)

4 வேதங்களின் ஸ்வரூபம்.

(ந்ருஸிம்ஹ ப்ராஸாதத்தில்)

32. அவைகளில் முதலில் ருக்வேத ஸ்வரூபம்.

ருக்வேத புருஷன், வெளுப்பு நிறமும் 2 கைகளும் கழுதை முகமுமுடையவரும், ஜபமாலை தரித்திருப்பவரும், ஸௌமியமான ஆகிருதியுடையவரும், பிரீதியுடையவரும், விரிவாகக் கூறும் நோக்கமுடையவருமாவார். (வெளுப்பு நிறம்)

௩௩. 𑌅𑌥 𑌯𑌜𑍁𑌰𑍍𑌵𑍇𑌦𑌧𑍍𑌯𑌾𑌨𑌮𑍍.

𑌅𑌜𑌾𑌸𑍍𑌯𑌃 𑌪𑍀𑌤𑌵𑌰𑍍𑌣𑌃 𑌸𑍍𑌯𑌾𑌤𑍍 𑌯𑌜𑍁𑌰𑍍𑌵𑍇𑌦𑍋𑌽𑌕𑍍𑌷-
𑌸𑍂𑌤𑍍𑌰𑌧𑍃𑌕𑍍 ।
𑌵𑌾𑌮𑍇 𑌕𑍁𑌲𑌿𑌶𑌪𑌾𑌣𑌿𑌸𑍍𑌤𑍁 𑌭𑍂𑌤𑌿𑌦𑍋 𑌮𑌙𑍍𑌗𑌲𑌪𑍍𑌰𑌦𑌃 ॥
(𑌪𑍀𑌤𑌵𑌰𑍍𑌣𑌃)

33. யஜுர்வேத ஸ்வரூபம்.

யஜுர்வேத புருஷன், ஆட்டு முகமுடையவரும், மஞ்சள் நிறமாக இருப்பவரும், (வலது கையில்) ஜபமாலையை தரிப்பவரும், இடது கையில் வஜ்ராயுதத்தை தரிப்பவரும், செல்வத்தையளிப்பவரும், கல்யாணங்களை யளிப்பவருமாவார். (மஞ்சள் நிறம்)

௩௪ 𑌅𑌥 𑌸𑌾𑌮𑌵𑍇𑌦𑌧𑍍𑌯𑌾𑌨𑌮𑍍.

𑌨𑍀𑌲𑍋𑌤𑍍𑌪𑌲𑌦𑌲𑌾𑌭𑌾𑌸𑌃 𑌸𑌾𑌮𑌵𑍇𑌦𑍋 𑌹𑌯𑌾𑌨𑌨𑌃 ।
𑌅𑌕𑍍𑌷𑌮𑌾𑌲𑌾𑌨𑍍𑌵𑌿𑌤𑍋 𑌦𑌕𑍍𑌷𑍇 𑌵𑌾𑌮𑍇 𑌕𑍁𑌮𑍍𑌭𑌧𑌰𑌃 𑌸𑍍𑌮𑍃𑌤𑌃 ॥
(𑌶𑍍𑌵𑍇𑌤𑌵𑌰𑍍𑌣𑌃)

34. ஸாமவேத ஸ்வரூபம்.

ஸாமவேத புருஷன், நீலோத்பல தளத்தைப்போன்ற சரீரகாந்தியையுடையவரும், குதிரை முகமுடையவரும், வலது கையில் ஜபமாலையை தரிப்பவரும், இடது கையில் கலசத்தை தரிப்பவருமாவார். என்று கூறப்பட்டிருக்கின்றது. (வெளுப்பு நிறம்)

௩௫. 𑌅𑌥 𑌅𑌥𑌰𑍍𑌵𑌣𑌵𑍇𑌦𑌧𑍍𑌯𑌾𑌨𑌮𑍍.

𑌅𑌥𑌰𑍍𑌵𑌣𑌾𑌭𑌿𑌧𑍋 𑌵𑍇𑌦𑌃 𑌧𑌵𑌲𑍋 𑌮𑌰𑍍𑌕𑌟𑌾𑌨𑌨𑌃 ।

சக்ஷோருபேதோ † வாமே தக்ஷே குண்டயாச: ஸ்ம்ருத: ॥

(ஹேமாத்ரி:)

35 அதர்வணவேத ஸ்வரூபம்.

அதர்வணவேத புருஷன், வெளுப்பு நிறமுடையவரும், குரங்குமுகமுடையவருமாய், * இடது கையில் ஜபமாலையை வைத்திருப்பவரும் வலது கையில் கலசத்தை வைத்திருப்பவருமாவார். (வெளுப்பு நிறம்)

அத ருகாதிவேதபத்நீநாம் ஸ்வரூபாணி.

(ஸ்காந்தே லக்ஷ்மீநாராயணஸம்ஹிதாயாம்)

௩௬. தத்ராத்யா ருக்வேதபத்நீ ஸாமிதேநீ ஸ்வரூபம்.

மயூராஸ்யா ஶுக்லவர்ணா கமண்டலுஜபாக்ஷிகா ।
ஹஸ்தாப்யாம் ஶ்ருதிர் ஏஷா ருக்வேதஸ்ய ப்ரியாத்மிகா ॥

ஸாமிதேநீ ஸமாக்யாதா — — ॥

(ஸூக்ஷ்ம வர்ணா)

ருக்வேதாதி பத்நிகளின் ஸ்வரூபங்கள்.

(ஸ்காந்தத்தில் லக்ஷ்மீ நாராயண ஸம்ஹிதையில்)

36. அவைகளில் முதலாவது ருக்வேதபத்நியான ஸாமிதேநியின் ஸ்வரூபம்.

ருக்வேத பத்நியான ஸாமிதேநியானவள், மயில் முகமும் வெளுப்பு நிறமுமுடையவளும், இரண்டு

---

† வாமே தக்ஷே இதி வசநம் வ்யத்யஸ்தம் ஸம்ப்ரதாயஶ்ச வ்யாக்யேதி பாதி ।

* வலது கையில் ஜபமாலையும் இடது கையில் கலசமும் என்று இருந்தால் பொருத்தமாக இருக்குமென்று தோன்றுகிறது.

கடகாபரணங்களையணிந்திருப்பவளும், இரண்டு கைகளிலும் தாமரை மலரை தரிப்பவளும், நிகரற்ற மஞ்சள் பட்டாடையையணிந்திருப்பவளுமாவாளென்று கூறப்பட்டிருக்கிறது. (வெளுப்பு நிறம்)

௩௭. அத யஜுர்வேதபத்நீஸ்ருகாஸ்வரூபம்.

— — ஸ்ருகாயா லக்ஷணம் ச்ருணு |
ரக்தவர்ணா விசாலாக்ஷீ பத்மஹஸ்தா க்ருசோதரீ ||

(ரக்தவர்ணா)

37. யஜுர்வேத பத்நீ ஸ்ருகா ஸ்வரூபம்.

யஜுர்வேதத்தின் மனைவியான ஸ்ருகையின் லக்ஷணத்தைக் கேட்ப்பாயாக. இவள் சிவப்பு நிறமும் விசாலமான நேத்திரமுமுடையவளாவாள். கையில் தாமரைமலரை வைத்திருப்பவளாவாள். சிறுத்த வயிற்றையுடையவளாவாள். (சிவப்பு நிறம்)

௩௮. அத ஸாமவேதபத்நீகுஹூஸ்வரூபம்.

பூர்ணேந்துவதநா சுப்ரா ஹஸ்தத்வயவிராஜிதா |
ஸவ்யே சுகம் ததா வாமே தாந்யமஞ்ஜரிகாம் ததா ||
த்யாநா ஸா குஹூர்தேவீ — —

(ச்வேதவர்ணா:)

38. ஸாமவேத பத்நியான குஹூவின் லக்ஷணம்.

ஸாமவேத புருஷனின் மனைவியான குஹூதேவியானவள், பூர்ண சந்திரனைப் போன்ற முகத்தையுடையவளும், வெளுப்பு நிறமுடையவளும், இரண்டு கைகளுடையவளும், வலது கையில் கிளியையும் இடது கையில் நெற்கதிர்க்கொத்தையும் தரிப்பவளாவாள். (வெளுப்பு நிறம்)

௩௯. 𑌅𑌥 𑌅𑌥𑌰𑍍𑌵𑌣𑌵𑍇𑌦𑌪𑌤𑍍𑌨𑍀𑌸𑌮𑌿𑌤𑍍𑌸𑍍𑌵𑌰𑍂𑌪𑌮𑍍.

— — 𑌸𑌮𑌿𑌦𑍍𑌰𑍂𑌕𑍍𑌷𑌣𑌰𑍂𑌪𑌧𑍃𑌤𑍇 ।
𑌸𑍂𑌕𑌰𑌾𑌸𑍍𑌯𑌾 𑌚𑌕𑍋𑌰𑌾𑌕𑍍𑌷𑍀 𑌚𑌂𑌪𑌕𑌾𑌭𑌾
𑌸𑌿𑌤𑌾𑌂𑌶𑍁𑌕𑌾 ॥

𑌹𑌸𑍍𑌤𑍈𑌶𑍍𑌚𑌤𑍁𑌰𑍍𑌭𑌿𑌰𑍍𑌧𑌤𑍍𑌤𑍇 𑌸𑍍𑌰𑍁𑌕𑍍𑌸𑍍𑌰𑍁𑌵𑍌
𑌕𑌂𑌜𑌂 𑌘𑌟𑌂 ॥

(𑌕𑌨𑌕𑌵𑌰𑍍𑌣𑌾)

39 அதர்வணவேத பத்நி ஸமித் ஸ்வரூபம்.

இனி அதர்வணவேதத்தின் மனைவியான ஸமித் என்பவளின் ஸ்வரூபத்தைக் கூறுகிறேன். இவள் பன்றி முகமுடையவளும், சகோர (போத்து) பக்ஷியின் கண் போன்ற கண்ணையுடையவளும், சம்பகமலரைப்போன்ற சரீரகாந்தியையுடையவளும், வெளுப்பு நிறமான ரவிக்கையை அணிந்திருப்பவளும், 4 கைகளிலும் ஸ்ருக், ஸ்ருவம், பத்மம், குடம் இவைகளை தரிப்பவளுமாவாள். (தங்க நிறம்)

௪௰. 𑌅𑌥 𑌚𑌤𑍁𑌰𑍍𑌵𑍇𑌦𑌾𑌧𑌿𑌷𑍍𑌠𑌾𑌨𑌾𑌂 𑌗𑍋𑌤𑍍𑌰𑌾𑌦𑌿
𑌦𑍇𑌵𑌤𑌾𑌨𑌾𑌂 𑌸𑍍𑌵𑌰𑍂𑌪𑌾𑌣𑌿.

(𑌹𑍇𑌮𑌾𑌦𑍍𑌰𑍌 𑌦𑌾𑌨𑌕𑌾𑌂𑌡𑍇)

𑌋𑌗𑍍𑌵𑍇𑌦𑌸𑍍𑌯𑌾𑌤𑍍𑌰𑍇𑌯𑌂 𑌗𑍋𑌤𑍍𑌰𑌂 𑌸𑍋𑌮𑌂 𑌦𑍈𑌵𑌂 𑌵𑌿𑌦𑍁𑌰𑍍
𑌬𑍁𑌧𑌾𑌃 ।
𑌕𑌾𑌶𑍍𑌯𑌪𑌂 𑌚 𑌯𑌜𑍁𑌰𑍍𑌵𑍇𑌦𑌂 𑌰𑍁𑌦𑍍𑌰𑌦𑍈𑌵𑌂 𑌤𑌥𑌾 𑌵𑌿𑌦𑍁𑌃 ॥

𑌸𑌾𑌮𑌵𑍇𑌦𑍋𑌽𑌪𑌿 𑌗𑍋𑌤𑍍𑌰𑍇𑌣 𑌭𑌾𑌰𑌦𑍍𑌵𑌾𑌜𑌃 𑌪𑍍𑌰𑌕𑍀𑌰𑍍𑌤𑌿𑌤𑌃 ।
𑌇𑌨𑍍𑌦𑍍𑌰𑌦𑍈𑌵𑌂 𑌵𑌿𑌜𑌾𑌨𑍀𑌯𑌾𑌦𑍍𑌵𑍇𑌦𑌾𑌨𑌾𑌂 𑌸𑍍𑌯𑌾𑌦𑍍𑌯𑌥𑌾𑌕𑍍𑌰𑌮𑌮𑍍 ॥

𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑍈𑌵𑌂 𑌵𑌿𑌜𑌾𑌨𑍀𑌯𑌾𑌤𑍍 𑌸𑌰𑍍𑌵𑌵𑌰𑍍𑌣𑌸𑍍𑌯

𑌸𑍁𑌪𑌰𑍍𑌣𑌷𑍍𑌠 𑌹𑍋 ।

(𑌋𑌗𑍍𑌵𑍇𑌦𑌾𑌭𑌿𑌮𑌾𑌨𑍀 𑌸𑍋𑌮𑌃 𑌨𑌵𑌗𑍍𑌰𑌹𑌚𑌨𑍍𑌦𑍍𑌰𑌵𑌤𑍍 । ௫ நியள ॥ 𑌯𑌜𑍁𑌰𑍍𑌵𑍇𑌦𑌾𑌭𑌿𑌮𑌾𑌨𑍀 𑌰𑍁𑌦𑍍𑌰𑌃 𑌸𑍂𑌰𑍍𑌯𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌧𑌿𑌦𑍇𑌵𑌤𑌾𑌵𑌤𑍍 । ௫ நியள ॥ 𑌸𑌾𑌮𑌵𑍇𑌦𑌾𑌭𑌿𑌮𑌾𑌨𑍀 𑌇𑌨𑍍𑌦𑍍𑌰𑌃 𑌬𑍃𑌹𑌸𑍍𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌧𑌿𑌦𑍇𑌵𑌤𑌾𑌵𑌤𑍍 । ௫ நியள ॥ 𑌅𑌥𑌰𑍍𑌵𑌣𑌵𑍇𑌦𑌾𑌭𑌿𑌮𑌾𑌨𑍀 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾 𑌬𑍃𑌹𑌸𑍍𑌪𑌤𑌿𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌧𑌿 𑌦𑍇𑌵𑌤𑌾𑌵𑌤𑍍 । ௪ நியள ॥

40. நான்கு வேதங்களின் அபிமானிகளுடையவும் அவர்களின் கோத்திரங்களுடையவும் அதிதேவதைகளுடையவும் ஸ்வருபங்கள்.

(ஹேமாத்ரியில் தாநகண்டத்தில்)

ருக்வேதத்திற்கு ஆத்ரேய கோத்திரம். சந்திரன் அதி தேவதை என்று புத்திமான்கள் கூறுகிறார்கள்.

யஜுர் வேதத்திற்கு காசியப கோத்திரம். ருத்திரன் அதிதேவதை என்று கூறுகின்றனர்.

ஸாம வேதத்திற்கு பாரதுவாஜ கோத்திரம். இந்திரன் அதிதேவதையாவான்.

அதர்வ வேதத்திற்கு வைதாந கோத்திரம். பிரஹ்மா அதிதேவதை என்று அறிந்துகொள்ளவேண்டும். இவர்களின் ஸ்வருபங்களைக் கேட்பாயாக.

[ருக்வேதத்திற்கு அபிமானி தேவதையான ஸோமன், நவக்ரஹ சந்திரனைப்போன்ற ஸ்வருபமுடையவனும். 5-வது நிதி.

யஜுர்வேதாபிமானியான ருத்திரன், ஸூரியனுடைய பிரத்யதிதேவதையைப் போன்ற ஸ்வருபமுடைய வராவார். 5-வது நிதி.

ஸாமவேதாபிமானியான இந்திரன், பிருஹஸ்பதியின் அதிதேவதையைப் போன்ற ஸ்வரூபமுடையவனுவான். 5-வது நிதி.

அதர்வண வேதத்தின் அதிதேவதையான பிரஹ்மாவானவர், பிருஹஸ்பதியின் பிரத்தியதிதேவதையைப் போன்ற ஸ்வரூபமுடையவராவார். 4-வது நிதி.

௪௧. அத² ஆயுர்வேத³ஸ்வரூபம்.

(ந்ருஸிம்ஹப்ராஸாதே³)

ஆயுர்வேதோ³ ஹரித்³ராப⁴: வாநராஸ்யோ
விஶாலத்³ருக் ।
ஜபஸூத்ரம் ஸுதா⁴கும்ப⁴ம் பி³ப்⁴ராணோ(அ)பீ⁴ஷ்டதோ³
ப⁴வேத் ॥ ௧ ॥
(பீதவர்ண:)

41. ஆயுர்வேத ஸ்வரூபம்.

(நிருஸிம்ஹ பிராஸாதத்தில்)

ஆயுர்வேத புருஷன் மஞ்சள் நிறமும், குரங்கு முகமும், விசாலமான கண்ணுமுடையவனும். ஜபமாலை, அமுத கலசம் இவைகளை தரித்திருப்பவனும், மிகுந்த ஆரோக்கியத்தையளிப்பவனுமாம். (மஞ்சள் நிறம்)

௪௨. அத² ஆயுர்வேதா³தி³ஸாந்நித்⁴யதந்த்ரத்⁴யாநம்.

(ஸாமவேதே³)

ஸமிதா⁴தி³யஜ்ஞஸம்பா⁴ராந் காஶ்யபோ வேத³ஸூத்ரதாரிபி⁴: ।
உதி³திஷ்டோ மஹாராஜ ஸர்வர்ஷ: ஸப்தர்ஷிபூஜித: ॥ ௧ ॥
தீ³ர்க⁴ஜீவீ ப்ரஶாந்தாத்மா ஸம்பூர்ணோ வேத³ப்ரவர்தநே
ஸாக்ஷிண: ।

ஶ்யாமலஸ்தருண: ஸ்ரக்வீ ஸர்வாபரணபூஷித: ||

பீதவாஸா மஹோரஸ்க: ஸும்ருஷ்டமணிகுண்டல: |
ஸ்நிக்தகுஞ்சிதகேஶாந்தஸுபக: ஸிம்ஹவிக்ரம: || ௫ ||

அம்ருதாபூர்ணகலஶம் பிப்ரத்வலயபூஷித: |
ஸ வை பகவத: ஸாக்ஷாத்விஷ்ணோரம்ஶாம்ஶஸம்பவ: || ௬ ||

தந்வந்தரிரிதி க்யாத ஆயுர்வேதத்ருகிஜ்யபாக் ||
(ஶ்ரீபாகவதே)

42. ஆயுர்வேதாபிமானி தந்வந்தரி த்யாநம்.

(பாகவதத்தில்)

ஹே அரசனே! பிறகு, தேவர்களும் அஸுரர்களும் அமிருதத்தையடைவதற்காகப் பாற்கடலைக் கடைந்த பொழுது, அற்புதமான ரூபமுடைய ஓர் பரமபுருஷன், அப் பாற்கடலிலிருந்து உயரக்கிளம்பினார். அவர் நீண்டு பருத்த கைகளும், சங்குபோன்ற கழுத்தும், சிவந்த கண்களும், நீலநிறமான சரீரகாந்தியும், யௌவநத்தை அடைந்தும் அடையாததுமாகக் காணப்படும் தருணப்பருவமும், புஷ்ப மாலையும், ஸகல ஆபரணங்களையுமணிந்த அங்கங்களும், மஞ்சள் பட்டாடையும், விரிந்த மார்பும், காதுகளிலணிந்த ரத்நகுண்டலங்களும், கருத்துச்சுருண்ட கேசாந்தமும், சிறந்த அழகும், ஸிம்ஹத்தைப்போன்ற பராக்கிரமமும், வளைகளணிந்த கைகளும், கையில் தரித்த அமுதம் நிறைந்த கலசமும், ஆச்சரியகரமான ஸ்வரூபமுமுடையவருமாகக் காணப்பட்டார். மஹாவிஷ்ணுவின் அம்சாம்சத்தினால் தோன்றிய அந்த திவ்விய புருஷன், தந்வந்தரி என்று அழைக்கப்பட்டு பிரஸித்தியையடைந்தார். அவர் யஜ்ஞங்களைச்செய்து அதன் பெருமையால் ஆயுர்வேதத்தை முற்றிலும் கற்றுணர்ந்தவராவார். (நீல நிறம்)

ப்ரகாராந்தரம் ---

(ஆயுர்வேத தந்த்ரே)

தரஜலஜஜலௌகாரத்நபீயூஷகும்ப
 ப்ரகடிதகரகாந்த: காந்தபீதாம்பராட்ய: |
ஸிதவஸநவிராஜந்மௌலிராரோக்யதாயீ
 ஶதமகமணிவர்ண: பாது தந்வந்தரிர்ந: ||

(நீலவர்ண:)

மற்றொருவிதமான த்யாநம்

(ஆயுர்வேத தந்திரத்தில்)

சங்கம், பத்மம், அட்டை, அமுதம் நிறைந்த ரத்தின கலசம் இவைகளுடன் விளங்குகின்ற கைகளையுடையவரும், அழகான பீதாம்பரத்தையணிந்திருப்பவரும், வெளுப்பு வஸ்திரத்தைத் தலைப்பாகையாக அணிந்திருப்பவரும், ஆரோக்கியத்தையளிப்பவரும், இந்திர நீலக்கற்களைப் போன்று நீலமான சரீரகாந்தியையுடையவருமான தந்வந்தரியானவர், நம்மைக்காப்பாற்றுவாராக. (நீலநிறம்)

ப்ரகாராந்தரம் ---

(தந்த்ராந்தரே)

ஶங்கம் சக்ரம் ஜலௌகாம் தததம்ருதகடம் சாரு
 தோர்பிஶ்சதுர்பி:
ஸூக்ஷ்மம் ஸ்வச்சாதிஹ்ருத்யம் காஶ(ஶ்ராம்ஶுக)பரி
 விலஸந்மௌலிமம்போஜநேத்ரம் |
காலாம்போதோஜ்ஜ்வலாங்கம் கடிதடவிலஸச்சாரு
 பீதாம்பராட்யம்
வந்தே தந்வந்தரிம் தம் நிகிலகதவநப்ரௌடதாவாக்நிலீலம் ||

(நீலவர்ண:)

மற்றொருவிதம் — (மந்த்ராகமத்தில்)

சங்கம், சக்கிரம், அட்டை, அமிருதகலசம் இவைகளை 4 கைகளிலும் தரிப்பவரும், மெல்லியதும் தூயவெண்மை நிறமுடையதும் மனோஹரமாக இருப்பதுமான வஸ்திரத்தைத் தலையில் சுற்றியணிந்துகொண்டு விளங்குகின்றவரும், தாமரை மலர்போன்ற கண்களையுடையவரும், நீருண்ட மேகத்தைப்போன்று நீலமான சரீர காந்தியை யுடையவரும், அழகான பீதாம்பரத்தை இடுப்பிலணிந்து விளங்குகின்றவரும், ஸகல வியாதித் தொகுதியையும் காட்டுத்தீயைப்போல அறவே அழிப்பவருமான தந்வந்தரியை வணங்குகின்றேன். (நீல நிறம்)

ஆகாராந்தரேண த்யாநம் —
(வைத்யசாஸ்த்ரே)

ஶங்கம் சக்ரம் உபர்யுபரி கரயோ: திவ்யௌஷதிம்
தக்ஷிணே
வாமே நாந்யகரேண ஸம்ப்ருதஸுதாகும்பம்
ஜலூகாவலிம் ।
பிப்ராண: கருணாகர: ஶுபகர:
ஸர்வாமயத்வம்ஸக:
ஸர்வாந்தே(த்ரா)ஶ்ரிதம் ஹிந்த்ஸு ஹரவாது
யஸ்மாத்தரி: ஸந்தத॥
(நீலவர்ண:)

மற்றுமோர் விதமான த்யாநம் —
(வைத்திய சாஸ்திரத்தில்)

மேலேயுள்ள இரு கைகளிலும் சங்கத்தையும் சக்கிரத்தையும் தரிப்பவரும், கீழேயுள்ள இரு கைகளில் வலது கையில் திவ்யமிஷதியை தரிப்பவரும், இடது

கையில் சுத்தமான அமுதகலசத்தை தரிப்பவரும், அட்டைகளின் வரியை வஹிப்பவரும், கருணைக்கடலாக இருப்பவரும், க்ஷேமத்தையளிப்பவரும், ஸகல ரோகங்களையும் நாசம் செய்கின்றவருமான பகவான் தந்வந்தரியானவர், நம்முடைய தீமைகள் யாவற்றையும் எப்பொழுதும் நாசம் செய்வாராக. (நீல நிறம்)

௪௨. 𑌅𑌥 𑌧𑌨𑍁𑌰𑍍𑌵𑍇𑌦𑌸𑍍𑌵𑌰𑍂𑌪𑌮𑍍.
(𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌪𑍍𑌰𑌸𑌾𑌦𑍇)

𑌪𑍀𑌤𑌵𑌰𑍍𑌣𑍋 𑌧𑌨𑍁𑌰𑍍𑌵𑍇𑌦𑌃 𑌪𑌿𑌕𑌵𑌕𑍍𑌤𑍍𑌰𑍋 𑌮𑌹𑌤𑍍𑌤𑌨𑍁𑌃 ।
𑌧𑌨𑍁𑌰𑍍𑌬𑌾𑌣𑌧𑌰𑍋 𑌰𑍌𑌦𑍍𑌰𑌃 𑌮𑌸𑍍𑌤𑌕𑍇 𑌕𑌪𑌿𑌲𑌜𑌟𑌾𑌃 ॥
(𑌪𑍀𑌤𑌵𑌰𑍍𑌣𑌃)

43. தநுர்வேத ஸ்வரூபம்.
(ந்ருஸிம்ஹபிராஸாதத்தில்)

தநுர்வேதாபிமானி புருஷன், மஞ்சள் நிறமும், குயில் முகமும், பருத்த உடம்பும், பயங்கரமான ஆக்ருதியும், சிரஸ்ஸில் மஞ்சள் நிறமான சடைகளுமுடையவரும், வில், அம்புகளை தரித்திருப்பவருமாவார். (மஞ்சள் நிறம்)

௪௩. 𑌅𑌥 𑌧𑌨𑍁𑌰𑍍𑌵𑍇𑌦𑌾𑌭𑌿𑌮𑌾𑌨𑍀𑌨𑍍𑌦𑍍𑌰𑌦𑍇𑌵𑌤𑌾 𑌧𑍍𑌯𑌾𑌨𑌮𑍍
(𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌪𑍍𑌰𑌸𑌾𑌦𑍇 𑌮𑌯𑍂𑌖𑍇 𑌚)

𑌶𑍍𑌵𑍇𑌤𑌹𑌸𑍍𑌤𑌿𑌸𑌮𑌾𑌰𑍂𑌢𑌂 𑌵𑌜𑍍𑌰𑌾𑌂𑌕𑍁𑌶𑌲𑌸𑌤𑍍𑌕𑌰𑌮𑍍 ।
𑌸𑌹𑌸𑍍𑌰𑌨𑍇𑌤𑍍𑌰𑌂 𑌪𑍀𑌤𑌾𑌭𑌂 𑌇𑌨𑍍𑌦𑍍𑌰𑌂 𑌹𑍃𑌦𑌿 𑌵𑌿𑌭𑌾𑌵𑌯𑍇 ॥
(𑌪𑍀𑌤𑌵𑌰𑍍𑌣𑌃)
(𑌶𑌸𑍍𑌤𑍍𑌰𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌾𑌧𑌿𑌦𑍇𑌵𑌤𑌾𑌵𑌰𑍍𑌗𑌃 । 𑌇𑌨𑍍𑌦𑍍𑌰𑌃)

44. தநுர்வேதாபிமாநியான இந்திரனின் த்யாநம்.
(ந்ருஸிம்ஹபிராஸாதத்திலும், மயூகத்திலும்)

வெள்ளை வாரணத்தின்மீது வீற்றிருப்பவனும், வஜ்ரம்,

அங்குசங்களை கைகளில் வைத்துக்கொண்டிருப்பவனும், ஆயிரம் கண்களையுடையவனும், மஞ்சள் நிறமாக இருப்பவனுமான இந்திரனை, ஹிருதயத்தில் த்யானம் செய்கின்றேன். (நீல நிறம். சுக்கிரனின் பிரத்தியதி தேவதையைப்போல. 5வது நிதியில்)

அத வேதாங்காபிமாநி தேவதாஸ்வரூபாணி.

(ந்ருஸிம்ஹப்ரஸாதே)

௪௫. அத ஶிக்ஷாஸ்வரூபம்.

ஶிக்ஷா ஶுப்ராபயகரா ஜ்ஞாநமுத்ராஸமந்விதா ।
த்ர்ய(ஸா)க்ஷஸூத்ரா ஸகமண்டலா(ஶ்ரீ) ச ஷட்புஜா
தண்டபத்மகா ॥

(ஶுப்ரவர்ணா)

வேதஷடங்காபிமாநி தேவதா ஸ்வரூபங்கள்.

(ந்ருஸிம்ஹபிராஸாதத்தில்)

45. சிக்ஷையின் ஸ்வரூபம்.

சிக்ஷாதேவியானவள், வெளுப்பு நிறமுடையவளாவாள். அபயஹஸ்தமும் ஜ்ஞானமுத்திரையும் வஹிப்பவளாவாள். 3 கண்கள், ஸூத்திரம் இவைகளையுடையவளாவாள். (ஜப மாலையை வஹிப்பவளாவாள்) கமண்டலத்தை தரிப்பவளாவாள். 6 கைகளுடையவளாவாள். தண்டம், பத்மங்களை தரிப்பவளாவாள்.

(சிக்ஷா தேவியானவள், வெளுப்பு நிறமும், 6 கைகளுமுடையவளாவாள். கைகளில் அபயம் 1, ஜ்ஞான முத்திரை 2, ஜபமாலை 3, கிண்டி 4, யோகதண்டம் 5, பத்மம் 6 இவைகளை தரித்திருப்பவளாவாள் என்பது பொருள்]

௪௬. அத² ஶிக்ஷாபி⁴மாநிதே³வதாப்ரஜாபதித்⁴யாநம்.

ஹம்ஸயாநேந கர்தவ்ய: ந ச காயயுக்தசதுர்முக: ।
ஸாவித்ரீ தஸ்ய கர்தவ்யா வாமோத்ஸங்க³க³தா ஶுபா⁴ ॥
ப்³ரஹ்மோக்தம் ஸகலம் ரூபம் ஸர்வம் கார்யம்
ப்ரஜாபதே: ।

(பாத்³மஸம்ஹிதாயாம் । பஞ்சப்³ரஹ்மஸு ப்ரஜாபதி ப்³ரஹ்மவத் । ௪ நிதி:.)

46. சிக்ஷாபிமாநிதேவதாபிரஜாபதி த்யாநம்.

சிக்ஷாபிமாநிதேவதை, பிரஜாபதியாவார். இவரை ஹம்ஸவாஹநத்துடன் கல்பிக்கவேண்டும். 4 முகங்களுடன் கல்பிக்கக்கூடாது. (ஒரே முகத்துடன் கல்பிக்கவேண்டும் என்பது பொருள்) அவருடைய இடதுமடியில், ஸாவித்திரீ தேவியைக்கல்பிக்கவேண்டும். பிரஜாபதியை, பிரஹ்மாவுக்குக் கூறப்பட்ட ஸகல லக்ஷணங்களுடனும் கல்பிக்கவேண்டும். [வெண்சிவப்பு நிறம். பஞ்ச பிரஹ்ம தேவர்களில், பிரஜாபதி பிரஹ்மாவைப்போன்ற ஸ்வரூபமுடையதாகும். 4வது நிதியில்]

௪௭. அத² கல்பஸ்வரூபம்.

கல்பஸ்து கோகநதா³ப⁴ஸ்ஸ்யாத்³வாயஸாஸ்யோ மஹோத³ர: ।
குடா²ரத³ண்டா³ப்³ஜஹஸ்தோ மேக²லாகாஞ்சநாந்வித: ॥

(காஶ்யபஶில்பே)

47. கல்ப ஸ்வரூபம்.

கல்பபுருஷன், ஆம்பல் நிறமும், காக்கையின் முகமும், பெருவயிறுமுடையவனுவான். கோடரி, தடி, பத்மம் இவைகளை கைகளில் தரிப்பவராவார். மேகலை

(இடுப்பில் கட்டிக்கொள்ளும் முஞ்சிப்புல் கயிறு), குண்டலம் இவைகளை தரித்திருப்பவராவார். (ஆம்பல் நிறம்).

௪௮. 𑌅𑌥 𑌕𑌲𑍍𑌪𑌾𑌦𑌿𑌬𑍍𑌰𑌹𑍍𑌮 𑌧𑍍𑌯𑌾𑌨𑌮𑍍.

(𑌶𑍈𑌵𑌾𑌗𑌮𑍇)

𑌚𑌤𑍁𑌰𑍍𑌮𑍁𑌖𑌂 𑌚𑌤𑍁𑌰𑍍𑌬𑌾𑌹𑍁𑌂 𑌕𑌮𑌣𑍍𑌡𑌲𑍍𑌵𑌕𑍍𑌷𑌧𑌾𑌰𑌿𑌣𑌮𑍍 ।
𑌯𑌜𑍍𑌞𑌸𑍂𑌤𑍍𑌰𑍋𑌤𑍍𑌤𑌰𑍀𑌯𑌂 𑌚 𑌜𑌟𑌾𑌮𑌕𑍁𑌟𑌸𑌂𑌯𑍁𑌤𑌮𑍍 ॥

𑌸𑌵𑍍𑌯𑌹𑌸𑍍𑌤𑍇𑌽𑌕𑍍𑌷𑌮𑌾𑌲𑌾𑌂 𑌚 𑌦𑌯𑌂(𑌯𑌾𑌮𑌂) 𑌵𑌾𑌮𑍇 𑌕𑌮𑌣𑍍𑌡𑌲𑍁𑌮𑍍 ।
𑌸𑍍𑌰𑍁𑌵𑌂 𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑌹𑌸𑍍𑌤𑍇 𑌚 𑌪𑍁𑌸𑍍𑌤𑌕𑌂 𑌵𑌾𑌮𑌹𑌸𑍍𑌤𑌕𑍇 ॥

𑌅𑌮𑍍𑌬𑍁𑌜𑌾𑌸𑌨 𑌸𑌮𑌾𑌸𑍀𑌨𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾𑌣𑌂 𑌹𑌸𑌿𑌤𑌾𑌨𑌨𑌮𑍍 ।

(𑌪𑌾𑌟𑌲𑌵𑌰𑍍𑌣𑌃 । 𑌤𑍍𑌰𑌿𑌮𑍂𑌰𑍍𑌤𑍍𑌯𑌨𑍍𑌤𑌰𑍍𑌗𑌤𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌵𑌤𑍍 । ௪ 𑌨𑌿𑌧𑍌 ॥)

48. கல்பாதிப்ரஹ்ம தியானம்.

(சைவாகமத்தில்)

4 முகங்களும், 4 கைகளுமுடையவரும், கமண்டலம்–ஜபமாலைகளை தரிப்பவரும், யஜ்ஞஸூத்திரம், உத்தரீயங்களையணிந்திருப்பவரும், சடைமுடியுடன் கூடியவரும், வலதுகையில் ஜபமாலையும், இடதுகையில் கமண்டலத்தையும், வலதுகையில் ஸ்ருவத்தையும், இடதுகையில் புஸ்தகத்தையும் தரிப்பவரும், பத்மாஸநத்தில் வீற்றிருப்பவரும், சிரித்த முகமுடையவருமான பிரஹ்மதேவரை (கல்பிக்கவேண்டும்). [வெண்சிகப்பு நிறம். திரிமூர்த்திகளில் ஒருவரான பிரஹ்மாவைப்போன்றது. 4வது நிதியில்.]

४८. अथ व्याकरणस्वरूपम्।

सितं व्याकरणं ज्ञेयं मयूरसदृशोदरम्।
वीणाकराञ्चितं दिव्यं दिव्यवस्त्रविभूषितम् ॥

(सांख्यायनः)

49. வியாகரண ஸ்வரூபம்.

வியாகரண புருஷன், வெளுப்பு நிறமும், மயிலைப் போன்ற சடையுடன்கூடிய வயிறும், வீணையை தரித்த கையும், தெய்வத்தன்மையுமுடையவரும், திவ்வியமான வஸ்திரத்தை தரித்திருப்பவருமாவார். (வெளுப்பு நிறம்)

५०. अथ व्याकरणाभिमानि सरस्वतीध्यानम्।

(शौनकः)

दोर्भिर्युक्ता चतुर्भिः स्फटिकमणिमयीमक्षमालां
दधाना
हस्तेनैकेन पद्मं सितमपि च शुकं
पुस्तकं चापरेण।
भासा कुन्देन्दुशङ्खस्फटिकमणिनिभा *भासमाना
समाना
सा मे वाग्देवतेयं निवसतु वदने
सर्वदा सुप्रसन्ना ॥

(श्रुतपञ्चाशत्)

50. வியாகரண அபிமானி ஸரஸ்வதீ த்யாநம்.

4 கைகளையுடையவளும், ஒரு கையில் ஸ்படிக மணிகளாலான ஜபமாலையையும், மற்ருெரு கையில்

---

* भासमाना समाना इत्यत्र पुस्तकपाठान्तरीया इत्यपि पाठो भवति।

தாமரை மலரையும், வேறொரு கையில் வெள்ளைக் கிளியையும், மற்றுமோர் கையில் புஸ்தகத்தை தரிப்பவளும், முல்லைப்பூ, சந்திரன், சங்கு, ஸ்படிகமணி இவைகளைப் போன்ற சரீரகாந்தியையுடையவளும், நிகரற்று விளங்குகின்றவளும், (வெண்மையான ஆடையையும் மேலாடையையும் அணிந்திருப்பவளும்) வாக்குக்கு அதிதேவதையுமான அந்த ஸரஸ்வதீ தேவியானவள், எப்பொழுதும் ஸுப்ரஸன்னையாக (அருள் செய்பவளாக) என்னுடையமுகத்தில் (நாவில்) வஸிப்பாளாக. (வெளுப்பு நிறம்)

௫௧. அத நிருக்தஸ்வரூபம்.

இந்துவச்சுப்ரம் ஶாந்தம் பகவக்த்ரம் க்ருஶோதரம் |
பாஶபங்கஜஸம்யுக்தம் ஸாக்ஷஸூத்ரம் ஸபுஸ்தகம் ||
நிருக்தமிதி நிர்ணீதம் ... ... ||
(ஶுப்ரவர்ணம்)

51. நிருக்த ஸ்வரூபம்.

நிருக்த புருஷனுடைய ஸ்வரூபமானது, சந்திரனைப் போல தூய்மையானதும், சாந்தமாக இருப்பதும், கொக்கு முகமுடையதும், ஒட்டிய வயிறுடையதும், பாசம், பத்மம், ஜபமாலை, புஸ்தகம் இவைகளை தரித்திருப்பதுமாகும் என்று நிச்சயிக்கப்பட்டுள்ளது. (வெளுப்பு நிறம்)

௫௨. நிருக்தாதிதேவதாவர்ணஸ்வரூபம்.
(யோகெ)

நாகவாஶயரோ ரக்தஹம்ஸேக்ஷண: வஹ்நிதீவ்ரய: |
வர்ணாம்பரபக்தி: ஸுவர்ணவர்ணா: ஶுகவாஹன: ||
(ஶுகவர்ண:)
[ஶிவாசார்யாத்ருதவர்ணவஶ் | ஸ்தீயன]

52. நிருக்த அதிதேவதையான வருணனின் ஸ்வரூபம்.

(மயூகத்தில்)

வருணனானவர், நாகபாசத்தை தரிப்பவரும், ரத்நங்கள் பதித்த ஆபரணங்களை அணிந்திருப்பவரும், பத்மினியின் கணவனாக இருப்பவரும், ஜலத்திற்கு யஜமானனாக இருப்பவரும், மகரமத்ஸியத்தை வாஹனமாகக்கொண்டவருமாவார். [தங்க நிறம். திக்பாலகர்களிலுள்ள வருணனைப்போன்றதாம். 4வது நிதியில்]

௫௩. அத ச்சந்த:ஸ்வரூபம்.

ஜபாகுஸுமஸங்காஶம் ஹோத்ரா ஜ்ஞேயம் விசக்ஷணை: |
சகோராஸ்யம் ஜபாபுஷ்பம் ஶக்திம் பிப்ரச்
ஶிகாந்விதம் ‖ ௧ ‖

லோஹகுண்டலகோபேதம் ப்ரவாலக்ருதபூஷணம் ‖
(ரக்தவர்ணம்)

53. ச்சந்தஸ் ஸ்வரூபம்.

ச்சந்தோ தேவதையானது, சம்பரத்தம்பூவைப் போன்ற நிறமும், சகோர (போத்து) பக்ஷியின் முகமுமுடையதாம். சம்பரத்தம்பூவையும் சக்தியாயுதத்தையும் தரித்துக்கொண்டிருப்பதாம். தலையில் சிகையுடையதாம். லோஹத்தினாலான குண்டலங்களையணிந்திருப்பதாம். பவழங்களாலான ஆபரணங்களையணிந்திருப்பதாம்.)சிவப்பு நிறம்)

௫௪. ஹோத்ராதிருத்விக்தேவதாஸ்வரூபம்.

ருத்விக்: பீதவர்ணாபஶ்ச ஹ்ரஸ்வகேஶோ ஹ்ரஸ்வாக்ஷ
கர்ணமுகோ |

டியர்நா ஶுஹா ஜெ ஸூாக ஜெவஜாதா யஶஸ்வினீ ||

(வீதவர்ண-ா | வ-நவ-ஷ்லயிஜெவதாவக| ரு-நியள)

54. ச்சந்தோபிமாநி அதிதி தேவதா ஸ்வரூபம்.

ச்சந்தஸ்ஸுக்கு அபிமாநி தேவதை, அதிதியாவாள். அவள், மஞ்சள் நிறமுடையவளாவாள். ஸ்ருக், ஸ்ருவம், ஜபமாலே, கமண்டலம் இவைகளை தரித்திருப்பவளாவாள். புகழுடையவளும், தேவமாதாவுமான இவள், எனக்கு ஸகல மங்களங்களையும் கொடுப்பாளாக. (மஞ்சள்நிறம். புனர் வஸு நக்ஷத்திரத்தின் அதிதேவதையைப் போன்றதாம். 5வது நிதியில்)

ருரு. அய ஜெ்யாதிஷஸ்வ-வழ.

ஜெ்யாதிஷம் வ விசாலூாவஸ்வஹை-ஹொவநிஹம் ஶுஹம் |

அக்ஷஸூத்ரம் ஜவாம் விஹு,க ஹஸ்தயொர-க்ஷ வாஜயொஃ || க ||

(ரக்தவண-ஃ)

55. ஜ்யோதிஷ ஸ்வரூபம்.

ஜ்யோதிஷ புருஷஸ்வரூபமானது, பூர்ணமுகமும், பட்டு பூச்சியைப்போன்ற நிறமும், மங்களகரமான ஸ்வபாவமும் உடையதாம். வலது கையில் ஜபமாலேயையும், இடது கையில் சம்பரத்திப்பூவையும் தரித்துக்கொண்டிருப்பதாம். (சிவப்பு நிறம்)

ருசு. அய ஜெ்யாதிஷாஹிஜாநிஹஸிஸ்வ-வழ.

(வாஞுஸாதெ,)

ஹஸிஃ கநகவண-ஃ ஸூாக ஶுவகர,மஹாஜுஹ்ஸக |

(கநகவண-ஃ | ஷுதஶுவி-ஶிதிஜஃதிஷஹஸி வக | உ நியள ||)

56. ஜியோதிஷாபிமாநி ஹரிஸ்வரூபம்.
(பாஞ்சராத்திரத்தில்)

ஜியோதிஷத்திற்கு அபிமாநி தேவதை ஹரியாவார். இவர், ஸுவர்ணம்போன்ற நிறமுடையவராவார். சங்கம், சக்கரம், கதை, பத்மம் இவைகளை தரித்திருப்பவராவார். (தங்க நிறம். 24 மூர்த்திகளுள் கூறப்பட்டிருக்கின்ற ஹரி மூர்த்தியைப்போன்றதாம். 2வது நிதியில்)

௫௬. அத ஜ்யோதிஃஶாஸ்த்ரஸ்வரூபம்.
(நரஸிம்ஹப்ராஸாதே)

ஹேமாபச்சவிஸங்காஶம் ஜ்யோதிஃஶாஸ்த்ராதிதைவதம் ।
ஶங்கசக்ரம் கதாபத்மம் ஸஹயாவஜண்டம்
வடும் வரே ॥

(ஶ்வேதவர்ண:)

57. மீமாம்ஸாசாஸ்திர ஸ்வரூபம்.
(ந்ருசிம்மப்ராஸாதம்)

மீமாம்ஸாசாஸ்திர ஸ்வரூபாபிமாநி தேவதையின் ஸ்வரூபமானது, ஸோமகீர்த்தியைப் போன்ற சரீர சோபையையுடையதாம். (ஸோமகீர்த்தி – நிலவு) வலது கையில் ஜபமாலையையும், இடதுகையில் அமுதம் நிறைந்த கடத்தையும் தரித்திருப்பதாம். (வெளுப்பு நிறம்)

௫௭. அத மீமாம்ஸாதிதேவதாஸ்வரூபம்.
(ஶைவாகமே)

ஶ்வேத: ஶ்வேதாம்பரதர: ப்ரஸந்ந: ஶ்வேதலக்ஷண: ।
மஹாவர்ணி: ஜபாக்ஷஸ்ரக் கமண்டலுவரப்ரத: ॥
(ஶ்வேதவர்ண: । நவரத்நஸம்ரூபக: । ரு நியம:)

58. மீமாம்ஸாபிமாநி தேவதையான சந்திரனின் ஸ்வரூபம்.

(சைவாகமத்தில்.)

மீமாம்ஸையின் அபிமானி தேவதை, சந்திரனுவார். இவர், வெளுப்பு நிறமுடையவராவார். வெளுப்பு வஸ்திரத்தை தரிப்பவராவார். 10 குதிரைகள் (பூட்டிய ரதத்தை வாஹநமாக) உடையவராவார். வெண்மையான ஆபரணங்களையணிந்திருப்பவராவார். கதையை கையில் வைத்திருப்பவராவார். 2 கைகளுடையவராவார். இவ்விதமாக சந்திரனைக் கல்பிக்கவேண்டும். (வெளுப்புநிறம். நவக்ரஹங்களுளுள்ள சந்திரனைப்போன்றதாம். 5வது நிதியில்.)

௫௮. அத ந்யாயசாஸ்த்ரஸ்வரூபம்.

(நரஸிம்ஹப்ரஸாதே)

அதஸீபுஷ்பஸங்காஶ: ந்யாயோ ஜ்ஞேய: விபஶ்சிதா ।
ஸிம்ஹாஸ்யோ தக்ஷிணே ஸூத்ரம் த்வஜம்
வாமகரே ததத் ॥

(நீலவர்ண:)

59 நியாயசாஸ்திர ஸ்வரூபம்.

(நருசிம்மபிரஸாதம்)

நியாயபுருஷன், காயாம்பூவைப்போன்ற நிறமும், ஸிம்ஹ முகமுமுடையவராவார். வலது கையில் ஜபமாலையையும், இடதுகையில் துவஜத்தையும் தரித்திருப்பவராவார். என்று அறிவாளிகள் அறிந்துகொள்ளவேண்டும். (நீலநிறம்)

௫௯. அத ந்யாயஶாஸ்த்ராபிமாநிதேவதாஸ்வரூபம்.

(ஶைவாகமே)

யாவஸ்ஹஸிணாரூடம் விஹஜம் த்வஜயாஸிணம் ।
வாஷாநகாரம் யூத்ரவண்டும் வாயுஹம் ஹஜெ ॥

(யூத்ரவண்டு: । வணுஹதஷ்ஸவாயுவஸ ।
ச நியள ॥)

60 நியாயசாஸ்திராபிமாநி வாயு ஸ்வரூபம்.

ஓடுகின்ற மான்மேலே வீற்றிருப்பவரும், 2 கைகள் உடையவரும், துவஜத்தை கையில் தரிப்பவரும், வரத ஹஸ்தமுடையவரும், புகை நிறமாக இருப்பவருமான வாயுவை, நான் ஸேவிக்கின்றேன். (புகை நிறம்)

௬௧. அய யஊஶாஸ்ஹவூவிஷ.

(ஸ்ரீவிஷ்ணுவாஷாஷெ)

யஊஶாஸ்த்ரம் விதம் ஶாந்தம் வாவக்ஷும் காஶாஸநம் ।
உக்தாஜவாக்ஷயூகீ ஷிகெஷ தூஹாஷஸ்ம் தூ
வாஉத: ॥

(ஶ்வேதவண்டு:)

61. தர்ம சாஸ்திர ஸ்வரூபம்.

(நிருஸிம்மபிரஸாதம்)

தர்ம சாஸ்திரமானது, (தர்ம சாஸ்திர புருஷ ஸ்வரூபமானது) வெளுப்பு நிறமும், சாந்தமான ஸ்வரூபமும், அழகான முகமும், குசாஸநமுமுடையதாம். வலதுகையில் முத்துக்களினுலான ஜபமாலையும், இடதுகையில் தராசையும் வைத்துக்கொண்டிருப்பதாம். (வெளுப்பு நிறம்.)

௬௨. அய யஊஶாஸ்ஹாஹிஶாநி

யஊவாஹஷவூவிஷ.

(ஹெரா உூள ஷாகாஂபெ)

வத்ரவக்த்ரசதுர்பாஹு: வத்ரஷாஷ்ட ஸிதாம்பர: ।
ஸர்வாபரணஸம்பந்ந: ஶ்வேத: யஜ்ஞ: ப்ரகீர்த்திதோ விஜாநதா ॥

தக்ஷிணே பாகஸூத்ரம் ஹஸ்தம் தஸ்ய வாமே து புஸ்தகம் ।
வராபயயுத: கார்ய: — — ॥

(ஶ்வேதவர்ண:)

62. தர்ம சாஸ்திராபிமாநி தர்மபுருஷ ஸ்வரூபம்.

(ஹேமாத்ரியில் தாநகாண்டம்)

தர்மதேவதா புருஷன், 4 முகங்களும், 4 கைகளும், 4 கால்களுமுடையவராவார். வெண்மையான ஆடையை யணிந்து, ஸகல ஆபரணங்களையுமணிந்து, வெளுப்பு நிறமாக இருப்பவராவார். வலதுகையில் ஜபமாலையையும், இடதுகையில் புஸ்தகத்தையும் தரித்து, வரதம் அபயங்களை யும் தரிப்பவராவார். தர்மபுருஷனை இவ்விதமாகக் கல்பிக்கவேண்டும். (வெளுப்பு நிறம்.)

௬௩. அத புராண ஸ்வரூபம்.

(நரஸிம்ஹப்ராஸாதே)

புராணம் சம்பகாகாரம் ஶுகவக்த்ரம் ச துந்திலம் ।
அக்ஷஸூத்ராபயம் ஜ்ஞேயம் நாநாவர்ணவிபூஷிதம் ॥

(சம்பகவர்ண:)

63. புராண ஸ்வரூபம்.

(ந்ருசிம்மபிராசாதம்)

சம்பகம் போன்ற சரீரசோபையையுடையவரும், கிளி முகமும் செறிந்தவயிறுமுடையவரும், ஜபமாலையையும்,

அபயத்தையும் தரிப்பவரும், நாநாவிதமான ஆபரணங்களை அணிந்திருப்பவருமான புராண புருஷனை அறிந்து (கல்பித்துக்) கொள்ளவேண்டும். (சம்பகபுஷ்ப நிறம்)

௬௪. அத புராணாதிதேவதாஸ்வாயம்புவ
மனுஸ்வரூபம்.
(ஶைவாகமே ஸித்தாந்தே)

ஶுக்ல: ஸ்வாயம்புவோ ப்ரஹ்மபுத்ரோ மனுரிதி
ஸ்ம்ருத: |
(ஶ்வேதவர்ண: | அந்யேஷாம் ச மனூநாம் ரூபம் || ௪ நிதௌ ||)

64. புராணாதிதேவதை ஸ்வாயம்புவமநு ஸ்வரூபம்.
(சைவாகமத்தில் ஸித்தாந்தத்தில்)

பிரஹ்மாவின் புதல்வனான ஸ்வாயம்புவமநுவானவர், முதலாவது மநுவாவார். என்று கூறப்பட்டிருக்கிறது. (வெளுப்பு நிறம். மற்ற யாவும் 14 மநுக்களுள் கண்டு கொள்ளவேண்டும். 4வது நிதியில்)

௬௫. அத இதிஹாஸஸ்வரூபம்.
(ந்ருஸிம்ஹப்ராஸாதே)

இதிஹாஸ: ஶ்யாமாபாஸ: ஸஶ்மஶ்ருர்விஶ்வ
ஸ்மேராநந: |
அக்ஷஸூத்ரம் படம் பிப்ரத் பங்கஜாஸ(ஹ)
நாஞ்சித: ||
(த்விபுஜ: ஶ்யாமவர்ண:)

25 65. இதிஹாஸ ஸ்வரூபம்.
(ந்ருஸிம்ஹப்ராஸாதத்தில்)

இதிஹாஸ புருஷனானவர் குசப்புல்லின் நிறமுடைய வரும், பன்றி முகமுடையவரும், பெருவயிறுடையவரும், ஜபமாலையையும் குடத்தையும் தரிப்பவரும், தாமரை மலர்களினாலே சூழப்பட்டவருமாவார். (பத்மாபரணத்தை அணிந்திருப்பவருமாவார்.) (அருகம்புல்லைப்போன்று பசுமையான நிறம்.)

௬௬. அத இதிஹாஸாதிதேவதா

ப்ரஜாபதிஸ்வரூபம்.

(ந்ருஸிம்ஹப்ரஸாதே)

ஹம்ஸயாநேந கர்த்தவ்ய: ந ச காயஶ்சதுர்முக: |
ஸாவித்ரீ தஸ்ய கர்த்தவ்யா வாமோத்ஸங்கதா ஶுபா ||

ப்ரஹ்மோக்தம் பரம் ரூபம் ஸர்வம் கார்யம்
ப்ரஜாபதே: |

(பாடபேதம்: பஞ்சப்ரஹ்மஸு ப்ரஜாபதி ப்ரஹ்மவத் || 4 வீதியா.)

66. இதிஹாஸாதி தேவதையான பிரஜாபதி ஸ்வரூபம்.

(ந்ருஸிம்மப்ரஸாதத்தில்)

இதிஹாஸத்திற்கு அதிதேவதை பிரஜாபதியாவார். இவரை ஹம்ஸவாஹனத்துடன் கல்பிக்கவேண்டும். 4 முகங்களுடன் கல்பிக்கக்கூடாது. (ஒரே முகத்துடன் கல்பிக்க வேண்டும் என்பது பொருள்.) இவருடைய இடது மடியில் ஸாவித்திரி தேவியை அழகாகக் கல்பிக்கவேண்டும். இந்த பிரஜாபதிக்கு, ப்ரஹ்மாவுக்குக் கூறியுள்ள ஸகல ஆபரணங்களையும் கல்பிக்கவேண்டும். (வெண் சிவப்பு நிறம். பஞ்சபிரஹ்மாக்களில் கூறியிருக்கின்ற பிரஜாபதி பிரஹ்மாவைப் போன்றதாகும். 4வது வீதியில்.)

௬௭. அத பரதசாஸ்த்ரஸ்வரூபம்.

(ந்ருஸிம்ஹப்ராஸாதே)

ந்ருத்தசாஸ்த்ரமிதம் ரம்யம் ம்ருகவக்த்ரம் ஜடாதரம் |
அக்ஷமாலாத்ரிஶூலம் ச பிப்ராணம் ச
த்ரிலோசனம் ||

(ஶ்வேதவர்ணம்)

67. பரதசாஸ்திர ஸ்வரூபம்.

(ந்ருஸிம்மப்ராஸாதத்தில்)

இந்த ந்ருத்தசாஸ்திரமானது, ரமணீயமானதும், மான் முகமுடையதும், சடையை தரிப்பதும், ஜபமாலை முச்சூலங்களை தரிப்பதும், 3 கண்களுடையதுமாகும். (வெளுப்பு நிறம்.)

௬௮. அத பரதசாஸ்த்ராபிமானி உமாமஹேஶ்வரஸ்வரூபம்.

(காரணாகமே)

யஸ்ய ஹஸ்தவாஸநதேவ்யாஶ்ரிதம்
ம்ருகஶிர(ஶூலவர)டங்கவராபயஹஸ்தம்(கம்) |
ஸர்வாலங்கார(யுக்த)தம் துக்ர்த்த(கம் ச)ரக்தம்
உமயா ஸஹ தேவதேஶமுபதிஷ்டம் ||

(ஶ்வேதவர்ணா:)

68. பரதசாஸ்திராபிமானி உமாமஹேஸ்வர ஸ்வரூபம்

(காரணகமத்தில்)

பரதசாஸ்திரத்திற்கு அபிமானிதேவதை, உமா மஹேசுவரனுவார். அவருடைய ஸ்வரூபமானது, வெளுப்பு

விரமானதும், ஸுகாஸனத்திலிருப்பதும், தேவியுடனிருப்பதும், கைகளில் மழு, மான், வரம் அபயங்களை தரிப்பதுமாம். பார்வதி தேவியின் மூர்த்தியானது நீலோத்பலமும், வரதமும் தரிப்பதாம். இவ்வித ஸ்வரூபமானது உமா ஸஹிதமூர்த்தியின் ஸ்வரூபமாகும். (வெளுப்பு நிறம்)

௬௮. அத பாஞ்சராத்ரஸ்வரூபம்.

(ந்ருஸிம்ஹப்ராஸாதே)

பாஞ்சராத்ராதிபம் ஸௌம்யம் ஸுவர்ணம் வ்ருஷவாஹநம் |
அக்ஷமாலாஞ்ச ஹலம் பிப்ரச் வநமாலாவிபூஷிதம் ||

(ஹேதவணநீ)

69. பாஞ்சராத்ர சாஸ்திர ஸ்வரூபம்.

(நிருசிம்மப்ராசாதத்தில்)

பாஞ்சராத்ரமென்னும் சாஸ்திரமானது (பாஞ்சராத்ர சாஸ்திரத்திற்கு அதிதேவதையான புருஷ ஸ்வரூபமானது) அழகான விருஷப வாஹனத்தில் வீற்றிருப்பதும், ஜபமாலையையும் கலப்பையையும் தரித்திருப்பதும், வனமாலையை அணிந்துகொண்டிருப்பதுமாகும். (வெளுப்பு நிறம்)

௭௦. அத பாஞ்சராத்ராஸ்த்ராதிதேவ ஸங்கர்ஷணஸ்வரூபம்

(ஹயசீர்ஷஸம்ஹிதே)

பாஞ்சராத்ரஸ்ய வக்த்ரேண காயேந ஸங்கர்ஷணஃ ப்ரபுஃ |
ஸ து ஸாக்ஷாத்வராஹஃ காயேந நீலவாஸா யதோத்தமஃ ||

முஸலாஸ்த்ரேண ச சாபம் சக்ராஸ்த்ரேண ச ஶங்கம் |

दक्षोर्ध्वकरे शङ्खं दक्षाधःकरे तु मुसलं
वामाधःकरे शार्ङ्गं वामोर्ध्वकरे तु लाङ्गलं ॥
(श्रीतत्त्वनिधौ ॥ [illegible] ॥ [illegible] ॥

70 பாஞ்சராத்ர சாஸ்திராபிமானி ஸங்கர்ஷண ஸ்வரூபம்,
(பட்டபாஸ்கரியத்தில்)

பெருந்தகைமை வாய்ந்த ஸங்கர்ஷண மூர்த்தியை, வாஸுதேவனைப்போன்ற ஸ்வரூபத்துடன் கல்பிக்க வேண்டும். அவரை, வெண்மையான சரீர காந்தியை யுடையவராகக் கல்பிக்கவேண்டும். யதாத்தபனுனவர். (ஸங்கர்ஷணமூர்த்தியானவர்) நீலமான ஆடையை தரித்திருப்பவராவார். கதையின் ஸ்தானத்தில் உலக்கையையும், சக்ரத்தின் ஸ்தானத்தில் கலப்பையையும் கல்பிக்கவேண்டும். வலதுபக்கத்தில் மேல்கையில் சங்கத்தையும், கீழ்கையில் உலக்கையையும், இடது பக்கத்தில் கீழ்கையில் சார்ங்கத்தையும், மேல்கையில் கலப்பையையும் கல்பிக்க வேண்டும். (வெளுப்பு நிறம். வியூஹமூர்த்தியைப் போன்றதாம். 2வது நிதியில்.)

७१. अथ पाशुपतास्त्रस्वरूपम्.

(नृसिंहप्रासादे)

शस्त्रं पाशुपतं शुभ्रं [illegible]वक्त्रं
[illegible] ।
[illegible] ॥
(श्रीतत्त्वनिधौ)

71. பாசுபதாஸ்திர ஸ்வரூபம்.
(நிருஸிம்மப்ராஸாதத்தில்)

பாசுபதாஸ்திர மூர்த்தியானது, வெளுப்பு நிறமும்,

ஸர்ப முகமும், ஒட்டிய வயிறுமுடையதாம். கயிறு, பாத்திரம், இவைகளை தரித்து பயங்கரமாக இருப்பதாம், புலித்தோலாடையையணிந்திருப்பதாம். (வெளுப்பு நிறம்.)

௭௨. அத பாசுபதாஸ்த்ராபிமாநிருத்ரஸ்வரூபம்.

(மயூரே)

பஞ்சவக்த்ரோ வ்ருஷாரூட: ப்ரதிவக்த்ரம் த்ரிலோசந: |
வரதாபயசூலாக்ஷவலயாந் ப்ரதரந் கரை: ||
(ஶ்வேதவர்ண: || ஸூர்யப்ரத்யதிதேவதாவத் || பஞ்சவீத்யாம் ||)

72. பாசுபதாஸ்திர அபிமாநி ருத்திரஸ்வரூபம்.

(மயூரத்தில்)

பாசுபதாஸ்திர அபிமாநியான பரமேசுவரன், 5 முகமும் ஒவ்வொரு முகத்திலும் 3 கண்களும், விருஷப வாஹநமுமுடையவராவார். வரதம், அபயம், சூலம், ஜபமாலை இவைகளை தரிப்பவராவார். (வெளுப்பு நிறம். ஸூரியனின் பிரத்தியதிதேவதையைப் போன்றதாகும். 5வது வீதியில்.)

௭௩. அத பாதஞ்ஜலஶாஸ்த்ரஸ்வரூபம்.

(நரஸிம்ஹப்ரஸாதே)

பாதஞ்ஜலாக்யம் ரக்தம் சதுர்வக்த்ரம் ஸுதேஜஸம் |
அக்ஷஸூத்ரம் பதாகாம் ச தததம் கம்பலாஞ்சிதம் ||
(ரக்தவர்ண:)

73. பாதஞ்ஜல சாஸ்திர ஸ்வரூபம்.

(ந்ருஸிம்மப்ராஸாதத்தில்)

பாதஞ்ஜல சாஸ்திரஸ்வரூபமானது, ஸர்பமுகமும், சிறந்த பிரகாசமுமுடையதாம். ஜபமாலையையும் பதாகையை (பாவட்டாவை)யும் தரித்திருப்பதாம். குண்டலங்களையணிந்திருப்பதாம். (சிவப்பு நிறம்)

௭௪. அத பாதஞ்ஜலாதிதைவதாநந்தஸ்வரூபம்.

(அநந்தவ்ரதகல்பே)

நவாம்ரபல்லவாபாஸம் பிங்கப்ரூஶ்மஶ்ருலோசநம் ।
தக்ஷிணோர்த்வகரே பத்மம் ஶங்கம் தஸ்யாப்யத:கரே ॥
சக்ரமூர்த்வகரே வாமே கதாம் தஸ்யாப்யத: கரே ।
பிப்ரதம் புண்டரீகாக்ஷம் ஃபணாஸப்தாந்விதம் பஜே ॥
([illegible])

74. பாதஞ்ஜலாதிதேவதை அநந்த ஸ்வரூபம்.

(அநந்த விரத கல்பத்தில்)

புதிய மாந்தளிர் நிறமாக இருப்பவரும், மஞ்சள் நிறமான புருவம் மீசைகளையுடையவரும், வலது மேல் கையில் பத்மத்தையும், அதன் அடிக்கையில் சங்கத்தையும், இடது மேல் கையில் சக்கரத்தையும், அதன் அடிக்கையில் கதையையும் தரிப்பவரும், 7 படங்களுடன் கூடியவருமான புண்டரீகாக்ஷனை (தாமரைமலரைப் போன்ற கண்களையுடையவரான அநந்தனை) ஸேவிக்கின்றேன். (கோமூத்திர நிறம்)

௭௫. அத ஸாங்க்யஶாஸ்த்ராதிதைவதஸ்வரூபம்.

(நரஸிம்ஹப்ராதுர்பாவே)

ஸாங்க்யம் தஸ்ய காபிலம் பப்ரூர்வக்த்ரோஜ்ஜ்வலகேஸரம் ।
[illegible] தீக்ஷ்ணம் [illegible] ॥
([illegible])

75. ஸாங்கிய சாஸ்திர ஸ்வரூபம்.

(ந்ருசிம்மப்ராசாதத்தில்)

கபில முனிவராலே கூறப்பட்ட ஸாங்கிய சாஸ்திரத்தின் ஸ்வரூபமானது, பப்ரு (பொன்) நிறமாகும். முகமானது, பிரகாசமான குண்டலங்களையுடையதாம். ஜபமாலையையும் தண்டத்தையும் தரிப்பதாகும். தீர்கமான (நீண்ட) வடிவத்தையுடையதாம். நகம், மயிர், ஜடை, இவைகளை தரிப்பதாகும். (கபிலவர்ணம், சிவப்பு அதிகமான மஞ்சள்நிறம்)

௭௬. அத ஸாங்க்யஶாஸ்த்ராபிமாநிகபிலமுநிஸ்வரூபம்.

(ஸாங்க்யஶாஸ்த்ரே மந்த்ராத்யாயே)

உத்யத்ஸூர்யஸமாநதநும் ஸஹஸ்ர
ஸூர்யப்ரகாஶதீப்திவ்யாப்தஸமஸ்தலோகம் ।
ஜ்ஞாநாபயாங்கிதகரம் கபிலம் ப்ரஶாந்தம் (ஶாந்தம்)
ப்ரஹ்மாதிஜாதிஹிதம் ஹ்ருதி பாவயஸ்வ ॥ ௧ ॥
(ரக்தவர்ண:)

76. ஸாங்கிய சாஸ்திராபிமாநி கபிலஸ்வரூபம்.

(ஸாங்கிய சாஸ்திரத்தில் மந்திராத்யாயத்தில்)

உதிக்கின்ற ஸூரியனைப்போன்ற சரீரத்தையுடையவரும், ஆயிரம் ஸூரியனைப்போன்று அதிகமான பிரகாசத்தினாலே ஸகல லோகங்களையும் வியாபித்திருப்பவரும், (பிரகாசிக்கச் செய்கின்றவரும்) ஞ்ஜாந முத்திரையையும் அபயமுத்திரையையும் கைகளில் வஹிப்பவரும், சாந்தமான ஸ்வரூபமுடையவரும், பிரஹ்மா முதலிய கூட்டத்தைக்குறித்து போதிப்பவருமான கபில முனிவரை தியானம் செய்வாயாக. (சிவப்பு நிறம்.)

൭൭. അഥ ചതുഷ്ഷഷ്ടികലാനാം നാമാനി

(ശിവതത്ത്വരത്നാകരേ)

വേദാസ്സർവ്വേ സവേദാങ്ഗാ ഇതിഹാസസ്തഥാഗമഃ ।
ന്യായശാസ്ത്രം തഥാ കാവ്യാലങ്കാരശ്ച നാടകം ॥

കവിത്വം കാമശാസ്ത്രം ച ദ്യൂതേ നൈപുണ്യമിത്യപി ।
ദേശഭാഷാലിപിജ്ഞാനം ലിപിജ്ഞാനം ലിപിക്രിയാ ॥ ൨ ॥

തഥാ സമസ്യാവധാനം സ്വരശാസ്ത്രം ച വാചകം ।
സാമുദ്രികം ച ശകുനം പരീക്ഷാ രത്നസന്തതേഃ ॥ ൩ ॥

തഥാ സ്വർണ്ണപരീക്ഷാ ച തഥാ തുരഗലക്ഷണം ।
ഗജശാസ്ത്രം രഥവിദ്യാ പാകകർമ്മ തതഃ പരം ॥ ൪ ॥

ദശ(വൃക്ഷ)ദോഹദ(ദ)വിദ്യാസ്തു വാദോ ഗന്ധകസംഭവഃ ।
ധാതുവാദഃ ഖനീവാദഃ രസവാദഃ തതഃ പരഃ ॥ ൫ ॥

അഗ്നിസ്തംഭോ ജലസ്തംഭോ ഖഡ്ഗസ്തംഭനമേവ ച ।
വായുസ്തംഭസ്തഥാ വശ്യം മോഹനാകർഷണേ തഥാ ॥

ഉച്ചാടനം ച വിദ്വേഷോ മാരണം കാലവഞ്ചനം ।
വാണിജ്യം പാശുപാല്യം ച കൃഷിരാസവകർമ്മ ച ॥

ലാവ(ച)കാദിയോധനമല്ലയുദ്ധേഷു ചാശേഷ കൗശലം ।
രതികൗശലമാവേധ്യാദൃശ്യകരണീ തഥാ ॥ ൬ ॥

ചിത്രലോഹാശ്മമൃദ്ദാരുവേണുചർമ്മാംബരക്രിയാഃ ।
തഥൈവ ദൃഷ്ടികരണീ ചോരകർമ്മാഞ്ജനം തഥാ ॥

ஃo ஸ்ருளஷயெப்ராஸ்லயமாவிஸிஃ ஸ்லாசஃஜலெஷ்டுப்ரஸ்லா
வஞ்சநெ ।

ஜஶுஷ்லவநவாகவிஸிவாஷிகாவிஜயஸ்லயா ॥ ம ॥

தவெயெவ வாஃகாவிஸிஸிஂஜுஜாஶுஸ்லதஃ வரு ।

விஃப்ராஃஹெஂஜுஜாவெஶுந சதுஷ்ஷஷிஃதா ஜஃ ॥கக॥

(ஸ்ரீவிஷ்ணுஹாமவதெ ம ஸ்லஞெ வஃவஹாமெ சச அயஃயெ ஙகூ ஷ்லொகவ்யாவ்யாநெ ஸ்ரீயஸீயெ, ஶாக்ருநீதள ச அயஃயெ வ ஆகாஶாஞுஞெணாவி ஃஜுஶ்ஹெ ॥)

77. 64 கலைகளின் பெயர்கள்.

(சிவதத்துவ ரத்நாகரம்)

வேதங்கள் 1, வேதாங்கங்கள் 2, இதிஹாஸம் 3, ஆகமம் 4, நியாயசாஸ்திரம் 5, கர்வியம் 6, அலங்கார சாஸ்திரம் 7, நாடகம் 8, கவிதை 9, காமசாஸ்திரம் 10, த்யூகத்தில் (சொக்கட்டான் முதலிய சூதாட்டங்களில்) ஸாமர்த்தியம் 11, பலதேசபாஷைகளைக்கற்பது 12, பலலிபி (எழுத்து) களைக்கற்பது 13, எழுதுவது 14, (ஒரே காலத்தில்) எல்லாவற்றையும் கவனிப்பது 15, ஸ்வர சாஸ்திரம் 16, வாசகம் (வாசிப்பது அல்லது செய்தி சொல்லுவது) 17, ஸாமுத்திரிகலக்ஷணம் 18, சகுநம் 19, ரத்நபரீக்ஷை 20, ஸுவர்ணபரீக்ஷை (மாத்துப்பார்ப்பது)21, அசுவலக்ஷணம் 22, கஜலக்ஷணம் 23, மல்லவித்தியை 24, பாகவித்தியை (சமையல்) 25, தரு(விருக்ஷ)தோஹல (த) வித்தியை (மரங்களை வளர்ப்பது) 26, கந்தகவாதம் 27, தாதுவாதம் 28, கனிவாதம் (சுரங்கங்களைக்கண்டு பிடிப்பது) 29, ரஸவாதம் 30, அக்நி ஸ்தம்பநம் 31, ஜல ஸ்தம்பநம் 32, அஸிஸ்தம்பநம் (அஸி-கத்தி) 33, வாயு

ஸ்தம்பநம் 34, வசியம் 35, மோஹநம் 36, ஆகர்ஷணம் 37, உச்சாடநம் 38, வித்துவேஷணம் 39, மாரணம் 40, காலவஞ்சநம் 41, வியாபாரம் 42, பசுக்களை பரிபாலிப்பது 43, பயிரிடுதல் 44, ஆஸவகர்ம (பானங்களைச் செய்வது) 45, லாவக பக்ஷிச்சண்டையில் ஸாமர்த்தியம் (கோழி முதலியவைகளைச்சண்டைசெய்பத்தயார் செய்யும் திறமை) 46, ஆட்டுக்கடாச்சண்டையில் ஸாமர்த்தியம் 47, ரதி கௌசலம் 48, வேட்டையாடுவது 49, அதிருச்யகரணம் (மறைவது அல்லது மறையச்செய்வது) 50, சித்திரம், லோகம், கருங்கல், மண், மரம், மூங்கில், தோல்கள் அல்லது நாறு, நூல் இவைகளில் செய்யப்படுகின்ற காரியங்கள் (சித்திரம் எழுதுவது, லோஹங்களினுலே வார்ப்புவேலைகள், கற்களில் மூர்த்திகளைக் கல்பிப்பது, மண்ணுல் மூர்த்தி முதலியவைகளைச் செய்வது, மரவேலைகள், மூங்கில் வேலைகள், தோல் அல்லது நாறுகளாலே செய்யப்படும் வேலைகள், நூல்களாலே செய்யப்படும் நெசவு, இவைகள் என்பது பொருள்) 51, சூதாட்டம் 52, சோரகர்மா 53, மை போட்டுப்பார்ப்பது 54, மந்திரஸித்தி 55, ஓஷதிஸித்தி 56, ஸ்வரவஞ்சநம் 57, திருஷ்டிவஞ்சநம் 58, ஜலத்தில் மிதப்பது 59, வாக்ஸித்தி 60, குடிகாஸித்தி 61, பாதுகாஸித்தி 62, இந்திரஜாலம் 63, மஹேந்திரஜாலம் 64 இவைகள் 64 கலைகளாம்.

(ஸ்ரீவிஷ்ணுபாகவதத்தில் 10வது ஸ்கந்தத்தில் பூர்வ பாகத்தில் 45வது அத்தியாயத்தில் 36வது சுலோக வியாக்யாநத்தில் ஸ்ரீதரீயத்திலும், சுக்கிர நீதியில் 4வது அத்தியாயத்திலும், வேறுவிதமாகவும் கூறப்பட்டிருக்கின்றன.)

அத ஸர்வதேவதாஸ்துதி:

(ஶைவாகமே)

௪௮. தத்ராதௌ ஸர்வதேவதாஸ்துதி:

த்யாயேத்க்ஷ்மாம் ஶுக்லவர்ணாபாம் திவ்யாபரண
பூஷிதாம் ।
சதுர்புஜாம் ஸௌம்யரூபாம் சண்டாம்ஶு
ஸத்ருஶாம்பராம் ॥ ௧ ॥

அதஶ்சோர்த்வம் ரத்னபாத்ரம் கராப்யாம் ஸஸ்யபாஜனம் ।
தக்ஷிணாப்யாம் ததா வாமகராப்யாம் ஸரஸீருஹம் ॥
ஓஷதீபரிதம் பாத்ரம் ததானாம் ஸர்வதோம்புஜாம் ।
திக்கஜானாம் சதுர்ணாம் ச ப்ருஷ்டாரூடாம்
சதுர்புஜாம் ॥ ௨ ॥

ஸர்வஸஸ்யாஶ்ரயாம் ஶாந்த்ராம் ஸத்தேவீம்
ஶரணம் பஜே ।
(ஶாஸ்த்ர, வர்ணா)

பஞ்சபூதஸ்வரூபங்கள்.

(சைவாகமம்)

78. அவைகளில் முதலில் பிருதிவீதேவதாஸ்வரூபம்.

வெளுப்பு நிறமுடையவளும், திவ்யாபரணங்களை அணிந்திருப்பவளும், 4 கைகளையுடையவளும், அழகான சாந்தமான சரீரத்தையுடையவளும், ஸூரியனைப்போன்ற ஆடையையணிந்திருப்பவளுமான பூமிதேவியை தியானம் செய்யவேண்டும்.

வலது பக்கத்திலிருக்கின்ற கீழ்க்கை மேல்கை இவைகளில் முறையே ரத்நபாத்திரம்–ஸஸ்யபாத்திரம் (பயிர் நிறைந்த அல்லது தானியம் நிறைந்த பாத்திரம்) இவைகளை தரிப்பவளும், இடது பக்கம் கைகளில் பத்மம்–ஓஷதிகள் நிறைந்த பாத்திரம் இவைகளை வஹிப்பவளும், அழகான முகபத்மத்தையுடையவளும், 4 திக்கஜங்களின் முதுகின்

மீது வீற்றிருப்பவளும், 4 கைகளுடையவளும், ஸகலவித மான பயிர்களுக்குமிருப்பிடமானவளும், வெளுப்பு நிறமுடையவளுமான பூமிதேவியை சரணமாக பஜிக் கின்றேன். (வெளுப்பு நிறம்.)

௭௮. 𑌅𑌥𑌾𑌪𑍍𑌦𑍇𑌵𑌤𑌾𑌸𑍍𑌵𑌰𑍂𑌪𑌮𑍍.

𑌸𑍍𑌫𑌟𑌿𑌕𑌪𑍍𑌰𑌤𑌿𑌸𑌂𑌕𑌾𑌶𑌾 𑌲𑍋𑌕𑌸𑌂𑌜𑍀𑌵𑌨𑍀𑌃 𑌶𑍁𑌭𑌾𑌃 ।
𑌮𑌾𑌧𑍁𑌰𑍍𑌯𑌗𑍁𑌣𑌸𑌂𑌯𑍁𑌕𑍍𑌤𑌾𑌃 𑌸𑌰𑍍𑌵𑌾𑌲𑌂𑌕𑌾𑌰𑌶𑍋𑌭𑌿𑌤𑌾𑌃 ॥

𑌸𑍍𑌤𑍍𑌰𑍀𑌰𑍂𑌪𑌧𑌾𑌰𑌿𑌣𑍀𑌃 𑌶𑍍𑌵𑍇𑌤𑌾𑌃 𑌦𑍍𑌵𑌿𑌭𑍁𑌜𑍈𑌶𑍍𑌚 𑌵𑌿𑌰𑌾𑌜𑌿𑌤𑌾𑌃 ।
𑌧𑍍𑌯𑌾𑌤𑌾𑌃 𑌪𑌾𑌶𑌕𑌲𑌶𑌾 𑌸𑌦𑌾 𑌮𑌕𑌰𑌵𑌾𑌹𑌨𑌾𑌃 ॥ ௨ ॥

𑌮𑍁𑌕𑍍𑌤𑌾𑌹𑌾𑌰𑌵𑌿𑌭𑍂𑌷𑌿𑌤𑌸𑌰𑍍𑌵𑌾𑌙𑍍𑌗𑌾𑌃 𑌸𑌹𑌰𑍍𑌷𑌂 𑌚𑌿𑌨𑍍𑌤𑌯𑍇𑌦𑍍𑌬𑍁𑌧𑌾 ।
(𑌶𑍌𑌨𑌕𑌵𑌚𑌨𑌾𑌤𑍍)

79. அப்தேவதைகளின் ஸ்வரூபம்.

கண்ணாடியைப்போன்ற காந்தியையுடையவர்களும், உலகங்களை (ஜீவராசிகளை) ஜீவித்திருக்கும்படி செய்கின்ற வர்களும், மங்களகரமான குணமுடையவர்களும், இனிமை யான குணமுடையவர்களும், ஸகல ஆபரணங்களுடன் சோபிப்பவர்களும், ஸ்திரீரூபத்தை தரித்திருப்பவர்களும், வெண்மையான நிறமுடையவர்களும், 2 கைகளுட னிருப்பவர்களும், பாசம், கலசங்களை தரித்திருப்பவர்களும் எப்பொழுதும் மகரவாஹனத்தின் மீது வீற்றிருப்பவர்களும், ஸகல அங்கங்களிலும் முத்துக்களையணிந்திருப்பவர் களுமான அப்தேவதைகளை, ஸந்தோஷமாக தியானம் செய்யவேண்டும். (வெளுப்பு நிறம்)

௮௰. 𑌅𑌥 𑌤𑍇𑌜𑍋𑌦𑍇𑌵𑌤𑌾𑌸𑍍𑌵𑌰𑍂𑌪𑌮𑍍.

𑌵𑌹𑍍𑌨𑌿𑌂 𑌸𑍁𑌵𑌰𑍍𑌣𑌵𑌰𑍍𑌣𑌾𑌙𑍍𑌗𑌂 𑌸𑌤𑍍𑌵𑌾𑌧𑌿𑌪𑍁𑌰𑍁𑌷𑌾𑌸𑌨𑌮𑍍 ।

தோஷாபேதம் ஸப்தஹஸ்தம் ஸ்வாஹாதேவீஸமந்விதம் ।
சக்த்யாத்யாயுதஸம்பந்நஹஸ்தம் த்யாயேத்தவ்யவாஹநம் ॥

(கநகவர்ண:)

80. தேஜோதேவதா ஸ்வரூபம்.

ஸுவர்ணம்போன்ற நிறமுடைய சரீரத்தையுடையவரும், 7 தீச்சுடர்களையுடையவரும், ரோகம் அல்லது குற்றம் அற்றவரும், ஆட்டு வாஹநத்தில் வீற்றிருப்பவரும், 7 கைகளையுடையவரும், ஸ்வாஹாதேவியுடனிருப்பவரும், சக்தி முதலிய ஆயுதங்களுடன்கூடிய கைகளையுடையவருமான அக்நிதேவனை த்யாநம் செய்கின்றேன். (தங்கநிறம்)

அக. அத வாயுதேவதாஸ்வரூபம்.

தாவத்ஹரிணாரூடம் த்விபுஜம் த்வஜதாரிணம் ।
வரதாநகரம் தூம்ரவர்ணம் வாயுதேவம் பஜே ॥

(தூம்ரவர்ண:)

81. வாயுதேவதா ஸ்வரூபம்.

ஓடிக்கொண்டிருக்கின்ற மானின்மீது வீற்றிருப்பவரும், 2 கைகளுடையவரும், துவஜத்தை தரிப்பவரும், வரதஹஸ்தத்தையுடையவரும், புகை நிறமாக இருப்பவருமான வாயுதேவதையை நான் ஸேவிக்கின்றேன். (புகை நிறம்.)

அஉ. அத ஆகாசதேவதாஸ்வரூபம்.

த்யாயாமி ககநம் நீலம் நீலாம்பரதரம் விபும் ।
சந்த்ராகருஷஹஸ்தம் த்விபுஜம் ஸர்வாபரணபூஷிதம் ॥

(நீலவர்ண:)

82. ஆகாசதேவதாஸ்வரூபம்.

நீலநிறமுடையதும், நீலவஸ்திரத்தை தரிப்பதும், எங்கும் நிறைந்திருப்பதும், சந்திரன் ஸூரியன்களைக் கைகளிலுடையதும், 2 கைகளையுடையதும், ஸகல ஆபரணங்களையுமணிந்திருப்பதுமான ஆகாசதேவதையை தியானம் செய்கின்றேன். (நீலநிறம்.)

𑌅𑌥 𑌦𑌶𑌦𑌿𑌗𑍍𑌧𑍍𑌯𑌾𑌨𑌮𑍍.

(𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌪𑍍𑌰𑌸𑌾𑌦𑍇)

௮௫. 𑌤𑌤𑍍𑌰𑌾𑌦𑍌 𑌪𑍂𑌰𑍍𑌵𑌦𑌿𑌗𑍍𑌧𑍍𑌯𑌾𑌨𑌮𑍍.

𑌪𑍂𑌰𑍍𑌵𑌾 𑌗𑌜𑌗𑌤𑌾 𑌬𑌾𑌲𑌾 𑌰𑌕𑍍𑌤𑌵𑌰𑍍𑌣𑌾 𑌹𑌿
𑌦𑌿𑌗𑍍𑌭𑌵𑍇𑌤𑍍 ।

(𑌰𑌕𑍍𑌤𑌵𑌰𑍍𑌣𑌾)

பத்து திக்குகளின் ஸ்வரூபம்:

(நிருசிம்ஹபிராஸாதத்தில்)

83. அவைகளில் முதலில் பூர்வதிக்கு ஸ்வரூபம்.

கிழக்கு திக்கின் தேவதையானவள், கஜவாஹநத்தின் மீது வீற்றிருப்பவளும், பால்யப்பருவமுடையவளும், சிவப்பு நிறமுடையவளுமாவாள். (சிவப்புநிறம்.)

௮௬. 𑌅𑌥 𑌆𑌗𑍍𑌨𑍇𑌯𑌦𑌿𑌗𑍍𑌧𑍍𑌯𑌾𑌨𑌮𑍍.

𑌕𑌾𑌰𑌣𑍍𑌡𑌗𑌾 𑌬𑍃𑌹𑌤𑍍𑌕𑌾𑌯𑌾 𑌧𑍂𑌮𑍍𑌰𑌾𑌭𑌾 𑌪𑍂𑌰𑍍𑌵-
𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑌾 ।

(𑌧𑍂𑌮𑍍𑌰𑌵𑌰𑍍𑌣𑌾)

84. ஆக்நேயதிக்கு ஸ்வரூபம்.

அக்கினிதிக்கு தேவதையானவள் காரண்டபக்ஷி (நீர்க்

கோழி) வாஹநத்தின் மீதிருப்பவளும், பருத்த சரீரமுடையவளுமாவாள். (பத்ம வர்ணம்)

௮௫. அத தக்ஷிணதிக்தேவதா ஸ்வரூபம்.

மஹிஷஸ்தா தக்ஷிணா பீதா மஹிஷாஸ்யா
ப்ராப்தயௌவநா ॥
(பீதவர்ணா)

85. தக்ஷிண திக்தேவதா ஸ்வரூபம்.

தக்ஷிண திக்கு தேவதையானவள், எருமை வாஹநத்தின் மீது வீற்றிருப்பவளும், மஞ்சள் நிறமாக இருப்பவளும், எருமை முகமுடையவளும், யௌவனப் பருவத்தையடைந்திருப்பவளுமாவாள். (மஞ்சள் நிறம்)

௮௬. அத நைர்ருதிதிக்தேவதா ஸ்வரூபம்.

உஷ்ட்ரகா க்ருஷ்ணபீதா ச தருணீ யாம்யபச்சிமா ॥
(ஹரிதவர்ணா)

86. நைர்ருதிதேவதா ஸ்வரூபம்.

தென்மேற்கு திசையின் தேவதையானவள் ஒட்டகை வாஹநத்தின் மீதிருப்பவளும், கருப்புக்கலந்த மஞ்சள் நிறமாக இருப்பவளும், தருணியின் பருவமுடையவளுமாவாள். (பச்சை நிறம்)

௮௭. அத பச்சிமதிக்தேவதா ஸ்வரூபம்.

யுவதிः த்விபுஜா க்ருஷ்ணா பச்சிமா பாசஹஸ்திகா ॥
க்ருஷ்ணவர்ணா)

87. மேற்கு திக்கு தேவதையின் ஸ்வரூபம்.

மேற்கு திக்கு தேவதையானவள் யுவதியும், இரண்டு

கைகளுடையவளும், கருப்பு நிறமாக இருப்பவளும், குதிரை வாஹனத்திலிருப்பவளுமாவாள். (கருப்பு நிறம்)

அஅ. அத வாயவ்யதிக் ஸ்வரூபம்.

க்ருஷ்ணவதிகா நீலா யக்ஷவக்த்ர நதத்வரா ॥

(நீலவர்ணா)

88. வாயுதிக்கு தேவதாஸ்வரூபம்.

வாயுதிக்கு தேவதையானவள், பக்கத்தில் கணவனை யுடையவளும், நீலநிறமாக இருப்பவளும், வில்லை வைத்துக் கொண்டு வாசிப்பதிலாவலுள்ளவளுமாவாள். (நீலநிறம்.)

அகூ. அத உத்தரதிக் ஸ்வரூபம்.

ஶ்வேதாநநா ததா ரக்தா க்ருத்தா பவதி சோத்தரா ॥

(ரக்தவர்ணா)

89. உத்தரதிக்கு தேவதாஸ்வரூபம்.

வடதிசையின் தேவதையானவள், வெளுப்பு முகமும், சிவப்பு நிறமான சரீரமும், கோபமுமுடையவளாவாள். (சிவப்புநிறம்.)

கூ௦. அத ஈசாநதிக் ஸ்வரூபம்.

அதிவ்ருத்தா வ்ருஷஸ்தா ச ஶாந்தா ஐஶாநதிக் ததா

பவேத் ।

(ஶ்வேதவர்ணா)

90. ஈசானதிக்கு தேவதாஸ்வரூபம்.

26 ஈசானதிக்கு தேவதையானவள், அதிவ்ருத்தை (மிகக் கிழவி)யும், விருஷபவாஹனத்திலிருப்பவளும், வெளுப்பு நிறமுடையவளுமாவாள். (வெளுப்பு நிறம்)

௯௧. அத² ஊர்த்⁴வதி³க்³தே³வதா த்⁴யானம்.

ஊர்த்⁴வா க³க³னஸங்காஶா (நீலவர்ணா)

91. ஊர்த்துவதிக்கு தேவதா ஸ்வரூபம்.

ஊர்த்துவதிக்கின் தேவதையானவள் ஆகாசத்தைப் போலிருப்பவளாவாள். (நீலநிறம்.)

௯௨. அத² அதோ⁴தி³க்³தே³வதா த்⁴யானம்.

அத⁴ஸ்தா பருதி²வீரூபா ‖ (ஶ்வேதவர்ணா)

92. அதோதிக்கு தேவதாஸ்வரூபம்.

அதோதிக்கின் தேவதையானவள், பூமியை(பூதேவியை) போன்றவளாவாள். (வெளுப்பு நிறம்)

௯௩. அத² அஷ்டநாக³த்⁴யானானி.

(ருத்³ரஸம்ஹிதாயாம்)

அனந்தோ வாஸுகிஶ்சைவ தக்ஷக: கர்கோடகஸ்ததா² |
மஹாபத்³மஶ்ச ஶங்க²ஶ்ச கா(கு³)ளிகோஷ்டௌ ச நாகா இமே ‖
அனந்தகா(கு³)ளிகௌ விப்ரௌ ஶ்வேதவர்ணாவுதா³ஹ்ருதௌ |
ப்ரத்யேகம் து ஸஹஸ்ராஷ்டஃபணைர்யுதௌ ஸமலங்க்ருதௌ ‖ ௨ ‖
வாஸுகிஶ்ஶங்க²பாலஶ்ச க்ஷத்ரியௌ ரக்தவர்ணகௌ |
ப்ரத்யேகம் து ஃபணாஸப்தஶதஸம்ப்ரவிராஜிதௌ ‖
தக்ஷகஶ்ச மஹாபத்³மோ வைஶ்யஜாதாவுதா³ஹ்ருதௌ |
பீதவர்ணௌ ஃபணை: பஞ்சஶதைஶ்சைவ ஶோபி⁴தௌ ‖ ௪ ‖

வஜ்ரகூடாநுகாநி லாங்கூல நீலவர்ணாநி வாமா
ஸ்யாதகல ।
ஷண்ணாகரூ பதகாநி ஜ்ஞேயாநி விப்ராதாவிதி தத்வத: ॥

93. அஷ்டநாக ஸ்வரூபங்கள்.

(நிருசிம்மபிராஸாதத்தில்)

அநந்தன் 1, வாஸுகி 2, தக்ஷகன் 3, கார்கோடகன் 4, பத்மன் 5, மஹாபத்மன் 6, சங்கன் 7, குளிகன் 8, இவர்கள் அஷ்டநாகர்களாம்.

இவர்களின் குலங்களாவன: அநந்தன் குளிகன் இவ்விருவரும் பிராம்ஹண ஜாதியாம். வெளுப்பு நிறமுடையவர்களென்று கூறப்பட்டிருக்கிறது. இவர்களில் ஒவ்வொருவரும் 1008 ஆயிரத்தெட்டு படங்களுடையவர்களாவார்கள்.

வாஸுகி, சங்கபாலன் இவ்விருவரும் க்ஷத்திரியஜாதி. சிவப்பு நிறமானவர்கள். ஒவ்வொருவரும் 700 எழுநூறு படங்களுடையவர்களாவார்கள்.

தக்ஷகன் மஹாபத்மன், இவ்விருவரும் வைசியஜாதி, என்று கூறப்பட்டிருக்கின்றது. மஞ்சள் நிறமானவர்கள். 500 ஐந்நூறு தலைகளுடையவர்களாவார்கள்.

பத்மன், கார்கோடகன் இவ்விருவரும் சூத்திரஜாதியாவார்கள். நீலநிறமானவர்கள். என்று கூறப்பட்டிருக்கின்றது. 300 முந்நூறு படங்களையுடையவர்கள். இந்த உண்மையை அறிந்துகொள்ளவேண்டும்.

௯௪. க்ஷய க்ஷேத்ரபாலஸ்வரூபாணி.

(ஈஶ்வர ஸூத்ரயவர்ணனோ)

பூர்வாஹ்ணே வதனபூர்ஷ: ஶ்ரீகாலபைரவதோ ப்ரஜ: ।

[illegible] ॥

[illegible] ।

ஆக்நேயபுராணே நாமாநி —

[illegible] ।

[illegible] அஷ்டதிக்கஜா: ॥

94. அஷ்டதிக்கஜ ஸ்வரூபங்கள்

([illegible]த்திலும் ஆக்நேய புராணத்திலும்)

பெருமைவாய்ந்த ஐராவதமென்ற கஜமானது, வெளுப்பு நிறமும் 4 தந்தங்களுமுடையதாம்.

புஷ்பதந்தமானது பருத்துப் பச்சை நிறமும், 6 தந்தங்களும், புஷ்பங்களுடன் கூடிய தந்தங்களையுடையதமாகும்.

மற்ற திக்கஜங்கள் யாவும் ஸாதாரணமான கஜங்களைப் போன்றவைகளேயாம். என்று கூறப்பட்டிருக்கிறது.

ஆக்நேய புராணத்தில் திக்கஜங்களின் பெயர்கள்—

ஐராவதம் 1, புண்டரீகம் 2, வாமநம் 3, குமுதம் 4, அஞ்ஜநம் 5, புஷ்பதந்தம் 6, ஸார்வபௌமம் 7, ஸுப்ரதீகம் 8 இவைகள் அஷ்ட நாகங்களாம்.

௯௫. அத அஷ்டதிக்கஜபத்நீநாம் நாமாநி.

(ஆக்நேயபுராணே)

[illegible] ।

[illegible] ॥

95. அஷ்டதிக்கஜ பத்நிகளின் பெயர்கள்

(ஆக்நேய புராணத்தில்)

அஷ்டதிக்கஜங்களின் பிடிகளின் பெயர்கள், முறையே, அப்பிரமு 1, கபிலை 2, பிங்களை 3, அநுபமை 4, தாமிரபர்ணி 5, ஸுதந்தி 6, அஞ்ஜனை 7, அஞ்ஜனாவதி 8 என்பவைகளாம்.

அத அஷ்டதிக்கஜாநாம் த்யாநம்.

௯௫ தத்ராதௌ ஐந்த்ர த்யாநம்.

(பட்டபாஸ்கரீயே)

இந்த்ரம் ஸஹஸ்ரநேத்ரம் ச பீதவர்ணம்
சதுர்புஜம் ।
அபயம் தக்ஷிணே ஹஸ்தே வரதம் வாமஹஸ்தகே ॥ ௧ ॥
குலிஶம் தக்ஷிணே ஹஸ்தே ஹ்யங்குஶம் ச
ததேதரே ।
ரத்நகௌஸ்துபமாணிக்யதிவ்யாபரணபூஷிதம் ॥ ௨ ॥
குண்டலம் யஜ்ஞஸூத்ரம் ச ததாநம் திவ்யதேஜஸம் ।
ஐராவதகஜாரூடம் ஶசீகாந்தம் நமாம்யஹம் ॥ ௩ ॥
(ஹேமவர்ண:)

அஷ்ட திக் பாலகர்களின் த்யாநம்.

96. அவைகளுள் முதலில் இந்திர த்யாநம்.

(பட்ட பாஸ்கரீயத்தில்)

ஆயிரம் கண்களையுடையவனும், மஞ்சள் நிறமுள்ளவனும், 4 கைகளையுடையவனும், வலது கையில் அபயமும் இடது கையில் வரதமும், வலது கையில் வஜ்ஜிராயுதமும் இடது கையில் அங்குசமும் தரிப்பவனும், ரத்நங்கள், கௌஸ்துபம், மாணிக்கம் இவைகளாலான ஆபரணங்களை யணிந்திருப்பவனும், குண்டலம், யஜ்ஞோபவீதம் இவை

கலையணிந்திருப்பவனும், திவ்விய தேஜஸ்ஸுடன் விளங்குகின்றவனும், ஐராவதமெனப்படும் யானையின் மீது வீற்றிருப்பவனும், சசீதேவியின் கணவனுமான இந்திரனை நான் நமஸ்கரிக்கின்றேன். (மஞ்சள் நிறம்)

௯௬. அத அக்நி த்யாநம்.

(ஸிம்ஹபட்டியே பூர்வபாகே)

ஸப்தஹஸ்தஶ்சதுஶ்ஶ்ருங்க: ஸப்தஜிஹ்வோ த்விஶீர்ஷக: ।
த்ரிபாத் ப்ரஸந்நவதந: ஸுகாஸீந: ஶுசிஸ்மித: ॥

ஸ்வாஹாம் து தக்ஷிணே பார்ஶ்வே தேவீம் வாமே
ஸ்வதாம் ததா ।
பிப்ரத் தக்ஷிணஹஸ்தைஸ்து ஶக்திமந்நம் ஸ்ருவம்
ஸ்ருவம் ॥ ௨ ॥

தோமரம் வ்யஜநம் வாமே க்ருதபாத்ரம் ச தாரயந் ।
மேஷாரூடம் ஜடாபத்தம் கௌர(ரக்த)வர்ணம்
மஹௌஜஸம் ॥ ௩ ॥

தூம்ரத்வஜம் லோஹிதாக்ஷம் ஸப்தார்ச்சிஷமநாமயம் ।
ஸ்ருக்தாபிர்வகாஸீநமேவம் த்யாயேத் ஹுதாஶநம் ॥
(ரக்தவர்ண:)

97. அக்நிதேவ த்யாநம்.

(ஸிங்காபட்டியத்தில் பூர்வபாகத்தில்)

அக்நிதேவனனவர், 7 கைகளும் 4 கொம்புகளும், 7 நாக்குகளும், 2 தலைகளும், 3 கால்களுமுடையவராவார். தெளிந்த முகமுடையவராவார். ஸுகாஸநத்திலிருப்பவராவார். அழகான மந்தஹாஸத்துடன் இருப்பவராவார். அல்லது தீச்சுடருடன்கூடிய புன்சிரிப்புடையவராவார்.

வலது பக்கத்தில் ஸ்வாஹா தேவியையும், இடது பக்கத்தில் ஸ்வதா தேவியையும் வஹிப்பவராவார். வலது பக்கத்தில் உள்ள 4 கைகளில் சக்தியாயுதம் 1, அங்கம் 2, ஸ்ருக்கு 3, ஸ்ருவம் 4 இவைகளையும் இடதுபக்கத்திலுள்ள 3 கைகளில் தோமரம், விசிறி, நெய்பாத்திரம் இவைகளையும் வஹிப்பவராவார்.

ஆட்டுக்கடாவாஹநத்திலிருப்பவரும், ஜடாபந்தத்தை தரிப்பவரும், பயங்கரமான (சிவப்பு) நிறமுடையவரும், பருத்த வயிறுடையவரும், புகையை துவஜமாக உடையவரும், சிவந்த கண்களையுடையவரும், 7 ஜ்வாலை (தீச்சுடர்) களையுடையவரும், குற்றமற்றவரும் அல்லது வியாதி இல்லாதவரும், தனக்கெதிரில் உட்கார்ந்திருப்பவருமான அக்நிதேவரை இவ்விதமாக த்யாநம் செய்ய வேண்டும். (சிவப்பு நிறம்)

௯௮. 𑌅𑌥 𑌯𑌮𑌧𑍍𑌯𑌾𑌨𑌮𑍍.

(𑌶𑍈𑌵𑌾𑌗𑌮𑍇 𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌪𑍁𑌰𑌾𑌣𑍇 𑌚)

𑌕𑌰𑌾𑌲𑌮𑌹𑌿𑌷𑌾𑌰𑍂𑌢𑌂 𑌕𑌾𑌲𑌦𑌣𑍍𑌡𑌧𑌰𑌂 𑌵𑌿𑌭𑍁𑌃 ।
𑌶𑍍𑌯𑌾𑌮𑌵𑌰𑍍𑌣𑌂 𑌪𑌾𑌶𑌹𑌸𑍍𑌤𑌂 𑌕𑍃𑌤𑌾𑌨𑍍𑌤𑌂 𑌪𑍍𑌰𑌣𑌮𑌾𑌮𑍍𑌯𑌹𑌮𑍍 ॥
𑌊𑌰𑍍𑌧𑍍𑌵𑌾𑌸𑍍𑌯𑍋 𑌦𑌣𑍍𑌡𑌧𑌰𑍋 𑌯𑌮𑍋 𑌮𑌹𑌿𑌷𑌵𑌾𑌹𑌨𑌃 ।
𑌰𑌕𑍍𑌤(𑌶𑍍𑌯𑌾𑌮)𑌵𑌰𑍍𑌣𑍋 𑌹𑌿 𑌲𑍋𑌕𑌾𑌨𑌾𑌂 𑌸𑍍𑌵𑌸𑍍𑌵𑌕𑌰𑍍𑌮𑌫𑌲𑌪𑍍𑌰𑌦𑌃 ॥

(𑌶𑍍𑌯𑌾𑌮𑌵𑌰𑍍𑌣𑌃)

98. யம த்யாநம்.

(சைவாகமத்திலும் ந்ருஸிம்ஹ பிராணத்திலும்)

பயங்கரமான மஹிஷ வாஹநத்தின்மீது வீற்றிருப்பவனும், காலதண்டத்தை தரிப்பவனும், நீலநிறமாக இருப்பவனும், காலபாசத்தை கையில் வைத்துக்கொண்டு இருப்பவனுமான யமனை வணங்குகின்றேன்.

